الدروس اليومية ـ تاميلي

# தினசரிப் பாடங்கள்



جمعية الدعوة بالزلفي

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي

61

هاتف: ٤٢٣٤٤٦٦ ٠١٦ ـ فاكس: ٤٢٣٤٤٧٧ ٠١٦

# தினசரிப் பாடங்கள்

## الدروس اليومية

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات في الزلفي
Tel: 966 164234466 - Fax: 966 164234477

# الدروس اليومية

**أعده وترجمه إلى اللغة التاميلية:**

**جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالزلفي**

**الطبعة الرابعة: ١٤٤٢/٨ هـ.**

**ح شعبة توعية الجاليات بالزلفي، ١٤٢١هـ**

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

**شعبة توعية الجاليات بالزلفي**

الدروس اليومية – الزلفي
١٤٤ ص؛ ١٢ × ١٧ سم
ردمك : ٢- ٠٢ - ٨٦٤ -٩٩٦٠
(النص باللغة التاميلية )
١- الإسلام - مبادىء عامة أ. العنوان
ديوي ٢١١ ٢١/٤٣٧٢

رقم الإيداع : ٢١/٤٣٧٢

ردمك : ٢- ٠٢ - ٨١٤ -٩٩٦٠

# الدروس اليومية
# தினசரிப் பாடங்கள்

## 1. நேரங்களைப் பேணுதல்

"இரண்டு பாக்கியங்கள் விஷயத்தில் பெரும்பாலான மக்கள் அலட்சியமாய் இருக்கின்றனர். அவை ஆரோக்கியமும் ஓய்வுமாகும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி),நூல்: புகாரி(6412)

"ரமலானின் கடைசிப் பத்து நாட்கள் வந்துவிட்டால் நபி (ஸல்)அவர்கள் வரிந்துகட்டிக்கொண்டு இரவு நேரங்களை (வழிபாடுகளால்)உயிர்ப்பிப்பார்கள். தம் குடும்பத்தினரையும் இரவில் விழிக்கச் செய்வார்கள்."

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), புகாரி(2024),முஸ்லிம்(1174)

"வாழ்நாளை எப்படிக் கழித்தான்? வாலிபத்தை எதில் ஈடுபடுத்தினான்? செல்வத்தை எப்படி சம்பாதித்து, எவ்வழியில் செலவு செய்தான்? கற்றவைகளில் எதைச் செயல்படுத் தினான்? என ஐந்து விஷயங்கள் பற்றி விசாரிக்கப்படாத வரை மறுமை நாளில் எந்த மனிதனின் பாதமும் தன் இறைவனிட மிருந்து நகர முடியாது" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரலி), நூல்: திர்மிதி(2416)

"(பயணம் செய்யும்) யாரேனும் (கொள்ளையர்களை) அஞ்சினால் முன்னிரவிலேயே பயணத்தை மேற்கொள்ளட்டும். யார் முன்னிரவில் பயணம் செய்கிறாரோ அவர் இலக்கை அடைகின்றார். அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் பொருள் மதிப்புமிக்கதாகும். அறிந்து கொள்ளுங்கள்!

அல்லாஹ்வின் பொருள் சொர்க்கமாகும்!" என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), திர்மிதி(2450)

**பயன்கள்:**

1. பயனுள்ள வழிகளில் நேரங்களைப் பேணுவது அவசியம்.
2. மனிதன் தன் நேரங்கள் பற்றி விசாரிக்கப்படுவான்.
3. பெரும்பாலோர் நேரத்தை வீணடிக்கிறார்கள் அதை அலட்சியம் செய்கிறார்கள்.

## 2. தாயத்து அணிவதன் சட்டம்

(நபியே! இவர்களிடம்) நீர் கேளும்! அல்லாஹ்வையன்றி நீங்கள் பிரார்த்திப்பவை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அல்லாஹ் எனக்கு ஒரு தீங்கை நாடினால் அவனது தீங்கை அவை நீக்கிவிடுமா? அல்லது அவன் எனக்கு அருளை நாடினால் அவை அவனது அருளைத் தடுக்கக்கூடியவை களா? (இவர்களிடம்) நீர் கூறிவிடும்! எனக்கு அல்லாஹ்வே போதுமானவன், நம்பிக்கை (தவக்குல்) வைப்பவர்கள் அவன் மீதே நம்பிக்கை வைப்பார்கள். (39:38)

"யார் தாயத்து அணிந்து கொண்டாரோ அவருக்கு அல்லாஹ் நிறைவைத் தரமாட்டான்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில் "தாயத்து அணிந்து கொண்டவர் இணைவைத்துவிட்டார்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதாக உள்ளது. அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர்(ரலி), நூல்: அஹ்மத்(16951,18304)

"யார் எதையேனும் தொங்கவிட்டுக்கொள்கிறாரோ அவர் (இறை உதவியின்றி) அதன் பொறுப்பில் விடப்படுவார்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ்

பின் ஹகீம்(ரலி), நூல்: திர்மிதி(2072)

"மந்திரிப்பது, தாயத்துகள் அணிவது, தலையணை மந்திரம் ஆகியவை ஷிர்க்காகும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி)

**பயன்கள்:**

1. தாயத்து அணிபவர் அதற்கு நன்மை, தீமை அளிக்கக் கூடிய சக்தி உண்டு என்ற நம்பிக்கையில் அணிந்து கொண்டால் அவர் பெரிய இணைவைப்பைச் செய்துவிட்டார். காரணம் அல்லாஹ் அல்லாதவற்றுக்கு நன்மை, தீமை அளிக் கக்கூடிய சக்தி இருப்பதாக நம்புகிறார். ஆனால் நன்மை, தீமைக்கு அது ஒரு காரணம் மட்டுமே என்று நம்பினால் அவர் சிறிய இணைவைப்பைச் செய்து விட்டார்.

2. தாயத்து குர்ஆனில் உள்ளதாக இருந்தாலும் அதை அணிவது கூடாது. ஏனெனில் நபித்தோழர்கள் அவ்வாறு செய்ததில்லை. மேலும் குர்ஆனில் இல்லாததைக் கொண்டும் தாயத்து அணிவதற்கு அது ஒரு காரணமாக அமைந்துவிடும். மேலும் குர்ஆனை இழிவாகக் கருதும் நிலையும் இதனால் ஏற்படும்.

3. கண்ணேருக்காக வாகனத்தில் சிறிய துணிபோன்றதைக் கட்டித் தொங்கவிடுவதும் திருக்குர்ஆனை வைப்பதும் இந்த வகையைச் சார்ந்ததுதான்.

## 3. ஜோதிடன், குறிகாரன், சாஸ்திரம் பார்ப்பவன் ஆகியோரிடம் செல்வது

அல்லாஹ்வைத் தவிர வானங்களிலும் பூமியிலுமுள்ள எவரும் மறைவானவற்றை அறியமாட்டார் என்று (நபியே! அவர்களிடம்) கூறும் (27:65)

"யாரேனும் குறிகாரனிடம் சென்று எதாவது ஒரு விஷயத்தைக் கேட்டால் அவரது 40 நாட்கள் தொழுகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: நபியின் மனைவியரில் ஒருவர், முஸ்லிம்(2230)

"யாரேனும் ஜோதிடரிடம் சென்று அவன் கூறுவதை நம்பினால் அல்லது மாதவிடாய் ஏற்பட்டுள்ள தன் மனைவியிடம் கூடினால் அல்லது தனது மனைவியின் பின்துவாரத்தில் உடலுறவு கொண்டால் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு இறக்கி அருளப்பட்ட வேதத்தை விட்டும் அவர் விலகிக் கொண்டார்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: அபூதாவூத்(3904)

மக்கள் நபி(ஸல்)அவர்களிடம் ஜோதிடர் பற்றி வினவினர். அதற்கவர்கள், "அது ஒன்றுமில்லை" என்று கூறினார்கள். "சில சந்தர்ப்பங்களில் அவர்கள் சொல்வது உண்மையாகிவிடுகின்றதே?" என்று மக்கள் கேட்டதும், "அந்த உண்மை எவ்வாறெனில் ஜின் அதை (வானிலிருந்து) ஒட்டுக்கேட்டு தமது சகாக்களின் காதுகளில் போட்டு விடுகின்றது பிறகு அவை அத்துடன் நூறு பொய்களைக் கலந்து (ஜோதிடர்களிடம் சேர்த்து) விடுகின்றன" என்று நபி(ஸல்) பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), புகாரி(5762),முஸ்லிம்(2228)

**பயன்கள்:**

1. ஜோதிடர்கள், குறிகாரர்களிடம் செல்வது ஹராமாகும்.

2. இவர்கள் ஒரே ஒரு உண்மையை மட்டும் தெரிந்து கொண்டு அதில் நூறு பொய்களைக் கலந்துவிடுகின்றனர்.

3. கைரேகை பார்ப்பது, பீங்கானில் எழுதி கரைத்துக் குடிப்பது, ராசிபலன் பார்ப்பது அனைத்தும் குறிபார்ப்பது மற்றும் வானசாஸ்திரம் பார்ப்பதில் அடங்கும்.

## 4. சூனியம் பற்றி எச்சரிக்கை

அவர்கள் சுலைமானுடைய ஆட்சியின்போது ஷைத்தான் கள் ஓதியவற்றையே பின்பற்றினார்கள். ஆனால் சுலைமான் ஒருபோதும் நிராகரிப்பவர் அல்லர். ஷைத்தான்கள் தாம் நிராகரிப்பவர்கள்.அவர்கள்தாம் மனிதர்களுக்கு சூனியத்தைக் கற்றுக்கொடுத்தார்கள்.மேலும் பாபிலோனில் ஹாரூத்,மாரூத் என்ற இரு வானவர்களுக்கும் இறக்கி வைக்கப்பட்டதையும் அவர்கள் பின்பற்றினார்கள்.

ஆனால் அவ்விருவரும் “நாங்கள் சோதனையாக இருக் கிறோம்(இதைக் கற்று) நீங்கள் கா.ஃபிராகிவிடாதீர்கள்” என்று சொல்லி எச்சரிக்காதவரையில் எவருக்கும்(அந்த சூனியத்தை) கற்றுக்கொடுப்பதில்லை. அப்படி இருந்தும் அவர்கள் கணவன் மனைவியரிடையே பிரிவை உண்டாக்கும் சூனியத்தை அவ்விருவரிடமிருந்து கற்றுக் கொண்டார்கள்.

எனினும் அல்லாஹ்வின் அனுமதியில்லாமல் இந்த சூனியத்தைக் கொண்டு எவருக்கும் அவர்களால் தீங்கு இழைக்க முடியாது.(உண்மையில்)தமக்குப் பலன் அளிக்காத தையும் தீங்கிழைப்பதையுமே அவர்கள் கற்றனர். மேலும் (சூனியத்தைக் கற்று) அதை விலக்கி வாங்கிக் கொண்டவர் களுக்கு மறுமையில் யாதொரு பாக்கியமும் இல்லை என்பதை அவர்கள் நன்கே அறிந்திருந்தனர். தம் உயிர்களை விற்று

அவர்கள் வாங்கிக்கொண்ட பொருள் எத்துணை கெட்டது! இதனை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டாமா? (2:102)

சூனியக்காரன் எங்கு சென்றாலும் ஒருபோதும் வெற்றி அடையமாட்டான். (20:69)

"நாசத்தைத் தரக்கூடிய ஏழு காரியங்களை விட்டும் விலகிக்கொள்ளுங்கள்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதும், "அல்லாஹ்வின் தூதரே! அவை என்னென்ன?" என்று தோழர்கள் கேட்டனர். அதற்கவர்கள், "அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, சூனியம் செய்வது, அல்லாஹ் கண்ணியத் திற்குரியதாக்கிய உயிரை நியாயமின்றிக் கொல்வது, வட்டி உண்பது,அநாதையின் பொருளை உண்பது, போர்க்களத்தில் புறமுதுகு காட்டுவது, மு.ஃ.மினான கற்புள்ள அப்பாவிப் பெண்களை அவதூறு சொல்வது ஆகியனவாகும்" எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(2767),முஸ்லிம்(89)

**பயன்கள்:**

1. சூனியம் செய்வது ஹராமாகும். அது நாசத்தைத் தரக் கூடிய பாவங்களில் ஒன்றாகும்.

2. அது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றக்கூடிய காரியங்களில் ஒன்றாகும். காரணம் நிச்சயமாக நாங்கள் குழப்பம் செய்பவர்களே (இதைக்கற்று) நீங்கள் கா.ஃ.பிர்களாகி விட வேண்டாம் என்று அல்லாஹ் கூறியுள்ளான். மேலும் இது ஷைத்தானை வழிபடுவதாகவே உள்ளது.

3. சூனியக்காரர்களிடம் செல்வது, அவர்களிடம் கலந்துற வாடுவது ஹராமாகும்.

## 5. ஓதிப் பார்த்தல்

“(குர்ஆன் அல்லாதவற்றைக் கொண்டு) ஓதிப்பார்ப்பது, தாயத்துகள் அணிவது, தலையணை மந்திரம் ஆகியவை ஷிர்க் ஆகும்.” நபிமொழி. அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரலி)
நூல்: அஹ்மத்(3604), அபூதாவூத்(3883)

“விஷக்கடிகளுக்கு ஓதிப்பார்க்க நபி(ஸல்)அவர்கள் அனுமதித்துள்ளார்கள்” என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள்.
நூல்: புகாரி(5741),முஸ்லிம்(2193)

“நபி(ஸல்)அவர்கள் தமது இறுதி நேரத்தில் நோய்வாய்ப் பட்டிருந்தபோது குல்ஹுவல்லாஹு அஹத், குல்அவூது பிரப்பில் ஃபலக், குல்அவூது பிரப்பின் நாஸ் ஆகிய சூராக்களை ஓதி தமக்குத் தாமே ஊதிக் கொண்டார்கள். நோய் கடுமையானபோது அவற்றை நான் ஓதி அவர்கள் மீது ஊதிவிட்டேன். மேலும் அவர்களின் கைக்கு பரகத் இருப்பதால் அவர்கள் கையாலேயே அவர்களுக்குத் தடவிவிட்டேன்” என ஆயிஷா (ரலி)கூறினார்கள்: நூல்: புகாரி (5735),முஸ்லிம்(2192)

நபி(ஸல்)அவர்கள் தமது சில மனைவிமார்களுக்கு ஓதிப் பார்ப்பார்கள். அப்போது “அல்லாஹும்ம ரப்பன் நாஸ் அத்ஹிபில் பஃஸ், வஷ்ஃபிஹ் வஅன்தஷ் ஷாஃபி லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாவுக ஷிஃபாஅன் லாயுகாதிரு ஸகமா” என ஓதி தம் வலது கையால் தடவுவார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள். நூல்: புகாரி(5743),முஸ்லிம்(2191)

اَللّٰهُمَّ رَبَّ النَّاسِ أَذْهِبِ الْبَأْسَ وَاشْفِهِ وَ أَنْتَ الشَّافِي

لاَ شِفَاءَ إِلاَّ شِفَاءُكَ شِفَاءً لاَ يُغَادِرُ سَقَمًا

(பொருள்: இறைவா! மனிதர்களின் இரட்சகனே! துன்பத்தைப் போக்கி எந்த நோயையும் விட்டுவைக்காமல் நிவாரண

மளிப்பாயாக! நீயே நிவாரணம் அளிக்கக் கூடியவன் உன் நிவாரணத்தைத் தவிர வேறெதுவும் நிவாரணமாகாது)

**பயன்கள்:**

1. குர்ஆனைக் கொண்டும் ஹதீஸ்களில் வந்திருக்கின்ற துஆக்களைக் கொண்டும் ஓதிப் பார்க்க அனுமதியுள்ளது.

2. குர்ஆன் அல்லாதவற்றைக் கொண்டும் ஹதீஸ்களில் வராத துஆக்களைக் கொண்டும் ஓதிப் பார்க்க தடுக்கப் பட்டுள்ளது.

3. அல்லாஹ்வை விடுத்து மற்றவர்களை அழைக்கின்ற துஆக்களைக் கொண்டு ஓதிப்பார்ப்பது மிகப் பெரும் ஷிர்க்.

4. ஒரு மனிதன் தனக்குத் தானே குல்அவூது பிரப்பில் ஃபலக், குல்அவூது பிரப்பின் நாஸ் ஆகிய சூராக்களைக் கொண்டு ஓதிப்பார்த்துக்கொள்ள மார்க்கம் அனுமதித்துள்ளது. அடுத்தவரை ஓதிப்பார்க்கச் சொல்லக் கூடாது.

## 6. அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல்

“உங்களின் தந்தையரைக் கொண்டு நீங்கள் சத்தியம் செய்வதை அல்லாஹ் தடுக்கிறான். எனவே யாரேனும் சத்தியம் செய்வதாயிருந்தால் அல்லாஹ்வைக் கொண்டே சத்தியம் செய்யட்டும். இல்லையெனில் வாய் மூடி இருக்கட்டும்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: புகாரி(6646),முஸ்லிம்(1646)

“அமானிதத்தைக் கொண்டு சத்தியம் செய்பவர் நம்மைச் சார்ந்தவரல்லர்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: புரைதா(ரலி), நூல்: அபூதாவூத்(3253)

"கஅபாவின் மீது சத்தியமாக இல்லை" என ஒருவர் கூறியதை இப்னு உமர்(ரலி)கேட்டதும் "அல்லாஹ்வைத் தவிர மற்றவற்றைக் கொண்டு நீ சத்தியம் செய்யாதே. ஏனெனில் "யார் அல்லாஹ்வைத் தவிர மற்றவற்றைக் கொண்டு சத்தியம் செய்கிறாரோ அவர் கா∴பிராகி விட்டார் அல்லது இணை வைத்து விட்டார்" என நபி(ஸல்) அவர்கள் கூறக் கேட்டிருக் கிறேன்" என்று கூறினார்கள். (திர்மிதி-1535)

**பயன்கள்:**

1. அல்லாஹ்வைத் தவிர்த்து மற்றவரைக் கொண்டு சத்தியம் செய்வது ஹராமாகும். அது சிறிய ஷிர்க் ஆகும். ஷிர்க் பெரும்பாவங்களில் ஒன்றாகும்.

2. நபி, கஅபா, கண்ணியம், வாழ்க்கை போன்ற படைப்பு களைக் கொண்டு சத்தியம் செய்வதும் ஹராமாகும்.

3. அல்லாஹ்வைக் கொண்டு அல்லது அவனது பெயர்கள் பண்புகளைக் கொண்டேதான் சத்தியம் செய்ய வேண்டும்.

## 7. சகுனம் பார்த்தல்

"தொற்று நோய், சகுனம் பார்ப்பது என்பது (இஸ்லாத்தில்) இல்லை. எனினும் நல்ல சகுனம் எனக்கு விருப்பமானது. அது அழகிய வார்த்தையாகும்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), புகாரி(5756),முஸ்லிம்(2224)

"சகுனம் பார்ப்பது ஷிர்க்காகும்" என்பது நபிமொழி.

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரலி), அபூதாவூத்(3910)

**பயன்கள்:**

1. சகுனம் பார்ப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. அது பறவைகள் அல்லது மற்றவற்றைக் கொண்டு சகுனம் பார்த்து ஒரு செயலைச் செய்யாது விட்டுவிடுவதற்குச் சொல்லப்படும்.

2. இது ஒரு செயலைச் செய்யாமல் விடுவதற்குக் காரணமாக இருந்தால் ஷிர்க்காகும். காரணம் நன்மையோ தீமையோ அளிக்கக்கூடிய சக்தி அல்லாஹ் அல்லாத வற்றுக்கும் இருக்கின்றது என்று கருதுவதால்.

3. நல்லசகுனம் பார்ப்பதில் அல்லாஹ்வைப் பற்றிய நல்லெண்ணம் இருப்பதால் அது விரும்பத்தக்கதாகும்.

## 8. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தல் (தவக்குல்)

யார் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கின்றாரோ அவருக்கு அல்லாஹ்வே போதுமானவன். (65:3)

மு.ஃ.மின்கள் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைக்கட்டும். (64:13)

“பல உம்மத்தினர் எனக்கு எடுத்துக் காட்டப்பட்டனர். அப்போது நான் ஒரு நபியைப் பார்த்தேன் அவருடன் சிறு கூட்டமே இருந்தது. இன்னொரு நபியைக் கண்டேன் அவருடன் ஒன்றிரண்டு பேர் இருந்தனர். மற்றொரு நபியைக் கண்டேன் அவருடன் யாருமே இல்லை. அந்நேரத்தில் ஒரு மாபெரும் கூட்டம் எனக்குக் காட்டப்பட்டது. அவர்கள் என் உம்மத்தினர்தான் என்று நான் எண்ணிக் கொண்டிருந்த அதே நேரத்தில் “அவர்கள் மூஸாவும் அவரது சமுதாயத் தினரும்” என்று எனக்குக் கூறப்பட்டது.

பிறகு மற்றொரு பெரும் கூட்டத்தை நான் பார்த்தேன். “இவர்கள் தான் உமது உம்மத்தினர்” என எனக்குக் கூறப்

பட்டது. அவர்களுடன் கேள்வி கணக்கின்றி, வேதனையின்றி சொர்க்கம் செல்லக்கூடிய எழுபதாயிரம் பேர் இருந்தனர்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். பிறகு அவர்கள் எழுந்து தமது வீட்டிற்குள் சென்று விட்டனர். அதன் பிறகு அங்கிருந்த மக்கள் அவர்கள் யார் என்ற சர்ச்சையில் மூழ்கி விட்டனர். சிலர், "அவர்கள் நபி(ஸல்)அவர்ளுடன் தோழமை கொண்டவர்களாக இருக்கலாம்" என்றும் இன்னும் சிலர், "அவர்கள் இஸ்லாத்திலேயே பிறந்து அல்லாஹ்வுக்கு எதை யுமே இணைகற்பிக்காதவர்களாக இருக்கலாம்" என்றும் இன்னும் பலவாறும் சொல்லிக் கொண்டார்கள்.

அதன் பிறகு நபி(ஸல்)அவர்கள் வந்ததும் மக்கள் அவர் களிடம் விஷயத்தைக் கூறினார்கள். அப்போது, "அவர்கள் தாம் பிறரிடம் ஓதிப்பார்க்கத் தேடாதவர்களும் (நோய்க்காக) சூடுபோடாதவர்களும் சகுனம் பார்க்காதவர்களும், தம் இறைவன் மீதே நம்பிக்கை வைப்பவர்களும் ஆவர்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி),

நூல்: புகாரி(5752),முஸ்லிம்(220)

**பயன்கள்:**

1. தவக்குல் (நம்பிக்கை) வைப்பதன் நிலையை அறிந்து கொள்வது. அது வணக்கங்களில் மிக முக்கியமானது.
2. தவக்குலை மெய்ப்படுத்துவது கேள்வி, கணக்கின்றி சொர்க்கம் செல்வதற்குக் காரணமாக அமையும்.

## 9. துஆ அங்கீகரிக்கப்படும் நேரங்கள்

“ஒரு அடியான் தன் இறைவனுக்கு மிக நெருக்கமாக இருப்பது ஸஜ்தாவின்போது தான். எனவே அதில் துஆவை அதிகப்படுத்துங்கள்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(482)

“பாங்கு இகாமத்திற்கிடையில் கேட்கப்படும் துஆ மறுக்கப் படமாட்டாது” என்று நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: திர்மிதி(212)

“இரண்டு துஆக்கள் நிராகரிக்கப்பட மாட்டாது அல்லது நிராகரிக்கப்படுவதென்பது மிகக் குறைவு. அவை பாங்கின் போதும், ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும் போர்க்களத் தின்போதும் கேட்கப்படும் துஆக்களாகும்” என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸ.்.த்(ரலி),

நூல்: அபூதாவூத்(2540)

“இரவின் மூன்றில் ஒரு பகுதிமீதமிருக்கும் நேரத்தில் அல்லாஹ் முதல் வானத்துக்கு தினமும் இறங்குகிறான். என்னிடம் பிரார்த்திப்பவர் உண்டா? அவரது பிரார்த்தனையை ஏற்கிறேன். என்னிடம் கேட்பவர் உண்டா? அவருக்குக் கொடுக்கிறேன். என்னிடம் பாவமன்னிப்புத் தேடுபவர் உண்டா? அவருக்கு நான் மன்னிப்பு வழங்குகிறேன் என்று கூறுகிறான்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(1145),முஸ்லிம்(758)

“ஒவ்வொரு இரவிலும் ஒரு நேரம் இருக்கிறது.அந்நேரத்தை ஒரு முஸ்லிம் இவ்வுலக, மறு உலக நன்மையை அல்லாஹ் விடம் பிரார்த்தித்தவாறு அடைந்தால் அல்லாஹ் அவனுக்கு

அதை வழங்காமல் இருக்கமாட்டான்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), முஸ்லிம்(757)

**பயன்கள்:**

1. ஏனைய நேரங்களை விட பிரார்த்தனை அங்கீகரிக்கப் படுவதை அதிகம் எதிர்பார்க்கக்கூடிய சில நேரங்கள் இருக் கின்றன.

2. இந்நேரங்களைப் பேணி இதில் அதிகமதிகம் பிரார்த் தனை செய்வதற்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளது.

3. ஸஜ்தாவின்போது,பாங்கு இகாமத்துக்கிடையில், இரவின் கடைசி நேரம், போர்க்களத்தில் எதிரிகளைச் சந்திக்கும்போது ஆகியவை இந்த நேரங்களைச் சார்ந்தனவாகும்.

## 10. ஜமாஅத்துடன் தொழுவதன் அவசியம்

“நயவஞ்சகர்களுக்கு மிகப் பாரமான தொழுகை இஷாவும் ∴பஜ்ருமாகும். இவ்விரண்டிலுமுள்ள சிறப்பை அவர்கள் அறிந்து கொள்வார்களானால் தவழ்ந்தாவது அத்தொழுகை களுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.

தொழுகை நிலைநாட்டப்பட நான் கட்டளையிட்டுப் பின்னர் ஒருவரை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு கூறி பிறகு விறகுக் கட்டைகளுடன் சில மனிதர்களை அழைத்துச் சென்று ஜமாஅத்துக்கு வராதவர்களை அவர்களின் வீட்டோடு தீயிட்டு கொளுத்த நான் நினைத்தேன்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), (புகாரி-657, முஸ்லிம்-651)

“கண் பார்வையற்ற ஒருவர் நபி(ஸல்)அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! என்னை பள்ளிக்கு அழைத்து வருபவர் யாருமில்லை. எனவே வீட்டிலேயே தொழுவதற்கு அனுமதிக்குமாறு" வேண்டினார். நபி(ஸல்)அவர்கள் அவருக்கு

அனுமதி வழங்கி அவர் சென்று கொண்டிருக்கும்போது அவரை அவர்கள் அழைத்து "தொழுகைக்கு பாங்கு சொல் லப்படுவதை நீர் கேட்கிறீரா?" என்றனர். அதற்கவர் "ஆம்" என்றதும் "அந்த அழைப்புக்கு நீ (ஜமாஅத்துக்கு வருவதன் மூலம்) பதிலளிப்பீராக!" என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(653)

"நாளை மறுமையில் முஸ்லிமான நிலையில் அல்லாஹ் வைச் சந்திக்க விரும்புவோர் இத்தொழுகைகளை அவற் றிற்காக பாங்கு சொல்லப்படும் இடத்தில் (பள்ளிவாசலில்) முறையாகப் பேணி (தொழுது) கொள்வாராக! அல்லாஹ் உங்களுடைய நபிக்கு நேரிய வழிமுறைகளை மார்க்க மாக்கியுள்ளான். பள்ளிக்குச் சென்று ஜமாஅத்துடன் தொழும் இத்தொழுகைகளும் நேரிய வழிகளில் ஒன்றாகும்.

ஜமாஅத்தில் கலந்துகொள்ளாது தன் வீட்டில் தொழு பவரைப் போல நீங்களும் உங்கள் வீடுகளில் தொழுவீர் களானால் உங்கள் நபியின் வழிமுறையை கைவிட்டவர் களாவீர்கள். உங்கள் நபியின் வழிமுறையை நீங்கள் கை விட்டீர்களானால் நிச்சயம் நீங்கள் வழிதவறிப் போவீர்கள். எவர் உளுச் செய்து, அதை நல்ல முறையில் செய்து இப் பள்ளிகளில் ஒன்றை நாடி வருகிறாரோ அல்லாஹ் அவருக்கு- அவர் எடுத்துவைக்கும் ஒவ்வொரு எட்டுக்குப் பதிலாக ஒரு நன்மையை எழுதி, ஒரு பதவியை உயர்த்துகின்றான். மேலும் ஒரு தீமையை அவரை விட்டும் அகற்றுகின்றான். எங்களி டையே நான் பார்த்திருக்கிறேன் பகிரங்கமான நயவஞ்ச கனைத் தவிர வேறெவரும் ஜமாஅத்துக்கு வராமல் இருக்க மாட்டார். இயலாதவரைக்கூட இரண்டு பேர் கைத்தாங்கலாக

அழைத்து வந்து வரிசையில் நிறுத்தப்படுவார் என்று இப்னு மஸ்ஊத்(ரலி)அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்-654)

**பயன்கள்:**

1. ஜமாஅத்துடன் தொழுவது ஆண்களுக்குக் கடமை.
2. ஜமாஅத்துக்கு வராமலிருப்பது நயவஞ்சகர்களின் அடையாளங்களில் ஒன்றாகும்.

## 11. ஜமாஅத் தொழுகையின் சிறப்பு

“ஒருவர் ஜமாஅத்துடன் தொழுவது தன்னுடைய வீட்டில் தொழுவதை விடவும் கடைவீதியில் தொழுவதை விடவும் இருபத்தைந்து மடங்கு சிறந்ததாகும். இது ஏனெனில் ஒருவர் அழகிய முறையில் உளுச் செய்து தொழுகைக்காகவே பள்ளியை நோக்கிச் செல்வாரானால் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டுக்கும் ஒரு பதவி உயர்த்தப்பட்டு ஒரு பாவம் மன்னிக்கப்படுகின்றது.

அவர் தொழுது முடித்துவிட்டு அவ்விடத்திலேயே இருக்கும் வரை வானவர்கள்,இறைவா! இவருக்கு நீ அருள் புரிவாயாக! என்று பிரார்த்தித்துக் கொண்டேயிருப்பார்கள். உங்களில் ஒருவர் (ஜமாத்அத்து) தொழுகையை எதிர்பார்த்து (தொழும் இடத்திலேயே இருந்து)கொண்டிருப்பவர் தொழுகையிலேயே இருப்பார்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(647),முஸ்லிம்(649)

“ஏதேனும் ஒரு ஊரிலோ அல்லது காட்டுப் பகுதியிலோ மூன்று பேர்கள் இருந்து அவர்களிடையே (ஜமாஅத்தாக) தொழுகை நிறைவேற்றப்படா விட்டால் அவர்கள் மீது ஷைத்தான் ஆதிக்கம்கொள்கிறான். எனவே ஜமாஅத்துடன் தொழுவதைக் கடைபிடியுங்கள் ஏனெனில் தனிமையில் மேயும்

ஆட்டைத்தான் ஓநாய் கபலிகரம் செய்கின்றது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபுத்தர்தா(ரலி), நூல்: அபூதாவூது(547)

"தனியாகத் தொழுவதை விட ஜமாஅத்தாகத் தொழுவது இருபத்தேழு மடங்கு சிறந்ததாகுமென" நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)

நூல்: புகாரி(645),முஸ்லிம்.

**பயன்கள்:**

1. ஜமாஅத்துடன் தொழுவதற்கு சிறப்புகள் அதிகமுள்ளன.
2. ஒருவர் தனித்துத் தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது சிறந்தது.
3. ஒருவர் ஜமாஅத்துடன் தொழுவதை விட்டுவிடுவது ஷைத்தான் அவர் மீது ஆதிக்கம் கொள்வதற்குக் காரண மாகின்றது.

## 12. பள்ளிவாசலுக்கு வரும் முறை

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "இகாமத் சொல்வதை நீங்கள் செவியுற்றால் தொழுகைக்குச் செல்லுங்கள். அப்போது அமைதியான முறையிலும் கண்ணியமாகவும் செல்லுங்கள். அவசரமாகச் செல்லாதீர்கள். உங்களுக்குக் கிடைத்த ரக்அத்துகளை (ஜமாஅத்துடன்) தொழுங்கள். உங்களுக்குத் தவறிப் போனதைப் பூர்த்தி செய்யுங்கள்."

நூல்: புகாரி(636),முஸ்லிம்(602)

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் தொழுதுகொண்டிருந் தோம். அப்போது சிலர் வேகமாக வரும் சப்தத்தை அவர்கள் செவியுற்றனர். தொழுகையை முடித்ததும் "உங்களுக்கு என்ன நேர்ந்தது? (இவ்வளவு வேகமாக வந்தீர்கள்)" என்று

கேட்டார்கள். அதற்குத் தோழர்கள், "நாங்கள் தொழுகைக்காக விரைந்து வந்தோம்" என்றனர். "அவ்வாறு செய்யாதீர்கள். தொழுகைக்கு வரும்போது அமைதியாக வாருங்கள்! உங்களுக்குக் கிடைத்ததைத் தொழுங்கள். தவறியதை நிறைவு செய்யுங்கள்" என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி), புகாரி(635), முஸ்லிம்(603)

**பயன்கள்:**

1. தொழுகைக்காக கம்பீரத்துடன் அமைதியாக வருமாறு (நபியின் மூலம்) ஏவப்பட்டுள்ளது.
2. தொழுகைக்காக வேகமாக நடந்து வருவது தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வருவது ருகூவை அடைந்து கொள் வதற்காயினும் சரியே.

## 13. தொழுகைக்கு சீக்கிரம் வந்து காத்திருப்பதன் சிறப்பு

"ஒருவர் தமது வீட்டில் அல்லது கடைவீதியில் தொழுவதை விட ஜமாஅத்துடன் தொழுவது இருபத்தைந்து மடங்கு சிறந்த தாகும். அதாவது ஒருவர் உளுச் செய்து, அதை அழகாகவும் செய்து தொழுகைக்காகவே பள்ளிவாசலுக்குச் செல்வாராயின் அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டுக்கும் ஒரு பதவி உயர்த்தப்பட்டு ஒரு பாவம் அழிக்கப்படுகின்றது. அவர் தொழுது முடித்துவிட்டு தொழுமிடத்திலேயே இருக்கும் வரை வானவர்கள், "இறைவா! இவருக்கு நீ அருள் புரிவாயாக!" என்று பிரார்த்தித்துக் கொண்டே இருப்பார்கள். உங்களில் ஒருவர் (ஜமாத்அத்) தொழுகையை எதிர்பார்த்து (தொழும் இடத்தில்) இருக்கும்போதெல்லாம் அவர் தொழுகையிலேயே இருக்கிறார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(647),முஸ்லிம்(649)

“பாங்கு சொல்வதிலும் தொழுகையின் முதல் வரிசையிலும் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களாயின் அதற்காகப் போட்டிபோட்டுக் கொண்டு முந்திவருவர். பின்னர் அதன் விளைவாக அவர்களிடையில் சீட்டுக் குலுக்கி எடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டாலும் அதற்கும் தயாராகி விடுவர். மேலும் தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறைவேற்றுவதில் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களானால் அதற்காக முந்திச் செல்வர். சுபுஹுத் தொழுகையிலும் இஷாத் தொழுகையிலும் உள்ள நன்மையை அறிவார்களானால் தவழ்ந்தாவது (ஜமாஅத்) தொழுகைக்கு வந்து சேர்ந்துவிடுவார்கள்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல:: புகாரி(615), முஸ்லிம்(437)

**பயன்கள்:**

1. தொழுகைக்காக சீக்கிரம் செல்வதில் சிறப்பு உண்டு.
2. தொழுகையை எதிர்பார்த்து அமர்ந்திருப்பதில் அதிகம் நன்மை இருக்கிறது.

## 14. காணிக்கைத் தொழுகை

“உங்களில் எவரேனும் பள்ளியில் நுழைந்தால் அமர்வதற்கு முன் இரண்டு ரக்அத்துகள் தொழட்டும்” என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)

நூல்: புகாரி(444),முஸ்லிம்(714)

ஜும்ஆ தினத்தில் நபி(ஸல்)அவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது சுலைக் அல்கத்பானி என்பவர் வந்து

உட்கார்ந்து விட்டார். “சுலைக்! எழுந்து இரண்டு ரக்அத் சுருக்கமாகத் தொழுவீராக!” என்று நபி(ஸல்)அவர்கள் கூறி விட்டு “இமாம் சொற்பொழிவு நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது யாரேனும் வந்தால் சுருக்கமாக இரண்டு ரக்அத் தொழட்டும்” எனவும் குறிப்பிட்டார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரி(930),முஸ்லிம்(875)

**பயன்கள்:**

1. பள்ளியில் நுழையும்போது அங்கு அமர விரும்புபவர் இரு ரக்அத் தொழுவது விரும்பத்தக்கது.
2. ஜும்ஆ நாளில் இமாம் உரை நிகழ்த்திக் கொண்டிருந் தாலும் அதை நிறைவேற்றுவது விரும்பத்தக்கதாகும்.

## 15. முதல் வரிசையின் சிறப்பு

“பாங்கு சொல்வதிலும் தொழுகையின் முதல் வரிசை யிலும் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களாயின் அதற்காகப் போட்டிபோட்டுக் கொண்டு முந்தி வருவர். பின்னர் அதன் விளைவாக அவர்களிடையில் சீட்டுக் குலுக்கி எடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டாலும் அதற்கும் தயாராகி விடுவர். மேலும் தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறை வேற்றுவதில் உள்ள நன்மையை மக்கள் அறிவார்களானால் அதற்காக முந்திச் செல்வர். சுபுஹுத் தொழுகையிலும் இஷாத் தொழுகையிலும் உள்ள நன்மையை அறிவார்களானால் தவழ்ந்தாவது (ஜமாஅத்) தொழுகைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்” என்று நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(615),முஸ்லிம்(437)

தம் தோழர்கள் வரிசைகளை விட்டும் பின்னால் இருப்ப தைக் நபி(ஸல்)அவர்கள் கண்டபோது “முன்னால் வாருங்கள்

என்னைப் பின்பற்றுங்கள். உங்களுக்குப் பின்னால் உள்ள வர்கள் உங்களைப் பின்பற்றட்டும். மக்கள் பிந்திக்கொண்டே செல்வார்களானால் அல்லாஹ்வும் அவர்களை (தன் அருளை விட்டும்) பிற்படுத்திவிடுவான்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: முஸ்லிம்(438)

"ஆண்கள் வரிசைகளில் சிறந்தது முதல் வரிசையாகும். அவற்றில் கெட்டது கடைசி வரிசையாகும். பெண்கள் வரிசை களில் சிறந்தது கடைசி வரிசையாகும். அவற்றில் கெட்டது முதல் வரிசையாகும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), முஸ்லிம்(440)

**பயன்கள்:**

1. முதல் வரிசைக்கும், பொதுவாக முன் வரிசைக்கு வருவ தற்கும் பெரும் சிறப்புகள் உள்ளன.

2. ஆண்களின் வரிசைகளில் சிறந்தது முதல் வரிசையாகும். அவற்றில் கெட்டது கடைசி வரிசையாகும்.

3. முதல் வரிசையை விட்டும் பிந்துவதையே வழக்கமாகக் கொள்வது பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது.

## 16. வரிசைகளைச் சரிசெய்வதன் அவசியம்

"வானவர்கள் தம் இரட்சகனின் முன் அணிவகுத்து நிற்பது போல நீங்கள் அணிவகுத்து நிற்க வேண்டாமா?" என்று நபி (ஸல்)அவர்கள் கூறியதும், "வானவர்கள் தம் இரட்சகனின் முன் எவ்வாறு அணிவகுத்து நிற்கின்றார்கள்?" என்று நாங்கள் கேட்டோம். அதற்கு நபி(ஸல்)அவர்கள், "முதல் வரிசையை நிறைவு செய்வார்கள். வரிசையில் சேர்ந்து (இடைவெளி யின்றி) நெருக்கமாக நிற்பார்கள்" என்று பதில் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(430)

தொழுகையில் நபி(ஸல்)அவர்கள் எங்கள் தோள்களைத் தொட்டு, "நேராக நில்லுங்கள். (முன்னும் பின்னுமாக) மாறு பட்டு நிற்காதீர்கள். அதனால் உங்கள் உள்ளங்கள் மாறு பட்டுவிடும்.என்னை அடுத்து அறிவிற்சிறந்தவர்கள் நிற்கட்டும். அடுத்தடுத்து அவர்களுக்கு அடுத்தடுத்த நிலையிலுள்ளோர் நிற்கட்டும்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூமஸ்வூத்(ரலி), நூல்: முஸ்லிம்(432)

"உங்கள் வரிசைகளை நேராக ஆக்கிக்கொள்ளுங்கள் ஏனெனில் வரிசையை நேராக்கிக் கொள்வது தொழுகையின் பரிபூரணத் தன்மையின் ஒரம்சமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: முஸ்லிம்(433)

நபி(ஸல்)அவர்கள் எங்கள் அணிகளை சரி செய்வார்கள். எந்த அளவுக்கு என்றால் அவ்வணிகளைக் கொண்டே அம்பு களை சரி செய்துவிடலாம். இ(வ்வாறுதான் நிற்க வேண்டு மென்ப) தை நாங்கள் புரிந்து கொண்டுவிட்டோம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் வரை இவ்வாறு செய்வார்கள்.

பின்னர் ஒரு நாள் நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்குப் புறப்பட்டு வந்து தக்பீர் சொல்லத் தயாரானபோது அணியை விட்டும் தனது மார்பை வெளிக்காட்டிக்கொண்டிருந்த ஒரு மனிதரைப் பார்த்தார்கள். உடனே "அல்லாஹ்வின் அடியார்களே! உங்கள் வரிசைகளை நேராக அமைத்துக் கொள்ளுங்கள்! இல்லையெனில் அல்லாஹ் உங்களிடையே வேற்றுமையை உண்டாக்கிவிடுவான்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: நு.'.மான் பின் பஷீர்(ரலி), முஸ்லிம்(436)

"உங்கள் வரிசைகளை நேராக்கிக்கொள்ளுங்கள். நான் என் முதுகுக்குப் பின் புறமும் உங்களைக் காணுகிறேன்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதும் எங்களில் ஒவ்வொரு வரும் தனது தோள் புஜத்தை மற்றவரின் தோள்புஜத்துடனும் தனது பாதத்தை மற்றவரின் பாதத்துடனும் சேர்த்துக் கொள்ள லானார்கள். அறிவிப்பவர்: அனஸ்(ரலி) நூல்: புகாரி(725)

**பயன்கள்:**

1. வரிசையை நேராக்கிக்கொள்வது கடமையாகும். காரணம் இது பற்றி நபி(ஸல்)அவர்கள் ஏவியிருப்பதோடு வரிசையில் (முன்னும் பின்னுமாக) வேறுபட்டு நிற்பது குறித்து எச்சரித்தும் இருக்கின்றார்கள்.
2. வரிசையை நேராக்காமலிருப்பது தொழுபவர்களின் உள்ளங்கள் மாறுபட்டுவிடுவதற்குக் காரணமாகிவிடும்.
3. வரிசையை சரிசெய்து கொள்வது தொழுகையின் பூரணத் தன்மையின் ஓர் அம்சமாகும்.

## 17. ஜமாஅத்துடன் ஃபஜ்ர் தொழுவது

"ஒருவர் தனியாகத் தொழுவதை விட ஜமாஅத்தாகத் தொழுவது இருபத்தைந்து மடங்கு சிறப்புடையதாகும். ஃபஜ்ர் தொழுகையில் பகல் நேர மலக்குகளும் இரவு நேர மலக்கு களும் ஒன்று சேர்கின்றனர்" என்று நபி(ஸல்)அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன். என்று அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்து விட்டு நீங்கள் விரும்பினால் "நிச்சயமாக ஃபஜர் நேரத்தில் ஓதப்படும் குர்ஆன் சாட்சி கூறக்கூடியதாக இருக் கின்றது" என்ற வசனத்தை ஓதிக் கொள்ளுங்கள் என்றார்கள்.

(புகாரி-649, முஸ்லிம்-649)

“நயவஞ்சகர்களுக்கு பாரமான தொழுகை இஷாவும் ∴பஜ்ருமாகும். இவ்விரண்டிலுமுள்ள சிறப்பை அவர்கள் அறிந்து கொண்டால் தவழ்ந்தாவது அத்தொழுகைகளுக்கு வந்துவிடுவார்கள்.தொழுகை நிலைநாட்டப்பட நான் கட்டளை யிட்டுப் பின்னர் ஒருவரை மக்களுக்குத் தொழுகை நடத்து மாறு கூறி பிறகு விறகுக் கட்டைகளுடன் சில மனிதர்களை அழைத்துச் சென்று ஜமாஅத்துக்கு வராதவர்களை அவர் களின் வீட்டோடு தீயிட்டுக் கொளுத்த நான் நினைத்தேன்” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),
புகாரி(657),முஸ்லிம்(651)

“இஷாவை ஜமாஅத்துடன் தொழுதவர் பாதி இரவு தொழு தவர் போலாவார். பஜ்ரை ஜமாஅத்துடன் தொழுதவர் முழு இரவும் தொழுதவர் போலாவார்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: உஸ்மான்(ரலி), முஸ்லிம்(656)

“சுபுஹ் தொழுதவர் அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளார். எனவே அல்லாஹ் தன் பொறுப்பிலுள்ளது பற்றி உங்களிடம் விசாரிக்குமாறு நடக்காதீர்கள். தனது பொறுப்பிலுள்ளது பற்றி யாரிடமாவது அவன் விசாரித்து அவரிடம் குறை கண்டால் அதற்காக அவன் அவரை நரகில் முகங்குப்புற தள்ளி விடுவான்.” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஜுன்துப்(ரலி), நூல்: முஸ்லிம்-657

**பயன்கள்:**

1. ∴பஜர் தொழுகைக்குச் சிறப்புண்டு. இத்தொழுகை சாட்சி சொல்லக் கூடியதாகும்.

2. இத்தொழுகை நயவஞ்சகர்களுக்குப் பாரமானது.

3. ஃபஜ்ரை ஜமாஅத்துடன் தொழுதவர் அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளார்.

## 18. அஸர் தொழுகையின் சிறப்பு

(எல்லா) தொழுகைகளையும் நடுத்தொழுகையையும் பேணிக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நில்லுங்கள். (2:238)

“இரவு நேரத்து வானவர்களும் பகல் நேரத்து வானவர் களும் உங்களிடம் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டி ருப்பார்கள். ஃபஜர் தொழுகையிலும் அஸர் தொழுகையிலும் இருசாரரும் சந்திக்கின்றனர். பின்னர் உங்களுடன் இரவு தங்கியவர்கள் மேலேறிச் செல்கின்றனர். “என் அடியார்களை எந்த நிலையில் விட்டு வந்தீர்கள்?” என்று அவர்களிடம் இறைவன் இதுபற்றி தெரிந்துகொண்டே விசாரிப்பான். “அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போதே அவர்களிடம் சென்றோம். அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போதே அவர்களை விட்டு விட்டு வருகின்றோம்” என்று அவர்கள் விடையளிப்பார்கள்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(555),முஸ்லிம்(632)

ஒரு பௌர்னமி அன்று நாங்கள் நபி(ஸல்)அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது அவர்கள் நிலவை நோக்கி, “இந்த நிலவை நீங்கள் நெருக்கடியின்றி காண்பது போல நிச்சயம் உங்கள் இறைவனை நீங்கள் காண்பீர்கள்! சூரியன் உதிக்கும் முன்னரும் சூரியன் மறையும் முன்னரும் தொழும் விஷயத்தில்(தூக்கம் போன்றவற்றால்) நீங்கள் மிகைக்கப் படாதிருக்க இயலுமானால் அதைச் செய்யுங்கள்” என்று கூறினார்கள். இவ்வாறு ஜரீர்(ரலி)அவர்கள் அறிவித்து விட்டு

“சூரியன் உதிக்கும் முன்னரும் மறையு முன்னரும் உமது இறைவனின் புகழைத் துதிப்பீராக”(50:39) என்ற வசனத்தையும் ஓதிக்காண்பித்தார்கள். (நூல்: புகாரி-554),முஸ்லிம்-633)

“பகலின் வெப்பம் குறைந்த இரு தொழுகைகளை (ஃபஜ்ர், அஸர்) யார் தொழுகிறாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைவார்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூமூஸா(ரலி), புகாரி(574),முஸ்லிம்(635)

“யார் அஸர் தொழுகையை விட்டுவிட்டாரோ அவரது அமல்கள் அழிந்துவிடும்” என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: புரைதா(ரலி), நூல்: புகாரி(553)

**பயன்கள்:**

1. அஸர் தொழுகைக்கு பல சிறப்புகள் உள்ளன.

2. இத்தொழுகையைப் பேணுவது சொர்க்கம் செல்வதற்கு காரணமாக அமையும்.

3. இத்தொழுகையை விட்டுவிடுபவனுக்கு கடுமையான எச்சரிக்கை வந்துள்ளது.

## 19. இரவுத் தொழுகை (1)

அவர்களுடைய விலாப்புறங்கள் படுக்கைகளை விட்டும் உயர்ந்துவிடுகின்றன. அச்சத்துடனும் ஆவலுடனும் தங்கள் இறைவனைப் பிரார்த்திக்கிறார்கள்.(32:16)

அவர்கள் இரவு நேரங்களில் குறைவாகவே தூங்கு வார்கள், பின்னிரவு நேரங்களில் பாவமன்னிப்புத் தேடு வார்கள். (51:17,18)

“ரமழானுக்குப் பிறகு சிறந்த நோன்பு அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாத நோன்பாகும். கடமையான தொழு

கைக்குப் பிறகு சிறந்த தொழுகை இரவுத் தொழுகையாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்(1163)

"ஒருவர் (இரவில் விழித்து) தன் மனைவியையும் விழிக்கச் செய்து இருவரும் இரண்டு ரக்அத் தொழுதால் அல்லாஹ்வை அதிகம் நினைவுகூரக்கூடிய ஆண்கள் மற்றும் பெண்களில் இருவராக எழுதப்படுவர்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: அபூதாவூத்(1309)

"உங்களில் ஒருவர் உறங்கும்போது பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுகளைப் போடுகிறான். ஒவ்வொரு முடிச்சின் போதும் "இரவு இன்னும் இருக்கிறது உறங்கு" என்று கூறு கிறான். அவர் விழித்து அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால் ஒரு முடிச்சு அவிழ்கிறது. அவர் உளுச் செய்தால் இன்னொரு முடிச்சு அவிழ்கிறது. அவர் தொழுதால் மற்றொரு முடிச்சும் அவிழ்கிறது. அவர் சுறுசுறுப்புடனும் மனமகிழ்ச்சியுடனும் காலைப் பொழுதை அடைகிறார். இல்லையெனில் சோம்பலு டனும் மனக்கஷ்டத்துடனும் காலைப் பொழுதை அடைகிறார்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(1142),முஸ்லிம்(776)

"ஒவ்வொரு இரவிலும் ஒரு நேரம் இருக்கிறது அந் நேரத்தை ஒரு முஸ்லிம் இவ்வுலக, மறுவுலக நன்மையை அல்லாஹ்விடம் பிரார்த்தித்தவாறு அடைந்தால் இறைவன் அவனுக்கு அதை வழங்காமல் இருக்கமாட்டான்" என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), முஸ்லிம்(757)

**பயன்கள்:**

1. இரவில் எழுந்து தொழுவது சிறப்பாகும்.

2. இரவுத் தொழுகை உளமகிழ்வுக்கும் மன அமைதிக்கும் காரணமாகின்றது.

## 20. இரவுத் தொழுகை (2)

நபி(ஸல்)அவர்கள் ரமழானிலும் ரமழான் அல்லாத நாட்களிலும் பதினொரு ரக்அத்களை விட அதிகமாகத் தொழுததில்லை. நான்கு ரக்அத் தொழுவார்கள். அதன் அழகையும், நீளத்தையும் கேட்காதே! பின்னர் நான்கு ரக்அத் தொழுவார்கள். அதன் அழகையும் நீளத்தையும் கேட்காதே! பின்னர் மூன்று ரக்அத் தொழுவார்கள். "அல்லாஹ்வின் தூதரே! வித்ர் தொழுவதற்கு முன் நீங்கள் உறங்குவீர்களா?" என்று நான் கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "ஆயிஷாவே! என் கண்கள்தாம் உறங்குகின்றன உள்ளம் உறங்குவதில்லை!" என்று விடையளித்தார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி),
நூல்: புகாரி(1147),முஸ்லிம்(738)

"அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான தொழுகை தாவூத்(அலை)அவர்களின் தொழுகையாகும். அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான நோன்பு தாவூத்(அலை)அவர்களின் நோன்பாகும். அவர்கள் பாதி இரவு வரை தூங்குவார்கள். பிறகு இரவில் மூன்றில் ஒரு பகுதி நேரம் தொழுவார்கள். பிறகு ஆறில் ஒரு பகுதி நேரம் தூங்குவார்கள். மேலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் நோன்பு வைப்பார்கள்" என நபி(ஸல்) கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு அம்ர்(ரலி),புகாரி(1131),முஸ்லிம்(1159)

"இரவுத் தொழுகை இரண்டு இரண்டு ரக்அத்களாக தொழ வேண்டும். உங்களில் எவரும் சுப்ஹுத் தொழுகை பற்றி அஞ்சினால் அவர் ஒரு ரக்அத் தொழட்டும். அது அவர்

(முன்னர்) தொழுதவற்றை ஒற்றையாக்கிவிடும்” என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)
நூல்: புகாரி(990),முஸ்லிம்(749)

“நபி(ஸல்)அவர்கள் இரவில் தொழுவதற்காக எழுந்தால் முதலில் சுருக்கமாக இரண்டு ரக்அத்கள் தொழுது கொள் வார்கள்.” அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: முஸ்லிம்(767)

**பயன்கள்:**

1. இரவுத் தொழுகை இரண்டிரண்டு ரக்அத்தாகத் தொழ வேண்டும்.
2. 11 ரக்அத்துகள் தொழுவது நபிவழியாகும்.
3. இரவில் மூன்றில் ஒரு பகுதி மீதமிருக்கும் நேரத்தில் தொழுவது சிறப்பு.
4. இரவுத் தொழுகை தொழும்போது ஆரம்பமாக சுருக்கமாக இரண்டு ரக்அத் தொழுது கொள்ள வேண்டும்.

## 21. நபில் தொழுகையின் சில சட்டங்கள்

**வாகனத்தில் தொழுவது:**

நபி(ஸல்)அவர்கள் எத்திசையில் சென்றாலும் வாகனத்தில் அமர்ந்து உபரியான தொழுகைகளையும் வித்ரையும் தொழு வார்கள். என்றாலும் கடமையான தொழுகைகளை வாகனத்தின் மீதமர்ந்து தொழமாட்டார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி) நூல்: புகாரி(1098)

நபி(ஸல்)அவர்களை நான் பார்த்திருக்கிறேன் அவர்கள் வாகனத்தின் மீதமர்ந்து வாகனம் எத்திசையில் சென்றாலும் தம் தலையால் சைகை செய்து உபரியான தொழுகைகளைத்

தொழுவார்கள். கடமையான தொழுகையின்போது இவ்வாறு செய்யமாட்டார்கள். அறிவிப்பவர்: ஆமிர் பின் ரபீஆ(ரலி), நூல்: புகாரி(1098)

**உபரியான தொழுகைகளை உட்கார்ந்து தொழுதல்:**

நபி(ஸல்)அவர்கள் லுஹருக்கு முன் என் வீட்டில் நான்கு ரக்அத்கள் தொழுவார்கள். பிறகு சென்று மக்களுக்குத் தொழுவிப்பார்கள். பின்பு வீட்டிற்கு வந்து இரு ரக்அத் தொழுவார்கள். மக்களுக்கு ம.்.ரிப் தொழுகையை நடத்திவிட்டு வீட்டுக்கு வந்து இரண்டு ரக்அத் தொழுவார்கள். மக்களுக்கு இஷா தொழுகையை நடத்தி விட்டு என் வீட்டிற்கு வந்து இரண்டு ரக்அத் தொழுவார்கள்.அவர்கள் இரவில் ஒன்பது ரக்அத்கள் தொழுவார்கள். அதில் வித்ரும் அடங்கும். சில இரவில் நீண்ட நேரம் நின்றுகொண்டும் சில இரவில் நீண்ட நேரம் உட்கார்ந்து கொண்டும் தொழுவார்கள். நின்று தொழும்போது ருகூவையும் சுஜூதையும் அதனதன் முறைப்படி செய்வார்கள். உட்கார்ந்து தொழும்போது ருகூவையும் சுஜூதையும் உட்கார்ந்தவாறே செய்வார்கள். பஜ்ரு உதயமாகி விட்டால் இரண்டு ரக்அத் (முன் சுன்னத்) தொழுவார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: முஸ்லிம்(730)

“ஒருவர் உட்கார்ந்து தொழுவது நின்று தொழுவதில் பாதி நன்மையைத் தருகின்றது” என நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி), முஸ்லிம்(735)

**பயன்கள்:**

1. கார் போன்ற வாகனத்தில் உபரியான தொழுகைகளை தொழுவது கூடும். அது எத்திசையில் சென்றாலும் சரி.

2. உபரியான தொழுகைகளை உட்கார்ந்து கொண்டும் தொழலாம்.

3. உட்கார்ந்து தொழுவதற்கு நின்று தொழுவதில் பாதி நன்மை கிடைக்கின்றது.

## 22. ஜ□ம்ஆ நாளின் சிறப்புகள்

“சூரியன் உதயமாகும் நாட்களில் வெள்ளிக்கிழமை மிகச் சிறந்த நாளாகும். அதில் தான் ஆதம்(அலை)அவர்கள் படைக் கப்பட்டார்கள். அதில்தான் சுவர்க்கத்தில் புகுத்தப்பட்டார்கள். அதில்தான் அங்கிருந்து இறக்கப்பட்டார்கள்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(854)

“வெள்ளிக் கிழமையன்று ஒருவர் அழகிய முறையில் உளூ செய்து ஜும்ஆத் தொழுகைக்கு வந்து (இமாம் உரை நிகழ்த்தத் தொடங்கியதும்) மௌனமாக இருந்து செவி தாழ்த்திக் கேட்டால் அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆ வுக்கும் மேலும் மூன்று நாட்களுக்கும் இடையிலான பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படுகின்றன. யாரேனும் சிறு கற்களைக் கொண்டு விளையாடினால் அவர் வீணான காரியத்தைச் செய்து விட்டார்” என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(857)

“ஐவேளை தொழுவதும், ஒரு ஜும்ஆத் தொழுதுவிட்டு இன்னொரு ஜும்ஆத் தொழுவதும், ஒரு ரமலானில் நோன்பு நோற்றுவிட்டு இன்னொரு ரமலானில் நோன்பு நோற்பதும் அவற்றுக்கிடையிலான பாவங்களுக்குப் பரிகாரமாக அமை கின்றன- பெரும் பாவங்கள் தவிர்க்கப்பட்டால்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்(233)

நபி(ஸல்)அவர்கள் வெள்ளிக்கிழமை பற்றிக் குறிப்பிடும் போது, “வெள்ளிக்கிழமையில் ஒரு நேரம் உண்டு. அந்த நேரத்தில் ஒரு முஸ்லிமான அடியான் தொழுகையில் நின்று அல்லாஹ்விடம் எதையேனும் கேட்டால் அதை அவனுக்கு அல்லாஹ் கொடுக்காமல் இருப்பதில்லை” என்று கூறி விட்டு “அந்நேரம் மிகக் குறைந்த நேரமே” என்பதை தம் கையால் சைகை செய்து காட்டினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),புகாரி(935),முஸ்லிம்(852)

**பயன்கள்:**

1. வாரத்தின் நாட்களிலேயே வெள்ளிக்கிழமை சிறந்த நாளாகும்.

2. ஜும்ஆ தொழுகைக்கு சிறப்பு உண்டு. இது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

3. வெள்ளிக்கிழமையில் ஒரு நேரம் இருக்கிறது. அந்த நேரத்தில் ஒரு முஸ்லிமான அடியான் இறைவனிடம் பிரார்த் தித்தால் அதற்கு அவன் பதிலளிக்காமல் இருப்பதில்லை.

## 23. ஜ□ம்ஆவுக்கு சீக்கிரம் வருவதும் ஜ□ம்ஆவைத் தவறவிடுவதும்

நம்பிக்கை கொண்டோரே! வெள்ளிக்கிழமையன்று தொழுகைக்காக அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டு விட்டு அல்லாஹ்வை நினைவுகூர்வதற்கு விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிகச் சிறந்ததாகும். (62:9)

“வெள்ளிக்கிழமையன்று ஒருவர் கடமையான குளிப்பைப் போன்று குளித்துவிட்டு (முன்னேரத்திலேயே) புறப்பட்டு வந்தால் ஒரு ஒட்டகத்தை குர்பானி கொடுத்தவர் போலாவார். யார் இரண்டாவது நேரத்தில் வருகிறாரோ அவர் ஒரு மாட்டை குர்பானி கொடுத்தவர் போலாவார். மூன்றாம் நேரத்தில் வருபவர் ஒரு கொம்புள்ள ஆட்டைக் குர்பானி கொடுத்தவர் போலாவார். நான்காம் நேரத்தில் வருபவர் ஒரு கோழியை குர்பானி கொடுத்தவர் போலாவார். ஐந்தாம் நேரத்தில் வருபவர் ஒரு முட்டையைக் குர்பானி கொடுத்தவர் போல் ஆவார். இமாம் வந்துவிட்டால் போதனையைக் கேட்க வான வர்கள் அமர்ந்துவிடுகின்றனர்” என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(881),முஸ்லிம்(850)

“ஜும்ஆவை விடுவதிலிருந்து மக்கள் விலகிக்கொள்ளட்டும். இல்லையெனில் அல்லாஹ் அவர்களுடைய உள்ளங்களில் முத்திரையிட்டு விடுவான். பிறகு அலட்சியமாய் இருப்பவர் களாக ஆகிவிடுவார்கள்” என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: முஸ்லிம்(865)

**பயன்கள்:**

1. பாங்கு சப்தம் கேட்டவுடன் ஜும்ஆவுக்கு விரைந்து செல்ல வேண்டும் என்று ஏவப்பட்டுள்ளது.
2. ஜும்ஆவுக்காக முன்னேரத்திலேயே செல்வது சிறப்பு.
3. ஜும்ஆவை விடுவது பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது. அது உள்ளத்தில் முத்திரையிடப்படுவதற்கு காரணமாகிவிடும்.

## 24. வெள்ளிக்கிழமையின் சுன்னத்துகளும் ஒழுக்கங்களும்

“வெள்ளிக்கிழமையன்று ஒருவர் ஸூரதுல் கஹ்ப் ஓதினால் அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆவுக்குமிடையில் அவருக்கு ஒரு பிரகாசம் கிடைக்கின்றது” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி),
நூல்: ஹாகிம்(3392), பைஹகீ குப்ரா(5792)

வெள்ளிக்கிழமையன்று நபி(ஸல்)அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது மக்களின் தோள்களைக் கடந்து ஒருவர் வந்துகொண்டிருந்தார். உடனே அவரை நோக்கி “அமர்வீராக! நீர் ஜும்ஆவுக்குத் தாமதமாக வந்ததோடு மக்களுக்கும் தொல்லை தந்துவிட்டீர்!” என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் புஸ்ரு(ரலி)
நூல்: இப்னுமாஜா(1115),அபூதாவூத்(1118), நஸயீ(1382)

“இமாம் உரை நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது அருகில் இருப்பவரிடம், “பேசாதே” என்று நீ கூறினால் வீணான காரியத்தைச் செய்தவராவாய்” என நபி(ஸல்) கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),புகாரி(934),முஸ்லிம்(851)

“உங்களுடைய நாட்களிலே மிகவும் சிறந்த நாள் ஜும்ஆ நாளாகும். அந்த நாளில் என் மீது அதிகம் ஸலவாத்துச் சொல்லுங்கள். ஏனெனில் நீங்கள் கூறும் ஸலவாத்து எனக்கு எடுத்துக் காட்டப்படும்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அப்போது, “அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் கூறும் ஸலவாத்து உங்களுக்கு எப்படி எடுத்துக்காட்டப்படும்? நீங்களோ மண்ணோடு மண்ணாக மக்கிப் போய்விடுவீர்களே?” என தோழர்கள் கேட்டனர். அதற்கு அவர்கள், “நபிமார்களின் உடல்களை (திண்ண) பூமிக்கு அல்லாஹ் தடைசெய் துள்ளான்” என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அவ்ஸ் பின் அவ்ஸ்(ரலி), அபூதாவூத்(1047)

**பயன்கள்:**

1. ஜும்ஆவுக்கு முன்னேரத்திலேயே வருவது விரும்பத் தக்கது

2. ஜும்ஆ உரையை மௌனமாக இருந்து கேட்பது கடமை.

3. வெள்ளிக்கிழமையன்று கஹ்பு அத்தியாயத்தை ஓதுவது விரும்பத்தக்கது.

4. இந்நாளில் நபி (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்து சொல்வதும் விரும்பத்தக்கதாகும்.

## 25. பெருநாள் தொழுகை (1)

“நோன்புப் பெருநாளில் சில பேரீத்தம் பழங்களை உண்ணாமல் (தொழுகைக்கு) நபி(ஸல்)அவர்கள் புறப்பட மாட்டார்கள்.” அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரி(953) அவற்றை ஒற்றைப்படையில் உண்பார்கள் என மற்றொரு அறிவிப்பில் உள்ளது.

“நபி(ஸல்)அவர்கள் உண்ணாமல் நோன்புப் பெருநாள் தொழுகைக்குச் செல்ல மாட்டார்கள். ஹஜ்ஜுப் பெருநாளில் தொழாமல் உண்ண மாட்டார்கள்” என்று புரைதா(ரலி) அறிவிக்கிறார்கள். நூல்: திர்மிதி(542)

“நபி(ஸல்)அவர்கள், அபூபக்கர்(ரலி), உமர்(ரலி), ஆகியோர் இரு பெருநாட்களிலும் உரை நிகழ்த்துவதற்கு முன் தொழுப வர்களாக இருந்தனர்” என்று இப்னு உமர்(ரலி) அறிவிக்கின் றார்கள். நூல்: புகாரி(963),முஸ்லிம்(888)

“நான் நபி(ஸல்)அவர்களுடன் இரு பெருநாள் தொழுகை களை பாங்கும் இகாமத்தும் இன்றி ஒரு முறை இரு முறை அல்ல (பல முறை) தொழுதிருக்கிறேன்” என்று ஜாபிர் பின் ஸமுரா(ரலி) அறிவிக்கிறார்கள். நூல்: முஸ்லிம்(887)

“நபி(ஸல்)நோன்புப் பெருநாளிலும் ஹஜ்ஜுப் பெருநாளி லும் திடலுக்குச் செல்வார்கள். அவர்கள் முதன் முதலில் தொழுகையையே துவக்குவார்கள். தொழுது முடித்ததும் எழுந்து மக்களை முன்னோக்குவார்கள். மக்கள் அனைவரும் தம் வரிசையில் அப்படியே அமர்ந்திருப்பர். அவர்களுக்குப் போதனை செய்வார்கள். அறிவுரை வழங்குவார்கள்.”

அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), புகாரி(956),முஸ்லிம்(889)

**பயன்கள்:**

1. நோன்புப் பெருநாளில் சாப்பிட்ட பிறகே தொழுகைக்கு புறப்படுவது நபிவழியாகும்.

2. ஹஜ்ஜுப் பெருநாளில் தொழாத வரை சாப்பிடாமல் இருப்பது நபிவழியாகும்.

3. பெருநாள் தொழுகைக்கு பாங்கும் இகாமத்தும் நிர்ண யிக்கப்படவில்லை.

## 26. பெருநாள் தொழுகை (2)

“நபி(ஸல்)பெருநாளன்று இரண்டு ரக்அத் தொழுதார்கள். அதற்கு முன்பும் பின்பும் எதையும் தொழவில்லை”

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி),புகாரி(989),முஸ்லிம்(884)

நபி(ஸல்)அவர்கள் நோன்புப் பெருநாளிலும் ஹஜ்ஜுப் பெருநாளிலும் முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர்களும் இரண்டாம் ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் கூறுவார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) நூல்: அபூதாவூத்(1149)

“நபி(ஸல்)அவர்கள் நோன்புப் பெருநாளிலும் ஹஜ்ஜுப் பெருநாளிலும் “கா.்.ப் வல்குர்ஆனில் மஜீத்” என்ற அத்தியா யத்தையும் “இக்தரபதிஸ் ஸாஆது வன்ஷக்கல் கமர்” என்ற அத்தியாயத்தையும் ஓதுவார்கள்.”

அறிவிப்பவர்: அபூவாகித்(ரலி) நூல்: முஸ்லிம்(891)

“நோன்புப் பெருநாளிலும் ஹஜ்ஜுப் பெருநாளிலும் நபி (ஸல்) அவர்கள் தொழுதுவிட்டு பின்னர் உரை நிகழ்த்தி னார்கள்.” அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரி(957)

**பயன்கள்:**

1. பெருநாள் தொழுகை இஸ்லாமிய வழிமுறையாகும்.
2. அது இரண்டு ரக்அத்தாகும். முதல் ரக்அத்தில் ஏழு தக்பீர்களும் இரண்டாம் ரக்அத்தில் ஐந்து தக்பீர்களும் சொல்ல வேண்டும்.
3. அவ்விரு ரக்அத்துகளில் ஸூரத்து கா.்.ப், ஸூரத்துல் கமர் ஓதுவது விரும்பத்தக்கதாகும்.
4. பெருநாளில் தொழுகைக்குப் பின்னரே குத்பா நடத்த வேண்டும்.

## 27. பெருநாள் தொழுகை (3)

“பெருநாள் வந்துவிட்டால் நபி(ஸல்)அவர்கள் (போவதற் கும் வருவதற்கும்) பாதையை மாற்றிக் கொள்வார்கள்.”

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரி(986)

நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் அன்று கன்னிப் பெண்களையும் மாதவிடாய்ப் பெண்களையும் (திடலுக்குப்) புறப்படச் செய்யும்படி நபி(ஸல்) அவர்கள் எங்களை ஏவினார்கள். மாதவிடாய்ப் பெண்கள் தொழுகையை விட்டும்

விலகியிருப்பார்கள். மேலும் நன்மையான காரியங்களிலும் முஸ்லிம்களின் பிரச்சாரத்திலும் கலந்துகொள்வார்கள் என்றும் நபி(ஸல்)கூறினார்கள். அப்போது ஒரு பெண் "அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருத்திக்கு மேலாடை இல்லாவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டாள். "அதற்கு அவர்கள் அவளது தோழி தனது உபரியான மேலாடையை அவளுக்கு அணியக்கொடுக்கட்டும்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: உம்மு அதிய்யா(ரலி),

நூல்: புகாரி(890),முஸ்லிம்(351)

**பயன்கள்:**

1. பெருநாள் தொழுகைக்கு ஒரு வழியில் சென்று வேறு வழியில் திரும்பி வருவது விரும்பத்தக்கதாகும்.

2. பெருநாள் தொழுகைக்கு பெண்கள் தம்மை முறையாக மறைத்துச் செல்வது விரும்பத்தக்கதாகும்.

## 28. குர்பானி கொடுத்தல்

அவற்றின் மாமிசங்களோ இரத்தங்களோ அல்லாஹ்வை அடைவதில்லை. மாறாக உங்களிடமுள்ள (இறை) அச்சமே அவனைச் சென்றடையும். (22:37)

"நபி(ஸல்)அவர்கள் கருப்பும் வெள்ளையும் கலந்த நிறமுள்ள கொம்புள்ள இரண்டு செம்மறி ஆடுகளைக் குர்பானி கொடுத்தார்கள். அதன் கழுத்தில் தமது காலை வைத்து தக்பீர் கூறி தம் கரத்தாலேயே அறுத்தார்கள்."

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), புகாரி(5565),முஸ்லிம்(1966)

என் மாமா அபூபுர்தா(ரலி)தொழுகைக்கு முன்பே குர்பானி கொடுத்து விட்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், “அது இறைச்சிக்காகக் கொடுக்கப்பட்ட ஆடாகும்” எனக் கூறினார்கள். உடனே அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! “என்னிடம் ஒரு வயது பூர்த்தியான வெள்ளாடு இருக்கிறது (அதைக் கொடுக்கலாமா?)” எனக் கேட்டார்கள். “அதை குர்பானி கொடு. உன்னைத் தவிர வேறு யாருக்கும் அது கூடாததாகும்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறி விட்டு, “யார் தொழுகைக்கு முன்பாகவே குர்பானி கொடுத்தாரோ அவர் தனக்காக அறுத்துக் கொண்டவராவார். தொழுகைக்குப் பின்பு யார் குர்பானி கொடுத்தாரோ அவருடைய குர்பானி கூடிவிடும். மேலும் அவர் முஸ்லிம்களின் வழிமுறையை எடுத்து நடந்த வராவார்” என்றும் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அல்பர்ராஉ(ரலி), புகாரி(5556),முஸ்லிம்(1161)

“இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வயதுடைய பிராணிகளையே குர்பானி கொடுங்கள். அவை கிடைக்கவில் லையானால் ஒரு வயது பூர்த்தியான செம்மறி ஆட்டைக் கொடுங்கள்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(1963)

**பயன்கள்:**

1. குர்பானி கொடுப்பது இஸ்லாமிய வழிமுறையாகும்.
2. குர்பானி கொடுப்பவர் தனது குர்பானியைத் தானே அறுப்பது விரும்பத்தக்கதாகும்.
3. தொழுகைக்குப் பின்னரே அறுக்க வேண்டும்.

## 29. கிரகணத் தொழுகை

அபூபக்கர்(ரலி) கூறியதாவது: நாங்கள் நபி(ஸல்) அவர் களிடம் இருந்தபோது சூரியகிரகணம் ஏற்பட்டது. உடனே நபி (ஸல்) அவர்கள் தமது ஆடையை இழுத்துக் கொண்டு பள்ளிக்குள் நுழைந்தார்கள். நாங்களும் நுழைந்தோம். கிரகணம் விலகும் வரை எங்களுக்கு இரண்டு ரக்அத் தொழு வித்தார்கள். பிறகு “எவரது மரணத்திற்காகவும் சூரினுக்கும் சந்திரனுக்கும் கிரகணம் பிடிப்பதில்லை. நீங்கள் கிரகணங் களைக் கண்டால் அவை விலகும் வரை தொழுங்கள் துஆச் செய்யுங்கள்” என்று கூறினார்கள். (புகாரி-1040)

நபி(ஸல்)அவர்கள் காலத்தில் சூரியகிரகணம் ஏற்பட்டது. மக்களுக்கு நபி(ஸல்)அவர்கள் தொழுகை நடத்தினார்கள். (அத்தொழுகையில்) நீண்ட நேரம் நின்றார்கள். நீண்ட நேரம் ருகூ.். செய்தார்கள். (ருகூவிலிருந்து) எழுந்து நீண்ட நேரம் நின்றார்கள். இது முதல் நிலையை விடக் குறைந்ததாக இருந்தது. பின்னர் மற்றொரு ருகூ.். செய்தார்கள். அதை நீண்ட நேரம் செய்தார்கள். இது முதல் ருகூ.்.வை விடவும் குறைந்ததாக இருந்தது. பின்னர் நீண்ட நேரம் ஸஜ்தா செய்தார்கள். பின்னர் முதல் ரக்அத்தில் செய்தது போலவே இரண்டாம் ரக்அத்திலும் செய்து தொழுது முடித்தார்கள். அப்போது கிரகணம் விலகியிருந்தது.

பின்னர் மக்களுக்கு உரையாற்றினார்கள்.(அவ்வுரையில்) அல்லாஹ்வைப் புகழ்ந்து போற்றிவிட்டு “சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இரு அத்தாட்சிகளாகும். எவரது மரணத்திற்காகவோ எவரது வாழ்வுக்காகவோ அவற்றுக்கு கிரகணம் பிடிப்பதில்லை. கிரகணத்தை நீங்கள் காணும்போது அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் அவனைப் பெருமைப்படுத்துங்கள் தொழுங்கள் தர்மம் செய்யுங்கள்

என்று குறிப்பிட்டார்கள்." மேலும் தொடர்ந்து "முஹம்மதின் சமுதாயமே! ஒரு ஆணோ பெண்ணோ விபச்சாரம் செய்யும் போது அல்லாஹ் கடுமையாக ரோசம் கொள்கிறான். முஹம்மதின் சமுதாயமே! நான் அறிவதை நீங்கள் அறிந்தால் குறைவாகச் சிரித்து அதிகமாக அழுவீர்கள் என்றும் குறிப்பிட் டார்கள்." அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), புகாரி(1044)

நபி(ஸல்)அவர்களின் காலத்தில் சூரியகிரகணம் ஏற்பட்ட போது "அஸ்ஸலாத்து ஜாமிஆ" (தொழுகைக்கு தயாரா குங்கள்) என்று அழைப்புக் கொடுக்கப்பட்டது.

அறிவிப்பவர்: இப்னு அம்ரு(ரலி) நூல்: புகாரி(1045)

**பயன்கள்:**

1. கிரகணம் ஏற்படும்போது கிரகணத் தொழுகை நிறை வேற்றுவது விரும்பத்தக்கது.

2. அதற்காக அஸ்ஸலாத்து ஜாமிஆ (தொழுகைக்குத் தயாராகுங்கள்) என்று அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

3. அத்தொழுகை நீண்ட இரண்டு ரக்அத்தைக் கொண்டது. ஒவ்வொன்றிலும் இரண்டு ருகூவுகள் உள்ளன.

4. தொழுகைக்குப் பின்னர் இமாம் மக்களுக்குப் போதனை செய்வது விரும்பத்தக்கது.

## 30. மழை வேண்டுதல்

### ஜ□ம்ஆ குத்பாவில் மழை வேண்டுதல்:

ஜும்ஆ நாளில் நபி(ஸல்)அவர்கள் நின்று உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது மிம்பர் திசையிலுள்ள வாசல் வழியாக ஒருவர் வந்தார். நின்றவாறே நபி(ஸல்)அவர்களை நோக்கி, "அல்லாஹ்வின் தூதரே! கால்நடைகள் அழிந்து விட்டன!

பாதைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன! எனவே எங்களுக்கு மழை பொழியச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்!" என்று கேட்டார்.நபி(ஸல்)அவர்கள் தமது கைகளை உயர்த்தி, "இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக! இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக! இறைவா! எங்களுக்கு மழை பொழியச் செய்வாயாக!" என்று பிரார்த்தித்தார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக வானத்தில் திரண்ட மேகத்தையோ பிரிந்துகிடக்கும் மேகங்களையோ இன்னும் (மழைக்குரிய) எந்த அறிகுறியையும் நாங்கள் காணவில்லை. எங்களுக்கும்(மதினாவுக்கும்)ஸல்ஃ. எனும் மலைக்குமிடையே எந்த வீடும் கட்டிடமும் இருக்கவில்லை. (வெட்ட வெளியாக இருந்தது) அப்போது அம்மலைக்குப் பின்புறமிருந்து கேடயம் போன்று ஒரு மேகம் தோன்றி வானத்தின் மையப் பகுதிக்கு வந்து சிதறி மழை பொழிந்தது.அல்லாஹ்வின் மீது சத்தியமாக ஆறு நாட்கள் சூரியனையே நாங்கள் பார்க்கவில்லை.

அடுத்த ஜும்ஆவில் நபி(ஸல்) அவர்கள் நின்று உரை நிகழ்த்தும்போது ஒரு மனிதர் அதே வாசல் வழியாக வந்தார். நின்றவாறே நபி(ஸல்)அவர்களை நோக்கி, "அல்லாஹ்வின் தூதரே! செல்வங்கள் அழிந்துவிட்டன! பாதைகள் துண்டிக்கப் பட்டுவிட்டன! எனவே மழையை நிறுத்துமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள் என்றார்." உடனே நபி(ஸல்)அவர்கள் தம் கைகளை உயர்த்தி, "இறைவா! எங்கள் சுற்றுப் புறங்களில் இம்மழையைப் பொழியச் செய்வாயாக! எங்களுக்குப் பாதகமாக இதை நீ ஆக்கிவிடாதே! இறைவா! மணற் குன்றுகள், மலைகள், ஓடைகள், விளை நிலங்கள் ஆகிய

வற்றின் மீதும் இம்மழையைப் பொழியச் செய்வாயாக!” என்று பிரார்த்தித்தார்கள். உடனே மழை நின்றது நாங்கள் வெயிலில் நடந்து சென்றோம். அறிவிப்பவர்: அனஸ்(ரலி),
நூல்: புகாரி(1013),முஸ்லிம்(897)

**பயன்கள்:**

1. இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்களின் தூதுத்து வத்திற்கான சான்று உள்ளது.
2. ஜும்ஆ குத்பாவில் மழையை வேண்டி பிரார்த்திப்பதற்கு மார்க்கம் அனுமதித்துள்ளது.
3. மழையால் மக்கள் அவதிப்படும்போது அதை நிறுத்து மாறு இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும் என்று கூறுகின்றது.

## 31. மழைத் தொழுகை

“நபி(ஸல்)அவர்கள் மழையை வேண்டிப் பிரார்த்தித்ததை நான் பார்த்திருக்கிறேன். கிப்லாவை நோக்கி துஆச் செய்தார்கள். தமது மேலாடையை மாற்றிப் போட்டுக் கொண் டார்கள். பின்னர் சப்தமாக ஓதி இரண்டு ரக்அத் தொழுவித் தார்கள்”என அப்துல்லாஹ் பின் ஸைத்(ரலி)அறிவிக்கிறார்கள்.
நூல்: புகாரி(1024),முஸ்லிம்

மழைக்குப் பஞ்சம் ஏற்பட்டதை நபி(ஸல்)அவர்களிடம் மக்கள் முறையிட்டனர். அவர்கள் மிம்பரைக் கொண்டு வருமாறு பணித்தார்கள். அவர்களுக்காக தொழும் திடலில் அது வைக்கப்பட்டது. மக்கள் எல்லோரும் புறப்பட்டு வர வேண்டும் என்று ஒரு நாளை நிர்ணயம் செய்தார்கள். பிறகு (குறிப்பிட்ட அந்த நாளில்) சூரியனில் நன்கு வெளிச்சம் வந்ததும் நபி(ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்று மிம்பரில் அமர்ந்தார்கள். “தக்பீர் சொல்லி அல்லாஹ்வைப் புகழ்ந்து,

நீங்கள் உங்கள் ஊரில் ஏற்பட்ட பஞ்சத்தையும் உங்களுக்குப் பொழிய வேண்டிய நேரத்திலிருந்து மழை பிந்திவிட்டதையும் முறையிட்டீர்கள். கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ் அவனிடம் பிரார்த்திக்குமாறு உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். உங்கள் பிரார்த்தனைக்குப் பதிலளிப்பதாகவும் வாக்களித்துள்ளான்" எனக் கூறினார்கள்.

பிறகு "அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் அர்ரஹ்மானிர் ரஹீம் மாலிகி யவ்மித்தீன், லாயிலாஹ இல்லல்லாஹு யஃப்அலு மாயுரீத், அல்லாஹும்ம அன்தல்லாஹ் லாயிலாஹ இல்லா அன்தல் கனிய்யு வநஹ்னுல் ஃபுகரா, அன்ஸில் அலைனல் கைஸ், வஜ்அல் மாஅன்ஸல்த்த லனா குவ்வதன் வபலாகன் இலாஹீன்."

اَلْحَمْدُ للهِ رَبِّ الْعَالَمِيْنَ اَلرَّحْمنِ الرَّحِيْمِ مَالِكِ يَوْمِ الدِّيْنِ لاَإِلَهَ إِلاَّ اللهُ يَفْعَلُ مَا يُرِيْدُ اَللَّهُمَّ أَنْتَ اللهُ لاَ إِلهَ إِلاَّ أَنْتَ الْغَنِيُّ وَنَحْنُ الْفُقَرَاءُ أَنْزِلْ عَلَيْنَا الْغَيْثَ وَاجْعَلْ مَا أَنْزَلْتَ لَنَا قُوَّةً وَبَلاَغًا إِلَى حِيْنٍ

(பொருள்: அகிலஉலகையும் (படைத்து) பரிபாலிக்கின்ற அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் நினைத்ததைச் செய்பவன். இறைவா! நீயே அல்லாஹ். வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீ தேவையற்றவன். நாங்கள் தேவையுடையோர். எங்கள் மீது மழையைப் பொழியச் செய்வாயாக! நீ பொழியச் செய்யும் அம்மழையை எங்களுக்குப் பயனுள்ள

தாகவும் காலமெல்லாம் அப்பயனை நாங்கள் அடைவ தற்கான துணையாகவும் ஆக்கிவைப்பாயாக!)

என்று கூறி தமது அக்குள் வெண்மை காணப்படு அளவுக்கு தமது கைகளை உயர்த்தினார்கள். பின்பு மக்களின் பக்கம் தம் முதுகைத் திருப்பி தமது மேலாடையை மாற்றிப் போட்டுக் கொண்டார்கள். தமது கைகளையும் உயர்த்தினார்கள்.பின்னர் மக்களை நோக்கித் திரும்பி (மிம்பரிலிருந்து) இறங்கி இரண்டு ரக்அத் தொழு வித்தார்கள். இறைவன் மேகத்தை உருவாக் கினான். இடியும் மின்னலும் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அல்லாஹ்வின் உதவியால் மழை பொழிந்தது.

வெள்ளம் வழிந்தோட நபி(ஸல்)அவர்கள் (மைதானத்தி லிருந்து) பள்ளிக்கு வந்தார்கள். மக்கள் தம் இல்லங்களை நோக்கி விரைந்து செல்வதை அவர்கள் பார்த்தபோது தம் கடவாய்ப் பற்கள் தெரியும் அளவுக்கு சிரித்தார்கள். “அல்லாஹ் அனைத்தின் மீதும் பேராற்றலுள்ளவனாக இருக் கின்றான். நான் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும் ஆவேன் என நான் சாட்சி சொல்கிறேன்” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), அபூதாவூத்(1173)

“ஒரு நாள் மழையை வேண்டுவதற்காக நபி(ஸல்)அவர்கள் புறப்பட்டார்கள். பாங்கு இகாமத்து இல்லாமல் எங்களுக்கு இரண்டு ரக்அத் தொழுவித்தார்கள். பின்பு எங்களுக்கு குத்பா- உரை நிகழ்த்தினார்கள்.(அதில்) தமது முகத்தை கிப்லாவின் பக்கம் திருப்பி தம் இரு கைகளையும் உயர்த்தி அல்லாஹ் விடம் பிரார்த்தித்தார்கள். தமது மேலாடையை வலப்புறத்தை இடப்புறமாகவும் இடப் புறத்தை வலப் புறமாகவும் மாற்றிப் போட்டுக் கொண்டார்கள்.” அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: இப்னுமாஜா(1268)

நபி(ஸல்)அவர்கள் அடக்கமாகவும் பணிவாகவும் சாதாரண ஆடை அணிந்தவர்களாகவும் (மழையை வேண்டுவதற்காக) புறப்பட்டார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி),

நூல்: திர்மிதி(558)

**பயன்கள்:**

1. மழைத் தொழுகை குத்பாவுடன் இரண்டு ரக்அத் தொழுவது விரும்பத்தக்கதாகும்.
2. மழையை வேண்டிய பிறகு மேலாடையை மாற்றிப் போட்டுக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.
3. தொழுகைக்கு முன்போ பின்போ உரை நிகழ்த்தலாம்.
4. பணிவாகவும் அடக்கமாகவும் (தொழுகைக்கு) புறப்படு வதும் விரும்பத்தக்கதே.

## 32. மழை பற்றிய சில சட்டங்கள்

**மழையைப் பார்த்தால் இன்னின்ன நட்நத்திரங்களால் தான் மழை பொழிந்தது என்று சொல்வது கூடாது. மாறாக வேறு என்ன சொல்ல வேண்டும்.?**

ஸைத் பின் காலித்(ரலி)கூறியதாவது: நபி(ஸல்)அவர்கள் ஒரு இரவு மழை பொழிந்த பின் ஹுதைபிய்யா எனுமிடத்தில் எங்களுக்கு சுப்ஹு தொழுவித்தார்கள். தொழுது முடித்ததும் மக்களை நோக்கி, “உங்கள் இறைவன் என்ன கூறினான் என அறிவீர்களா?” என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், “அல்லாஹ் வும் அவன் தூதருமே நன்கறிந்தவர்கள்” என்றனர். அப்போது நபி(ஸல்)அவர்கள், “என் அடியார்களில் என்னை நம்பியவர் களும் என்னை நிராகரிப்பவர்களும் இருக்கின்றனர். யார் அல்லாஹ்வின் அருளால் அவனது கருணையால் எங்களுக்கு

மழை பொழிந்தது என்று கூறுகிறாரோ அவரே என்னை நம்பியவர்; நட்சத்திரங்களை நிராகரித்தவர். இன்னின்ன நட்சத் திரங்களால் எங்களுக்கு மழை பொழிந்தது என்று யார் கூறுகிறாரோ அவர் என்னை நிராகரித்து நட்சத்திரங்களை நம்பியவர்" என்று அல்லாஹ் கூறியதாகக் குறிப்பிட்டார்கள்.

நூல்: புகாரி(1038), முஸ்லிம்(71)

நபி(ஸல்)அவர்கள் மழையைக் காணும்போது "அல்லா ஹும்ம ஸய்யிபன் நா.:.பிஆ" اَللَّهُمَّ صَيِّبًا نَافِعًا (இறைவா! இந்த மழையை பயனுள்ள மழையாக ஆக்குவாயாக!) என்று கூறுவார்கள் என ஆயிஷா (ரலி) கூறினார்கள்.(புகாரி-1032)

**மழை எப்போது வருமென்பதை யாரறிவார்?**

"ஐந்து காரியங்களை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது. நாளை என்ன நடக்கும் என்பதை எவரும் அறிய முடியாது. கருவறைகளில் உள்ள நிலைமைகளை எவரும் அறிய முடியாது. தாம் நாளை எதைச் சம்பாதிப்போம் என்பதை யாரும் அறிய முடியாது. தாம் எப்போது மரணிப் போம் என்பதை யாரும் அறிய முடியாது. மழை எப்போது வரும் என்பதையும் எவரும் அறிய முடியாது" என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி),

நூல்: புகாரி(1039)

**பயன்கள்:**

1. இந்த நட்சத்திரத்தால்தான், அல்லது இந்த நட்சத்திரம் இந்த இடத்துக்கு வந்ததால் தான் எங்களுக்கு மழை பொழிந்தது என்று கூறுவது விலக்கப்பட்டதாகும். மாறாக அல்லாஹ்வின் அருளால் அவனுடைய கருணையால் எங்களுக்கு மழை பொழிந்தது என்று கூற வேண்டும்.

2. மழையைக் காணும்பொழுது அல்லாஹும்ம ஸய்யிபன் நா.்.பிஆ- இறைவா! பயனுள்ள மழையாக ஆக்குவாயாக! என்று கூறுவது விரும்பத்தக்கதாகும்.

3. மழை பொழிவதென்பது மறைவான விஷயங்களில் ஒன்றாகும். மறைவான விஷயங்களை நுட்பமாகவும் வரை யறுத்தும் அல்லாஹ்வைத் தவிர யாராலும் அறிய முடியாது.

## 33. நல்லதை நாடித் தொழுதல் (இஸ்திகாரா)

நபி(ஸல்)அவர்கள் திருக்குர்ஆனின் அத்தியாயங்களை எங்களுக்குக் கற்றுத் தந்ததுபோல எல்லா காரியங்களிலும் நல்லதைத் தேர்வு செய்யும் முறையையும் கற்றுத் தந்தார்கள். அவர்கள் கூறியதாவது: “உங்களில் ஒருவர் ஏதேனும் ஒரு காரியத்தை நாடினால் கடமையல்லாத இரண்டு ரக்அத் தொழட்டும். பிறகு

اَللَّهُمَّ إِنِّي أَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلاَ أَقْدِرُ وَتَعْلَمُ وَلاَ أَعْلَمُ وَأَنْتَ عَلاَّمُ الْغُيُوْبِ اَللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ خَيْرٌ لِيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ أَمْرِيْ أَوْ عَاجِلِ أَمْرِيْ وَآجِلِهِ فَاقْدُرْهُ لِيْ وَيَسِّرْهُ لِيْ ثُمَّ بَارِكْ لِيْ فِيْهِ وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الْأَمْرَ شَرٌّ لِيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ أَمْرِيْ أَوْ فِيْ عَاجِلِ أَمْرِيْ وَآجِلِهِ فَاصْرِفْهُ عَنِّيْ وَاصْرِفْنِيْ عَنْهُ وَاقْدُرْهُ لِيَ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِيْ بِهِ

“அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீருக பிஇல்மிக வஅஸ்தக் திருக பிகுத்ரதிக வஅஸ்அலுக மின் .்.பழ்லிகல் அழீம் .்.பஇன்னக தக்திரு வலா அக்திரு வத.்.லமு வலா அ.்.லமு

வஅன்த அல்லாமுல் குயூப், அல்லாஹுஉம்ம இன்குன்த த.ஃ.லமு அன் னஹாதல் அம்ர கைருன்லீ .ஃ.பீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ அவ் ஆஜிலி அம்ரீ வஆஜிலிஹி .ஃ.பக்துர்ஹுஉலீ வயஸ் ஸிர்ஹுஉலீ ஸுஉம்ம பாரிக்லீ .ஃ.பீஹ், அல்லாஹுஉம்ம இன்குன்த த.ஃ.லமு அன்ன ஹாதல் அம்ர ஷர்ருன்லீ .ஃ.பீ தீனீ வமஆஷீ வஆகிபதி அம்ரீ அவ் .ஃ.பீ ஆஜிலி அம்ரீ வஆஜிலிஹி .ஃ.பஸ் ரி.ஃ.ப்ஹுஉ அன்னீ வஸ்ரி.ஃ.ப்னீ அன்ஹுஉ வக்துர்ஹுஉலீ அல்கைர ஹைஸுஉகான ஸுஉம்ம அர்ழினீ பிஹி" என்று கூறட்டும்."

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: புகாரி(1162)

(பொருள்: இறைவா! உனது அறிவைக் கொண்டு உன்னிடம் நல்லதை வேண்டுகிறேன். உன் ஆற்றலைக் கொண்டு உன் னிடம் வல்லமையை வேண்டுகிறேன். உனது மகத்தான அருளையும் உன்னிடம் வேண்டுகிறேன். நீ அனைத்திற்கும் ஆற்றலுள்ளவன். நான் ஆற்றலுள்ளவன் அல்லன். நீ யாவற் றையும் அறிந்தவன். நான் அறிந்தவன் அல்லன். மறைவான வற்றையும் அறிபவன் நீ. இறைவா! எனது இந்தக் காரியம் எனது மார்க்கத்திற்கும் எனது வாழ்க்கைக்கும் எனது மறுமைக்கும் சிறந்தது என நீ கருதினால் அதற்குரிய ஆற்றலை எனக்குத் தா! அதை எனக்கு எளிதாக்கு. பின்னர் அதில் எனக்கு பரகத் செய். இக்காரியம் எனது மார்க்கத் திற்கும் எனது வாழ்க்கைக்கும் எனது மறுமைக்கும் கெட்டது என நீ கருதினால் என்னை விட்டு இந்தக் காரியத்தையும் இந்தக் காரியத்தை விட்டு என்னையும் திருப்பிவிடு. எப்படி இருந்தாலும் எனக்கு நல்ல வற்றுக்கு ஆற்றலைத்தா!)

**பயன்கள்:**

1. ஒரு முஸ்லிம் ஒரு காரியத்தைச் செய்ய நாடும்போது அதன் முடிவு என்னவென்று தெரியாதபோது இஸ்திகாரா

தொழுவது விரும்பத்தக்கதாகும்.

2. அனைத்து காரியங்களுக்கும் இவ்வாறு தொழலாம். அக்கா ரியத்தைச் செய்ய தீர்மானிப்தற்கு முன் தொழ வேண்டும்

## 34. அநாதையைப் பராமரித்தல், அவர்களிடம் இரக்கம் காட்டல்

அல்லாஹ் கூறுகிறான்: எனவே நீர் அநாதைகளை அடக்குமுறை செய்யாதீர். (93:9)

அவனை நேசித்ததற்காக ஏழைக்கும் அநாதைக்கும் சிறைப்பட்டவருக்கும் உணவளிக்கிறார்கள். (76:8)

“நானும் அநாதையைப் பராமரிப்பவரும் சொர்க்கத்தில் இவ்வாறு இருப்போம்” என நபி(ஸல்)அவர்கள் தமது ஆள் காட்டி விரலையும் நடுவிரலையும் சுட்டிக்காட்டி கூறினார்கள். இரு விரல்களுக்கிடையேயும் சிறிது இடைவெளி விட்டிருந் தார்கள். அறிவிப்பவர்: ஸ.ஃ.து(ரலி), நூல்: புகாரி(5304)

“நானும் அநாதையைப் பராமரிப்பவரும்- அந்த அநாதை சொந்தத்தில் உள்ள அல்லது சொந்தத்தில் அல்லாத அநாதையாக இருந்தாலும் சரி- சொர்க்கத்தில் இவ்வாறு இருப்போம்” என்று நபி(ஸல்)அவர்கள் தமது ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் காட்டிக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்(2983)

**பயன்கள்:**

1. அநாதைகளைப் பராமரிப்பது சிறப்பானதாகும். அதற்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளது.

2. இது சுவனத்தில் நுழைவதற்கும் அதில் அந்தஸ்துகள் உயர்வதற்கும் காரணமாக அமைகின்றது

3. இங்கு அநாதை என்பது சொந்தத்தில் உள்ள அல்லது சொந்தம் அல்லாத எல்லா அநாதைகளையும் குறிக்கும்.

## 35. அநாதைகளின் பொருளை உண்பது குறித்த எச்சரிக்கை

அநாதைகளின் சொத்துகளை அநியாயமாக உண்போர் தமது வயிறுகளில் நெருப்பையே உண்ணுகின்றனர். மேலும் அவர்கள் நரகில் நெருப்பில் நுழைவார்கள். (4:10)

“நாசத்தைத் தரக்கூடிய ஏழு காரியங்களை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்” என நபி(ஸல்)அவர்கள் கூறியதும் “அல்லாஹ்வின் தூதரே! அவை என்னென்ன?” என்று தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்)அவர்கள், “அல்லாஹ்வுக்கு இணை வைப்பது, சூனியம் செய்வது, அல்லாஹ் கண்ணியத்திற்குரியதாக்கிய உயிரை நியாய மின்றிக் கொல்வது, வட்டி உண்பது, அனாதையின் பொருளை உண்பது, போர்க்களத்தில் புறமுதுகு காட்டுவது, மு.்.மினான கற்புள்ள அப்பாவிப் பெண்களை அவதூறு சொல்வது” ஆகிய வையாகும். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)

நூல்: புகாரி(2766),முஸ்லிம்(89)

“இறைவா! அநாதை, பெண் ஆகிய இரு பலவீனர்களின் உரிமையை கண்ணியத்திற்குரியதாய் ஆக்குகிறேன்!” என நபி (ஸல்)கூறினார்கள். அறிவிப்பவர்: குவைலித் பின் உமர்(ரலி),

நூல்: இப்னுமாஜா(3678)

**பயன்கள்:**

1. அநாதையின் பொருளை அநியாயமாக உண்பது பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது.

2. இவ்வாறு செய்வது நாசத்தைத் தரக்கூடிய பெரும் பாவங்களில் ஒன்றாகும்.

## 36. ஒருவர் யாரை நேசிக்கிறாரோ அவர் அவருடனே இருப்பார்

ஒரு கிராமவாசி நபி(ஸல்)அவர்களிடம் "கியாமத் நாள் எப்போது?" என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அவரிடம் நீ "அந்த நாளுக்காக எதைத் தயார்படுத்தி வைத் திருக்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கவர், "அல்லாஹ் வையும் அவன் தூதரையும் நேசிப்பதைத் தவிர வேறொன்றும் இல்லை" என்றார். உடனே நபி(ஸல்)அவர்கள், "நீ யாரை நேசித்தாயோ அவருடன் இருப்பாய்" எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), புகாரி(3688),முஸ்லிம்(2639)

ஒரு மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! ஒரு மனிதர் ஒரு கூட்டத்தை நேசிக்கிறார். ஆனால் அவர்களை(அவர்களின் அந்தஸ்தை)அவர் அடையவில்லை. இவரைப் பற்றி உங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "ஒருவர் யாரை நேசிக்கிறாரோ அவருடன் அவர் இருப்பார்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி),
புகாரி(6169),முஸ்லிம்(2641)

"ஆன்மாக்கள் ஒன்றுடன் மற்றொன்று இணைந்து கொள்ளும் இயல்புடையன. அவை நல்ல ஆன்மாக்களைக் கண்டால் அவற்றுடன் சேர்ந்து கொள்ளும். தீய ஆன்மாக் களைக் கண்டால் விலகிவிடும்" என நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), முஸ்லிம்(2638)

**பயன்கள்:**

1. நல்லவர்களை நேசிப்பது சிறப்பிற்குரியது. இது சொர்க் கத்தில் அவர்களுடன் இருப்பதற்குக் காரணமாக அமை கின்றது. மற்ற அமல்கள் (வழிபாடுகள்) குறைவாக இருந்தாலும் சரியே!

2. தீயவர்களை, காபிர்களை நேசிப்பது அபாயகரமானது.

3. ஒருவர் எந்தக் கூட்டத்தை நேசிக்கிறாரோ மறுமையில் அவர்களுடன் இருப்பார்.

## 37. உருவங்களை வரைதல் மற்றும் உருவப்படங்கள் பற்றிய சட்டம்

“நாய்களும் உருவப்படங்களும் இருக்கின்ற வீட்டில் வானவர்கள் நுழைய மாட்டார்கள்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதல்ஹா(ரலி),

நூல்: புகாரி(3322),முஸ்லிம்(2106)

“கியாமத் நாளில் திண்ணமாக அல்லாஹ்விடத்தில் கடுமை யான வேதனைக்குரியவர்கள் உருவங்களை வரையக்கூடிய வர்களே” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி),

நூல்: புகாரி(5950),முஸ்லிம்(2109)

ஆயிஷா(ரலி) அவர்கள் திரைச்சீலை ஒன்றை வாங்கி னார்கள் அதில் உருவப்படங்கள் இருந்தன. அதைப் பார்த் ததும் நபி(ஸல்) அவர்கள் வீட்டிற்குள் வராமல் வாசலிலேயே நின்றுவிட்டனர். அவர்கள் முகத்தில் வெறுப்பு தென்பட்டதைப் பார்த்து ஆயிஷா(ரலி) அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்விடத்திலும் அவன் தூதரிடத்திலும் மன்னிப்புக்

கோருகிறேன். நான் செய்த பாவம் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கவர்கள் "இது என்ன சீலை?" எனக் கேட்கவும், "நீங்கள் அமர்வதற்காகவும் தலையணையாகவும் ஆக்கிக் கொள்வதற்காகவும் அதை வாங்கினேன்" என ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது நபி(ஸல்)அவர்கள், "இந்த உருவங்களைத் தீட்டியவர்கள் மறுமையில் வேதனை செய்யப்படுவார்கள். "நீங்கள் படைத்தவற்றுக்கு உயிர் கொடுங்கள்" என அவர்களிடம் கூறப்படும்" என்று கூறிவிட்டு "உருவப் படங்கள் இருக்கின்ற வீட்டில் வானவர்கள் நுழைய மாட்டார்கள்" எனவும் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி),

நூல்: புகாரி(5961), முஸ்லிம்(2107)

**பயன்கள்:**

1. உருவங்கள் வரைவது விலக்கப்பட்டதாகும். அது பெரும் பாவகளில் ஒன்றாகும்.
2. உருவப்படங்கள் இருக்கின்ற வீட்டில் வானவர்கள் நுழைய மாட்டார்கள்.
3. உருவங்கள் வரைபவர்களே மறுமையில் கடுமையான வேதனைக்குரியவர்கள்.

## 38. கனவுகள்

"நுபுத்துவத்தில் நற்செய்தி கூறக்கூடியவைகளைத் தவிர வேறெதுவும் எஞ்சியிருக்கவில்லை" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அப்போது "நற்செய்தி கூறக்கூடியவைகள் என்றால் என்ன?" என நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு "நல்ல கனவுகள்" என நபி(ஸல்) விடையளித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி (6990)

“நல்ல கனவுகள் அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் தீய கனவுகள் ஷைத்தானின் புறத்திலிருந்தும் ஏற்படுகின்றன. உங்களில் எவரேனும் தான் விரும்பாத கனவைக் கண்டால் இடப் புறம் மூன்று தடவை துப்பிவிட்டு அல்லாஹ்விடம் அதன் தீங்கை விட்டும் பாதுகாப்புத் தேடட்டும். நிச்சயமாக அதனால் அவனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி)

நூல்: புகாரி(7005),முஸ்லிம்(2261)

“காணாத(அல்லது கண்ட)கனவு விஷயத்தில் யார் பொய் சொல்கிறாரோ அவர் (மறுமையில்) இரண்டு கோதுமைகளை சேர்த்துக் கட்டுமாறு வற்புறுத்தப்படுவார். அவரால் கட்ட முடியாது” என் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரி(7042)

**பயன்கள்:**

1. நல்ல கனவுகளுக்கு முக்கியத்துவம் இருக்கின்றன. அவை நுபுத்துவத்தில் மேலும் நற்செய்தி கூறக்கூடியவை களில் ஒன்றாக இருக்கின்றன.
2. நல்ல கனவுகள் அல்லாஹ்விடமிருந்தும் கெட்ட கனவுகள் ஷைத்தானிடமிருந்தும் ஏற்படுகின்றன.
3. கனவு விஷயத்தில் பொய் சொல்பவருக்கு கடுமையான வேதனையுண்டு.

## 39. கனவுகளுக்குரிய ஒழுக்கங்கள்

நல்ல கனவுகள் அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் தீய கனவுகள் ஷைத்தானின் புறத்திலிருந்தும் ஏற்படுவனவாகும். உங்களில் எவரேனும் தான் விரும்பாத கனவைக் கண்டால்

இடது புறம் மூன்று தடவை துப்பிவிட்டு அல்லாஹ்விடம் அதன் தீங்கைவிட்டும் பாதுகாப்புத் தேடட்டும். நிச்சயமாக அதனால் அவனுக்கு எந்த தீங்கும் ஏற்படாது" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் "அவன் எந்தப் பக்கம் படுத்திருக்கின்றானோ அதிலிருந்து திரும்பிப் படுத்துக் கொள்ளட்டும்" என்றும் நபி(ஸல்)அவர்கள் கூறியதாக உள்ளது. அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி),
நூல்: புகாரி(7005),முஸ்லிம்(2261)

"உங்களில் ஒருவர் தனக்கு விருப்பமான கனவைக் கண்டால் அது இறைவன் புறத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அவர் இறைவனைப் புகழ்ந்து அக்கனவை மற்ற வரிடம் கூறட்டும். தான் விரும்பாத ஒரு கனவைக் கண்டால் அது ஷைத்தான் புறத்திலிருந்து ஏற்பட்டிருக்கின்றது. அதன் தீங்கை விட்டும் இறைவனிடம் அவர் பாதுகாப்புத் தேடட்டும். அக்கனவை யாரிடமும் கூற வேண்டாம். அதனால் அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது" என்று நபி(ஸல்) கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: புகாரி(7045)

"உங்களில் ஒருவரின் உறக்கத்தில் ஷைத்தான் விளையா டினால் அதை எந்த மனிதருக்கும் அவர் கூற வேண்டாம்" என நபி(ஸல்)அவர்கள் தமது உரையின்போது கூறியதை நான் செவியுற்றேன். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), முஸ்லிம்(2268)

**பயன்கள்:**

1. ஒரு முஸ்லிம் தான் விரும்பாத ஒரு கனவைக் கண்டால் இடது புறம் மூன்று தடவை துப்பிவிட்டு அக்கனவின் தீங்கை விட்டும், (இன்னும் புகாரி(7044)-ல் வந்துள்ளதுபோல) ஷைத்தானின் தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத்

தேட வேண்டும். மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொள்ளவும் வேண்டும்.

2. ஒரு முஸ்லிம் தான் விரும்பாத கனவைக் கண்டால் அதை யாரிடமும் சொல்லக்கூடாது. நிச்சயமாக அதனால் அவனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

3. ஒரு முஸ்லிம் தான் கண்ட அர்த்தமற்ற கனவுகளை மற்றவர்களிடம் கூறக்கூடாது. அவை ஷைத்தானுடைய திருவிளையாடலாகும்.

## 40. விருந்து அழைப்பை ஏற்பது

“ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்குச் செய்யும் (சிறந்த) கடமைகள் ஐந்து. ஸலாமிற்குப் பதில் சொல்வது, நோய் விசாரிப்பது, ஜனாஸாவைப் பின்தொடர்வது, விருந்து அழைப்பை ஏற்பது, தும்மியவருக்கு மறுமொழி கூறுவது” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி(1240), முஸ்லிம்(2162)

“உங்களில் யாரேனும் வலீமா விருந்துக்கு அழைக்கப் பட்டால் அதற்குச் செல்லட்டும்” என நபி(ஸல்)கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), புகாரி(5173),முஸ்லிம்(1429)

“உங்களில் யாரேனும் வலீமா விருந்துக்கு அழைக்கப் பட்டால் அதற்குச் செல்லட்டும். விரும்பினால் உண்ணட்டும். விரும்பினால் விட்டுவிடட்டும்” என நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(1430)

“விருந்துகளிலிலேயே மோசமான விருந்து செல்வந்தர்கள் மட்டும் அழைக்கப்பட்டு ஏழைகள் புறக்கணிக்கப்படுகின்ற வலீமா விருந்தாகும். விருந்துக்கு வராதவர் அல்லாஹ்வுக்கும்

அவன் தூதருக்கும் மாறு செய்தவராவார்” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(5177), முஸ்லிம்(1432)

**பயன்கள்:**

1. வலீமா விருந்து அழைப்பை ஏற்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது.
2. பொதுவாக விருந்து அழைப்பை ஏற்பது ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்று.
3. விருந்து அழைப்பை ஏற்றால் சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்மென்பதில்லை.

## 41. வீடுகளில் நுழைய அனுமதி பெறுதல்

நம்பிக்கை கொண்டோரே! உங்கள் வீடுகள் அல்லாத வேறு வீடுகளில் அவர்களின் அனுமதி பெறாமலும் அந்த வீட்டாருக்கு ஸலாம் கூறாமலும் நுழையாதீர்கள். (24:27)

உங்களில் சிறுவர்கள் பருவ வயதை அடைந்து விட்டால் (வயதில்) அவர்களுக்கு மூந்தியோர் அனுமதி கேட்பது போல் அவர்களும் அனுமதி கேட்கவேண்டும். (24:59)

என் தந்தையின் கடன் விஷயமாக நான் நபி(ஸல்) அவர்களிடம் சென்று கதவைத் தட்டினேன். அப்போது அவர்கள், “யாரது?” எனக் கேட்டார்கள். அதற்கு, “நான் தான்” என்று கூறினேன். இதை நபி(ஸல்)அவர்கள் வெறுப்பதுபோல “நான் தான், நான் தான் என்றால்?” எனக் கேட்டார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), புகாரி(6250),முஸ்லிம்(2155)

“பார்வையின் காரணமாகத்தான் அனுமதி கேட்டல் ஏற்படுத் தப்பட்டுள்ளது” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸ.்.த்(ரலி), நூல்: புகாரி(6241), முஸ்லிம்(2156)

நான் நபி(ஸல்)அவர்களிடம் வந்து அனுமதி கேட்காமல் ஸலாம் சொல்லாமல் அவர்கள் வீட்டில் நுழைந்தேன். அப்போ தவர்கள் “நீ திரும்பிச் சென்று அஸ்ஸலாமு அலைக்கும் வரலாமா? என்று கேள்” என்றனர். அறிவிப்பவர்: கல்தா பின் ஹம்பல்(ரலி), நூல்: திர்மிதி(2710)

“உங்களில் ஒருவர் மூன்று முறை அனுமதி கோரியும் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லையெனில் அவர் திரும்பிச் செல்லட்டும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூமூஸா(ரலி), புகாரி(6245),முஸ்லிம்(2153)

**பயன்கள்**

1. வீட்டில் நுழைவதற்கு முன், அனுமதி பெறவேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது.

2. அனுமதி கேட்பவரிடம் நீங்கள் யார் என்று கேட்கப் பட்டால் நான்தான் என்று சொல்லாமல் தனது பெயரைச் சொல்ல வேண்டும் என்பது சுன்னத்தாகும்.

3. அனுமதி கேட்பவர் மூன்று முறை அனுமதி கேட்க வேண்டும் அனுமதி கிடைத்தால் வீட்டினுள் நுழைய வேண்டும். இல்லையெனில் திரும்பிச் சென்றுவிட வேண்டும்.

## 42. ஷைத்தானின் குழப்பங்கள்

(நபியே!) அழகியவற்றையே பேசுமாறு எனது அடியார் களுக்குக் கூறுவீராக! ஷைத்தான் அவர்களிடையே பிளவை ஏற்படுத்துவான். (17:53)

“அரேபியத் தீபகற்பத்தில் தொழக்கூடியவர்கள் தன்னை வணங்குவதில் திட்டமாக ஷைத்தான் நம்பிக்கை இழந்து விட்டான். ஆயினும் அவர்களிடையே குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்கிறான்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(2812)

“இப்லீசுடைய அர்ஷ் கடலில் உள்ளது. (அங்கிருந்து கொண்டு) அவன் தனது படையை அனுப்புகிறான். அவர்கள் சென்று மக்களிடத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். மக்களிடையே மிகப்பெரும் குழப்பத்தை உண்டாக்கியவரே அவர்களில் மிகச்சிறந்தவர்” என்று நபி(ஸல்) கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(2813)

“உங்களில் எவருக்கும் ஜின் இனத்திலிருந்து ஒரு கூட்டாளியை உடன் இணைக்காமல் விடப்படவில்லை” என நபி(ஸல்) அவர்கள் கூறியதும், “அல்லாஹ்வின் தூதரே! உங்களுக்குமா?” என நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி (ஸல்)அவர்கள், “எனக்கும்தான். ஆயினும் அல்லாஹ் அது விஷயத்தில் எனக்கு உதவி செய்துவிட்டான். அது எனக்குக் கட்டுப்பட்டுவிட்டது. அது எனக்கு நன்மையைத் தவிர வேறு எதையும் ஏவாது” எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), முஸ்லிம்(2814)

**பயன்கள்:**

1. நிச்சயமாக இப்லீஸ் மு..மின்களுக்கு விரோதியாவான்.
2. மக்களிடம் ஏற்படக்கூடிய குழப்பங்கள் குறித்து எச்சரிக்கையாக இருப்பதும் அக்குழப்பங்களை நீக்குவதற்காக

முயற்சிப்பதும் கடமையாகும். ஏனெனில் குழப்பங்களை உண்டாக்குவது ஷைத்தானின் செயலாகும்.

## 43. மோசடி

நம்பிக்கை கொணடோரே! ஒப்பந்தங்களை முழுமையாக நிறைவேற்றுங்கள். (5:1)

ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுங்கள் ஏனெனில் அதுபற்றி நிச்சயமாக விசாரிக்கப்படும். (17:34)

"நான்கு பண்புகள் எவனிடம் உள்ளனவோ அவன் வடிகட்டிய நயவஞ்சகனாவான். அவற்றில் ஏதேனும் ஒன்று யாரிடமேனும் இருந்தால் அதை விட்டொழிக்கும்வரை நயவஞ் சகத்தின் ஒரு பண்பு அவனிடம் இருந்து கொண்டேயிருக்கும். நம்பினால் துரோகம் செய்வான். பேசினால் பொய் பேசுவான். ஒப்பந்தம் செய்து கொண்டால் அதை மீறுவான். விவாதம் புரிந்தால் நேர்மை தவறிப் பேசுவான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அம்ர்(ரலி),

நூல்: புகாரி(34), முஸ்லிம்(58)

"மோசடி செய்த ஒவ்வொருவரிடமும் கியாமத் நாளில் ஒரு கொடி இருக்கும். அப்போது இது இவர் செய்த மோசடியாகும் என்று கூறப்படும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி),

நூல்: புகாரி(6966),முஸ்லிம்(1736)

**பயன்கள்:**

1. மோசடி செய்வது ஹராமாகும். அது குறித்து எச்சரிக்கப் பட்டுள்ளது.
2. மோசடி செய்வது நயவஞ்சகர்களின் பண்பாகும்.

3. மோசடிக்காரன் தான் செய்த தீயசெயலுக்காக மறுமையில் பகிரங்கப்படுத்தப்படுவான்.

## 44. ஏமாற்றுதல்

நபி(ஸல்)அவர்கள் ஒரு உணவுக் குவியலுக்கருகே சென்றார்கள். தமது கையை அந்தக் குவியலில் விட்டபோது விரல்களில் ஈரம் பட்டது. உடனே, "உணவு வியாபாரியே! என்ன இது?" என்று கேட்டார்கள். அதற்கவர், "அல்லாஹ்வின் தூதரே! மழையில் நனைந்துவிட்டது" என்றார். அப்போது நபி (ஸல்)அவர்கள், "மக்கள் பார்க்கும் விதமாக உணவுக்கு மேல் பகுதியில் போட்டிருக்கக்கூடாதா? யார் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவரல்லர்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(102)

"நமக்கெதிராக ஆயுதம் தூக்குபவனும் நம்மை ஏமாற்று பவனும் நம்மைச் சார்ந்தவனல்லன்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூமூஸா(ரலி), முஸ்லிம்(101)

"மார்க்கம் என்பது நலம் நாடுவதே!" என நபி(ஸல்) அவர்கள் கூறியதும் "அல்லாஹ்வின் தூதரே! யாருக்கு நலம் நாடுவது?" என நாங்கள் கேட்டோம். அதற்கவர்கள், "அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் அவன் வேதத்திற்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் எல்லா முஸ்லிம் களுக்கும் நலம் நாடுவதாகும்" என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: தமீம் பின் அவ்ஸ்(ரலி), நூல்: முஸ்லிம்(55)

**பயன்கள்:**

1. முஸ்லிம்களை ஏமாற்றுவது ஹராம். இது பெரும் பாவங்களில் ஒன்றாகும்.

2. முஸ்லிம்களுக்கு நலம் நாடுவது கடமையாகும்.

## 45. கோபம்

ஒரு மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் தனக்கு அறிவுரை கூறுமாறு வேண்டினார். அதற்கு நபி(ஸல்)அவர்கள் “நீ கோபம் கொள்ளாதே!” என்று கூறினார்கள். அம்மனிதர் மீண்டும் மீண்டும் தனக்கு அறிவுரை கூறுமாறு வேண்டவே நபியவர்கள் “கோபம் கொள்ளாதே!” என்றே கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(6116)

“பிறரை வீழ்த்துபவன் வீரனல்ல! கோபம் வரும்போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே உண்மையான வீரன்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். (புகாரி-6114,முஸ்லிம்-2609)

“உங்களில் ஒருவர் நின்று கொண்டிருக்கும்போது கோபம் வந்தால் உட்கார்ந்து கொள்ளட்டும். கோபம் சென்று விட்டால் சரி! இல்லையென்றால் படுத்துக்கொள்ளட்டும்” என்று நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: அபூதாவூத்(4782)

சுலைமான் பின் ஸுர்த்(ரலி) கூறியதாவது: நாங்கள் நபி (ஸல்)அவர்களுடன் அமர்ந்திருக்கும்போது அவர்களின் முன்னிலையில் இருவர் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்டனர். அவ்விருவரில் ஒருவர் மற்றவரை கோபமாகத் திட்டினார். அவருடைய முகம் சிவந்துவிட்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள் “நான் ஒரு வார்த்தையை அறிவேன் அவர் அந்த வார்த்தையைக் கூறினால் அவரது கோபம் அடங்கிவிடும். (அது) அவூதுபில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்” என்று

கூறினார்கள். (விரட்டப்பட்ட ஷைத்தானின் தீங்கை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன்)

நூல்: புகாரி(6115),முஸ்லிம்(2610)

**பயன்கள்:**

1. கோபத்தைத் தவிர்க்க வேண்டுமென நபி(ஸல்) அறிவுரை கூறியுள்ளதுடன் கோபம் வரும்போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவரை புகழ்ந்துரைத்தும் உள்ளார்கள்.
2. நின்றுகொண்டிருக்கும்போது ஒருவருக்கு கோபம் வந்தால் உட்கார்ந்து கொள்ள வேண்டும். கோபம் சென்று விட்டால் சரி இல்லையென்றால் படுத்துக்கொள்ள வேண்டும் என்று வழிகாட்டப்பட்டுள்ளது.
3. யாருக்கேனும் கோபம் வந்தால் ஷைத்தானைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடட்டும் என்று நபி(ஸல்) அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

## 46. கப்ருகளை ஸியாரத் செய்தல்

“கப்ருகளை ஸியாரத் செய்ய நான் உங்களை தடை செய்திருந்தேன். இனி ஸியாரத் செய்யுங்கள்” என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: புரைதா(ரலி), முஸ்லிம்(977)

“ஏனெனில் அது மறுமையை நினைவுபடுத்தும்” என்ற வாசகத்துடன் இதே ஹதீஸ் திர்மிதியில் உள்ளது.(1054)

அடக்கத் தலங்களின் பக்கம் சென்றால்

اَلسَّلاَمُ عَلَيْكُمْ أَهْلَ الدِّيَارِ مِنَ الْمُؤْمِنِيْنَ وَالْمُسْلِمِيْنَ وَإِنَّا إِنْ شَاءَ اللهُ

لَلاَحِقُوْنَ أَسْأَلُ اللهَ لَنَا وَلَكُمُ الْعَافِيَةَ

“அஸ்ஸலாமு அலைக்கும் அஹ்லத்தியாரி மினல் மு.்.மினீன வல்முஸ்லிமீன், வஇன்னா இன்ஷாஅல்லாஹு லலாஹிகூன் அஸ்அலுல்லாஹ லனா வலகுமுல் ஆ.்.பியா” என்று கூறுமாறு நபி(ஸல்)அவர்கள் தம் தோழர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்.

அறிவிப்பவர்: புரைதா(ரலி), நூல்: முஸ்லிம்(975)

(பொருள்: மு.்.மினான, முஸ்லிமான கப்ருவாசிகளே! உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும். அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களைச் சந்திக்கக்கூடியவர்களே! உங்களுக்கும் எங்களுக்கும் அல்லாஹ்விடத்தில் நல்லதைக் கேட்கிறோம்)

“கப்ருகளை நோக்கித் தொழதீர்கள், அதன் மீது உட்காராதீர்கள்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூமர்ஸத்(ரலி), நூல்: முஸ்லிம்(972)

“உங்களில் ஒருவர் கப்ரின் மீது உட்காருவதை விட நெருப்பின் மீது உட்கார்ந்து அது அவரது ஆடையைக் கரித்து உடலையும் கரித்துவிடுவதே மேலானது” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(971)

**பயன்கள்:**

1. கப்ருகளை ஸியாரத் செய்வது விரும்பத்தக்கது. அது மறுமையை நினைவுபடுத்தும்.
2. அடக்கத்தலங்களில் நுழையும்போது ஹதீஸில் வந்த துஆவைக் கூறுவது விரும்பத்தக்கது.

3. கப்ருகளை நோக்கித் தொழுவது தடை செய்யப் பட்டிருக்கின்றது. ஏனெனில் அதை வணங்குவதற்கு அது ஒரு துணையாக ஆகிவிடும்.

4. கப்ருகளில் அமர்வதும் தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

## 47. மது அருந்துதல்

நம்பிக்கை கொண்டடோரே! மது, சூதாட்டம், பலி பீடங்கள், அம்புகள் ஆகியவை அருவருப்பானதும், ஷைத் தானின் நடவடிக்கையுமாகும். எனவே இதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். வெற்றியடைவீர்கள்.(5:90)

“போதை தரும் அனைத்தும் மதுவாகும், போதை தரும் அனைத்தும் ஹராமாகும்.யார் இவ்வுலகில் தொடர்ந்து மது அருந்திய நிலையில் தவ்பாச் செய்யாமல் மரணிக்கின்றாரோ அவர் மறுமையில் அதை அருந்த மாட்டார்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: முஸ்லிம்(2003)

“போதை தரும் அனைத்தும் ஹராமாகும். போதைப் பொருளை அருந்துபவருக்கு நரகவாசிகளின் வியர்வையோ அல்லது நரகவாசிகளின் சாரையோ குடிக்கக் கொடுப்பதற்கு அல்லாஹ் பொறுப்பேற்கிறான்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(2002)

தாரிக் பின் சுவைத்(ரலி) நபி(ஸல்)அவர்களிடம் மது பற்றிக் கேட்டபோது அவர்கள் அதனைத் தடை செய்தார்கள். அல்லது அதைத் தயாரிப்பதை வெறுத்தார்கள். “நான் அதை மருந்தாகப் பயன்படுத்திக் கொள்கிறேனே?” என்று அவர்

கேட்டதும் “நிச்சயமாக அது மருந்தல்ல மாறாக நோயாகும்” என்று நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: தாரிக் பின் சுவைத்(ரலி), முஸ்லிம்(1984)

“யார் மது அருந்துகின்றாரோ அவரது நாற்பது நாட்களின் காலைத் தொழுகை ஏற்கப்படுவதில்லை. அவர் திருந்தினால் அதை அல்லாஹ் ஏற்றுக்கொள்கின்றான். மீண்டும் அருந்தினால் நாற்பது நாட்களின் காலைத் தொழுகையை அல்லாஹ் ஏற்கமாட்டான்.அவர் பாவமன்னிப்பு கோரினால் அல்லாஹ் மன்னிக்கிறான். மீண்டும் அருந்தினால் நாற்பது காலைத் தொழுகையை ஏற்க மாட்டான். அவர் பாவமன் னிப்புக் கேட்டால் அல்லாஹ் மன்னிக்கிறான். நான்காவது தடவையும் அவர் அருந்தினால் நாற்பது காலைத் தொழு கையை அல்லாஹ் ஏற்கமாட்டான். அவர் மன்னிப்புக் கேட்டால் அல்லாஹ் மன்னிக்க மாட்டான். மேலும் நரகவாசிகளின் சீழ் ஓடும் நதியிலிருந்து அவருக்குக் குடிக்கக் கொடுப்பான்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: திர்மிதி(1862)

**பயன்கள்:**

1. மது அருந்துவது விலக்கப்பட்டுள்ளது.
2. அதை அருந்துபவனுக்கு கடும் எச்சரிக்கை உள்ளது.
3. அது நோயே தவிர நிவாரணமல்ல.

## 48. வீண் தர்க்கமும் விதண்டாவாதமும்

“எந்த ஒரு சமுதாயமும் நேர்வழிக்கு வந்த பிறகு அதிலிருந்து தடம் புறளுகிறது என்றால் விதண்டாவாதத்தின் காரணத்தினால் தான்” என நபி(ஸல்)அவர்கள் கூறிவிட்டு, “விதண்டாவாதம் செய்வதற்காகவே தவிர அவரைப் பற்றி

அவர்கள் கூறவில்லை...."(43:58) என்ற வசனத்தை ஓதிக் காண் பித்தார்கள். அறிவிப்பவர்: அபூஉமாமா(ரலி), திர்மிதி(3253)

(அவ்வசனம் வருமாறு: மர்யமின் மகன் உதாரணமாக கூறப்பட்டபோது அதைக் கேட்டு உமது சமுதாயத்தினர் கூச்சலிட்டனர். எங்கள் கடவுள்கள் சிறந்தவர்களா? அல்லது அவரா? என்று கேட்டனர். விதண்டாவாதம் செய்வதற்காகவே தவிர அவரைப் பற்றி அவர்கள் கூறவில்லை. இல்லை! அவர்கள் வீண் தர்க்கம் செய்வோரே!) (43:57,58)

"மனிதர்களில் அல்லாஹ்வின் கடுங்கோபத்திற்குரியவர்கள் வீண் தர்க்கம் செய்வோரே! என நபி(ஸல்) கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), புகாரி(2457),முஸ்லிம்(2668)

"தான் கூறுவது உண்மையாக இருந்தும் யார் தர்க்கத்தை விட்டுவிடுகிறாரோ அவருக்கு சொர்க்கத்தின் கீழ்ப்பகுதியில் மாளிகையும் விளையாட்டுக்காகவே இருந்தாலும் யார் பொய்யை விட்டுவிடுகிறாரோ அவருக்கு சொர்க்கத்தின் நடுப் பகுதியில் ஒரு மாளிகையும் யார் அழகிய குணங்களை மேற்கொள்கின்றாரோ அவருக்கு சொர்க்கத்தின் மேற் பகுதியில் ஒரு மாளிகையும் எழுப்பப்படுவதற்கு நான் பொறுப் பேற்கின்றேன்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஉமாமா(ரலி), அபூதாவூத்(4800)

"மறுமை நாளில் என்னருகில் அமர்ந்திருப்பவர்கள், எனக்கு மிகவும் விருப்பமானவர்கள் உங்களில் மிக அழகிய பண்பு களைக் கொண்டவர்களே.மறுமை நாளில் என்னை விட்டும் தொலைவில் இருப்பவர்கள், என் வெறுப்புக்குரியவர்கள் வளவளவென்று பேசுவோரும் தனது பேச்சுக்களை உயர் வாகக் கருதுவோரும், வாய் பிளந்திருப்போருமாவர்" என்று

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். “வளவளவென்று பேசுவோரையும் தமது பேச்சுக்களை உயர்வாகக் கருதுவோரையும் நாங்கள் தெரிந்து கொண்டோம். வாய் பிளந்தோர் என்றால் யார்?” என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு “பெருமையடிப்போர்” என நபி(ஸல்)அவர்கள் விளக்கமளித்தனர்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: திர்மிதி(2018)

**பயன்கள்:**

1. விதண்டாவாதம் புரிவதை விட்டுவிட ஆர்வமூட்டப்பட்டிருக்கிறது. பயனுள்ளவற்றிற்கு வாதம் புரியலாம். ஆனால் அது அழகிய முறையில் இருக்க வேண்டும்.
2. வீண்தர்க்கம் செய்வது பற்றி எச்சரிக்கப்பட்டுள்ளது.
3. வீண் தர்க்கம் பரவுவது வழிகேட்டின் அடையாளமாகும்.
4. வளவளவென்று பேசுவோரையும் தன் பேச்சுக்களை உயர்வாகக் கருதுவோரையும் நபி(ஸல்) வெறுத்துள்ளதுடன் மறுமையில் அவர்களை விட்டும் தூரமாகியும் விடுவார்கள்.

## 49. மரம் நடுதல், பயிரிடுவதன் சிறப்பு

நபி(ஸல்)அவர்கள் அன்ஸாரி குலத்தைச் சேர்ந்த உம்மு முபஷ்ஷிர் என்ற பெண்மணிக்குரிய ஈச்ச மரத்தோட்டத்திற்குள் சென்றார்கள். அப்பெண்மணியிடம் “இம்மரங்களை நட்டியவர் யார்? முஸ்லிமா? கா∴பிரா?” என்று நபி(ஸல்)அவர்கள் கேட்டார்கள். அதற்கு அப்பெண்மணி “இல்லை முஸ்லிம் தான்” என்று கூறினார். அப்போது நபி(ஸல்)அவர்கள் “எந்த முஸ்லிமாவது ஒரு மரத்தை நட்டால் அல்லது எதையேனும் பயிரிட்டால் அதிலிருந்து மனிதனோ கால்நடைகளோ வேறு எதுவும் சாப்பிட்டால் அது அவர் செய்த தர்மமாகக் கருதப்படும்” எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), முஸ்லிம்(1552)

“எந்த முஸ்லிமாவது ஒரு மரத்தை நட்டால் அதிலிருந்து உண்ணப்பட்ட அனைத்தும் அவனுக்குத் தர்மமாகும். அதில் இருந்து திருடுபோய்விட்டால் அதுவும் அவனுக்குத் தர்மமே. அதிலிருந்து விலங்குகள் தின்றால் அது அவனுக்குத் தர்மம் ஆகும். பறவைகள் தின்றால் அதுவும் அவனுக்குத் தர்மமே. யாரும் அதை எடுத்து அது குறைந்துவிட்டாலோ அதுவும் அவனுக்குத் தர்மமே தவிர வேறில்லை” என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), முஸ்லிம்(1552)

**பயன்கள்:**

1. பயிரிடுவதற்கும் மரம் நடுவதற்கும் சிறப்புண்டு.
2. பயிரிலிருந்தும் மரத்திலிருந்தும் விலங்குகளோ மனிதனோ சாப்பிட்டால் அதைப் பயிர் செய்தவருக்கு அது தர்மமாகக் கருதப்படும்.

## 50. வியாபாரம் பற்றி சில சட்டங்கள்

நபி(ஸல்)அவர்கள் ஒரு உணவுக் குவியலுக்கருகே சென்றார்கள். தமது கையை அந்தக் குவியலில் விட்டபோது விரல்களில் ஈரம் பட்டது. உடனே, “உணவு வியாபாரியே! என்ன இது?” என்று கேட்டார்கள். அதற்கவர், “அல்லாஹ்வின் தூதரே! மழையில் நனைந்துவிட்டது” என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள், “மக்கள் பார்க்கும் விதமாக உணவுக்கு மேல்பகுதியில் போட்டிருக்கக்கூடாதா? யார் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவரல்லர்” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(102)

“விற்பவர், வாங்குபவர் ஆகிய இருவரும் பிரியாதவரை (வியாபாரத்தை முறிக்கும்) உரிமை பெற்றுள்ளனர். அவ்விரு வரும் உண்மை கூறி (எதையும் மறைக்காமல்) தெளிவுபடுத்

தினால் அவர்களின் வியாபாரத்தில் பரக்கத் செய்யப்படும். அவ்விருவரும் பொய் கூறி (எதையேனும் மறைத்தால்) அவர்களின் வியாபாரத்தில் பரக்கத் அழிக்கப்படும்" என்று நபி (ஸல்) கூறியதாக ஹகீம் பின் ஹிஸாம்(ரலி)அறிவிக்கிறார்கள்.

நூல்: புகாரி(2079),முஸ்லிம்(1532)

**வியாபாரத்தில் சத்தியம் செய்வது**

"சத்தியம் செய்வது சரக்குகள் விற்பனையாவதற்கு உதவும். (அதே சமயம்) இலாபத்தில் இழப்பை ஏற்படுத்தும்" என நபி(ஸல்)கூறியதாக அபூஹுரைரா(ரலி)அறிவிக்கிறார்கள்.

நூல்: புகாரி(2087),முஸ்லிம்(1606)

"வியாபாரத்தில் நீங்கள் அதிகமாக சத்தியம் செய்வதை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில் சத்தியம் செய்வது சரக்கு களை விற்பனை செய்துவிடும். பிறகு இலாபத்தில் பரகத் போய்விடும்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபுகதாதா(ரலி) நூல்: முஸ்லிம்(1607)

**பயன்கள்:**

1. விற்பதிலும் வாங்குவதிலும் ஏமாற்றுவது தடுக்கப் பட்டுள்ளது. ஏனெனில் அது பெரும்பாவமாகும்.
2. விற்பவர் வாங்குபவர் இருவரும் பிரிந்து செல்வதற்கு முன்னால் ஒரு பொருளை நிராகரிப்பதற்கோ திரும்பப் பெறுவதற்கோ உரிமை பெற்றுள்ளார்.
3. வியாபாரத்தில் சத்தியம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அது வியாபாரத்தின் பரகத்தை அழித்துவிடும்.

## 51. பொய்ச்சத்தியம்

இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார்கள்: “ஒரு முஸ்லிமின் பொருளை அபகரிப்பதற்காக யாரேனும் பொய்ச் சத்தியம் செய்தால் அல்லாஹ் அவன் மீது கோபம் கொண்ட நிலையில் அல்லாஹ்வை அவன் சந்திப்பான்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறிவிட்டு இதுபற்றி வந்துள்ள திருக்குர்ஆனின் “அல்லாஹ் விடம் செய்த உறுதிமொழியையும் தமது சத்தியங்களையும் அற்பமான விலைக்கு விற்றோருக்கு மறுமையில் எந்தப் பாக்கியமும் இல்லை. மறுமை நாளில் அல்லாஹ் அவர் களிடம் பேசவும் மாட்டான் அவர்களைப் பார்க்கவும் மாட்டான். அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனை உண்டு” (3:77) என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்கள். நூல்: புகாரி(6659), முஸ்லிம்(138)

“யார் பொய் சத்தியத்தின் மூலம் ஒரு முஸ்லிமுடைய உரிமையை பறித்துக் கொள்கிறாரோ அல்லாஹ் அவருக்கு நரகத்தை கடமையாக்கி, சொர்க்கத்தைத் தடைசெய்துவிடு கின்றான்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒரு மனிதர், “அல்லாஹ்வின் தூதரே! மிகச்சிறிய பொருளா னாலுமா?” என்று கேட்க, “அராக் மரத்தினுடைய (பல்து லக்கும்) சிறு குச்சியானாலும் சரியே!” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூ உமாமா(ரலி), முஸ்லிம்(137)

“அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதும், பெற்றோரை நிந்திப்பதும், உயிர்களைக் கொல்வதும், பொய் சத்தியம் செய்வதும் பெரும்பாவங்களாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அம்ரு(ரலி), புகாரி(6675)

மற்றொரு அறிவிப்பில், ஒரு கிராமவாசி நபி(ஸல்) அவர் களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! பெரும்பாவங்கள் எவை?" எனக் கேட்டார். அதற்கவர்கள், "அல்லாஹ்வுக்கு இணைவைப்பது" என்றார்கள். "வேறு என்ன?" என்று அவர் கேட்டார். "பெற்றோரை நிந்திப்பது" என்றார்கள்."பிறகு என்ன?" என்று அவர் மீண்டும் கேட்டார். "பொய்ச் சத்தியம் செய்வது" என்றார்கள். "பொய் சத்தியம் என்றால் என்ன?" என்று அவர் கேட்டார். அதற்கு நபியவர்கள், "ஒரு முஸ்லிமின் பொருளை அபகரித்துக்கொள்வதற்காக பொய்யாகச் சொல்லப்படும் சத்தியம்" என்று கூறினார்கள் என உள்ளது. (புகாரி-6920)

**பயன்கள்:**

1. பொய் சத்தியம் செய்து ஒரு முஸ்லிமின் பொருளை அபகரிப்பது கொடுமையான ஹராமாகும்.
2. இவ்வாறு செய்பவனுக்கு கடுமையான தண்டனை உண்டு. அவனது சத்தியம் அவனை நரகில் தள்ளிவிடும்.
3. அதைத் தவிர்ந்து கொள்வது கடமையாகும்.

## 52. பொய் சாட்சி

பொய் சொல்வதிலிருந்து விலகியிருங்கள். (22:30)

உமக்கு அறிவு இல்லாததை நீர் பின்பற்றாதே! செவி, பார்வை மற்றும் உள்ளம் ஆகிய அனைத்துமே விசாரிக்கப் படுபவை. (17:36)

அபூபக்ரா(ரலி) கூறியதாவது: "மிகப்பெரும் பாவங்கள் பற்றி நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டனர். "அல்லாஹ்வின் தூதரே! கூறுங்கள்" என்றோம்.

அதற்கு, “அல்லாஹ்வுக்கு இணைலைப்பதும் பெற்றோரை நிந்திப்பதும் தான்” என்று கூறிவிட்டு சாய்ந்து கொண்டிருந்த நபி(ஸல்) அவர்கள் எழுந்து உட்கார்ந்து கொண்டு “பொய் சாட்சி கூறுவதும் தான்” என்றார்கள். நிறுத்த மாட்டார்களா என்று நாங்கள் சொல்லுமளவுக்கு இதை திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார்கள். நூல்: புகாரி(5976),முஸ்லிம்(87)

**பயன்கள்:**

1. பொய் சாட்சி சொல்வது கொடிய ஹராமாகும்.
2. இது மிகப்பெரும் பாவமாகும். ஏனெனில் இதில் பொய் கலந்திருக்கிறது. இது முஸ்லிம்களின் உரிமைகளைப் பாழ் படுத்துவதாகவும் இருக்கின்றது.

## 53. சபித்தல்

“ஒரு மு.்.மினை சபிப்பது அவனைக் கொலை செய்வது போலாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: லஹ்ஹாக்(ரலி), புகாரி(6105),முஸ்லிம்(110)

“அதிகம் சபிப்பது உண்மையானவனுக்கு அழகல்ல” (நபிமொழி) அறிவிப்பவர்: அபூஹுைரைரா(ரலி), முஸ்லிம்(2997)

“அதிகம் சபிப்பவர்கள் மறுமை நாளில் பரிந்துரை செய்ப வர்களாகவோ ஷஹீதுகளாகவோ இருக்க மாட்டார்கள்.” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபுத்தர்தா(ரலி), நூல்: முஸ்லிம்(2598)

“ஒரு மு.்.மின் குறை கூறித்திரிபவனாகவோ, சபிப்ப வனாகவோ, அநாகரிகமாக நடப்பவனாகவோ, அசிங்கமாகப் பேசுபவனாகவோ இருக்க மாட்டான்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), திர்மிதி(1977)

“ஒரு அடியான் ஏதாவது ஒரு பொருளை சபித்தால் அந்த சாபம் வானத்தை நோக்கி உயரும் அப்போது வானத்தின் வாசல்கள் அடைக்கப்படும். பிறகு அந்த சாபம் பூமியை நோக்கி இறங்கும். அப்போது பூமியின் வாசல்களும் அடைக் கப்படும். பிறகு அது வலது, இடது புறங்களின் பக்கம் திரும்பும். அங்கும் வழி கிடைக்காததால் யார் மீது சபிக்கப் பட்டதோவரின் பக்கம் திரும்பிச் செல்லும். அதற்கு அவர் தகுதியுள்ளவரென்றால் சரி இல்லாவிட்டால் சொன்னவரிடமே திரும்பிச் சென்றுவிடும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர்தா(ரலி), நூல்: அபூதாவூத்(4905)

**பயன்கள்:**

1. பொதுவாக முஸ்லிம்களை சபிப்பது பற்றி எச்சரிக்கப் பட்டுள்ளது.

2. அநியாயமாக ஒருவரை சபித்தால் அந்தச் சாபம் சபித்தவர் மீதே திரும்பும்.

3. சபித்தல் உண்மையாளர்கள், நல்லோர்களின் பண்பல்ல.

## 54. கவிதை

கவிஞர்களை வீணர்களே பின்பற்றுவார்கள். அவர்கள் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் தட்டழிந்து திரிவதை நீர் அறிய வில்லையா? அவர்கள் செய்யாததைக் கூறுகின்றனர். ஆனால் நம்பிக்கை கொண்டு நல்லறங்களைச் செய்து அல்லாஹ்வை அதிகம் நினைத்து அநீதி இழைக்கப்பட்ட பின் பழி தீர்த்துக் கொண்ட (புல) வர்களைத் தவிர! (26:224-227)

“கவிதையிலும் ஞானம் உண்டு” என நபி(ஸல்)அவர்கள் கூறியதாக உபை இப்னு க.்.பு (ரலி) அறிவிக்கிறார்கள்.

நூல்: புகாரி (6145), திர்மிதி(3001)

பனூ குறைழா போரின்போது நபி(ஸல்) அவர்கள் ஹஸ்ஸான் பின் ஸாபித்(ரலி)அவர்களிடம் "இணைவைப்பவர்களை (பதிலுக்கு) வசைபாடுவீராக! நிச்சயமாக ஜிப்ரீல் (அலை) உம்முடன் இருக்கிறார்கள்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: பர்ரா பின் ஆஸிப்(ரலி)
புகாரி(6153),முஸ்லிம்(2486)

"ஒரு மனிதனின் உள்ளத்தில் கவிதை நிரம்பியிருப்பதை விட சீழ் நிரம்பி, அது கெட்டுப்போவதே மேல்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),
நூல்: புகாரி(6155),முஸ்லிம்(2257)

**பயன்கள்:**

1. கவிதையில் நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு.
2. ஒரு மனிதனின் உள்ளத்தில் இறை நினைவும் குர்ஆனும் இல்லாத விதத்தில் கவிதைகளை அதிகம் மனனம் செய்வது குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

## 55. விலக்கப்பட்ட வார்த்தைகள்

"யாரேனும் ஒருவர் தன் சகோதரரை காபிர் எனக் கூறினால் இருவரில் ஒருவர் அவ்வாறு ஆவார்.(அதாவது) கூறப்பட்டவர் அவ்வாறு இருந்தால் சரி. இல்லையென்றால் அவ்வார்த்தை சொன்னவர் பக்கம் திரும்பிவிடும்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), புகாரி(6104),முஸ்லிம்(60)

"யாரேனும் ஒருவர் இன்னொருவரை காபிர் என்றோ அல்லாஹ்வின் விரோதி என்றோ அழைத்தால் அவர் அவ்வாறு இல்லையென்றால் அந்த வார்த்தை அழைத்தவர் பக்கமே திரும்பிவிடும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர்(ரலி),நூல்: புகாரி(6045),முஸ்லிம்.

நான் நபி(ஸல்) அவர்களுப் பின்னால் வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அவர்களுடைய வாகனம்(கால்) தவறி கீழே விழுந்தது. அப்போது நான் “ஷைத்தான் நாசமாகப்போகட்டும்” என்று கூறினேன் அதற்கு நபி(ஸல்) அவர்கள் “ஷைத்தான் நாசமாகப் போகட்டும் என்று கூறாதே! ஏனெனில் இவ்வாறு கூறுவதால் அவன் ஒரு வீடு அளவுக்கு பெருக்கமடைந்து “எனது ஆற்றலால் தான் நான் அந்த வாகனத்தைக் கீழே தள்ளினேன்” என்று (பெருமையாகக்) கூறுவான். மாறாக பிஸ்மில்லாஹ் என்று கூறு. ஏனெனில் இவ்வாறு கூறினால் ஷைத்தான் சிறுமைப்பட்டு “ஈ” அளவுக்கு மாறிவிடுவான்” எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதர்(ரலி), அபூதாவூத்(4982)

**பயன்கள்:**

1. ஒரு முஸ்லிமைப் பார்த்து கா.ஃ.பிர் என்று சொல்லக் கூடாது.
2. ஒரு முஸ்லிமைப் பார்த்து அல்லாஹ்வின் விரோதி என்று சொல்லக் கூடாது.
3. இவ்விரு வார்த்தைகளையும் ஒரு முஸ்லிமைப் பார்த்து கூறும்போது அதற்கு அவன் தகுதியில்லையென்றால் அது கூறியவரின் மீதே திரும்பிவிடும்.
4. ஷைத்தான் நாசமாகட்டும் என்று கூறக்கூடாது. அதற்குப் பகரமாக பிஸ்மில்லாஹ் என்று கூற வேண்டும்.

## 56. ஜிஹாதின் சிறப்பு

நம்பிக்கை கொண்டோரே! நோவினை செய்யும் வேதனை யிலிருந்து உங்களைக் காப்பற்றக்கூடிய வியாபாரத்தை

உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதரின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் உங்கள் பொருள்களாலும் உயிர்களாலும் ஜிஹாத் செய்யுங்கள். நீங்கள் அறியக்கூடிய வர்களாயின் இதுவே உங்களுக்குச் சிறந்ததாகும். (61:10,11)

"மிகச் சிறந்த செயல் எது?" என நபி(ஸல்)அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள் "அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்புவது" என விடையளித்தனர். "அதற்கடுத்தது எது?" என்று கேட்கப்பட்டது "அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதென" விடையளித்தனர்."அதற்கடுத்து எது?" என்று கேட்கப்பட்டதும் "ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்" என விடையளித்தனர். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)
நூல்: புகாரி(26,1519),முஸ்லிம்(83)

"காலையிலோ அல்லது மாலையிலோ அல்லாஹ்வின் பாதையில் ஒரு தடவை புறப்படுவது இவ்வுலகையும் அதில் உள்ளவற்றையும் விடச் சிறந்ததாகும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ்(ரலி),
நூல்: புகாரி(2792),முஸ்லிம்(1880)

"எந்த அடியானுடைய பாதங்களில் அல்லாஹ்வின் பாதையில் புழுதிபடியவில்லையோ அவனை நரகம் தீண்டும்" என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அப்துர்ரஹ்மான் பின் ஜுபைர்(ரலி) நூல்: புகாரி(2811)

"அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதற்கு நிகரானது எது?" என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது "அதற்கு நீங்கள் சக்தி பெற மாட்டீர்கள்" என நபி(ஸல்)அவர்கள் விடையளித்தார்கள்.

அவர்களிடம் இரண்டு மூன்று தடவை இவ்வாறு கேட்டபோதும் "அதற்கு நீங்கள் சக்திபெற மாட்டீர்கள்" என்றே விடை யளித்தார்கள். பிறகு "அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்பவரின் உவமையானது நோன்பையும் தொழுகையையும் விடாது கடை பிடித்து இறைவசனங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவரைப் போன்றதாகும். இத்தகைய அறப்போராளி இல்லம் திரும்பும் வரை இந்த நிலையிலேயே இருக்கிறார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(2787),முஸ்லிம்(1669)

**பயன்கள்:**

1. அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவதற்கு மகத்தான அந்தஸ்து உண்டு.
2. உண்மையில் ஜிஹாத் செயல்களிலேயே மிகச்சிறந்தது.
3. இது நரகத்தை விட்டும் தப்பிப்பதற்குக் காரணமாகும்.

## 57. போராளிக்கும் உயிர்த்தியாகிக்கும் கிடைக்கும் நன்மை

"இறைவன் மீதும் இறைத்தூதர் மீதும் நம்பிக்கை கொண்ட தற்காகவும் அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவதற்காகவுமே புறப்பட்டுச் சென்றவரை சுவர்க்கத்தில் சேர்க்கவோ அல்லது கூலியைப் பெற்றவராகவோ போர்ச் செல்வங்களைப் பெற்ற வராகவோ அவருடைய வீட்டிற்குத் திரும்பக் கொண்டு சேர்க்கும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுக் கொண்டுள்ளான். முஹம்மதுடைய உயிர் எவன் வசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் பாதையில் எவர் காயம்பட்டாலும் அவர் காயம்பட்ட அதே நிலையிலேயே மறுமையில் வருவார்.

அதன் நிறம் இரத்தத்தின் நிறமாகவும் வாடை கஸ்தூரியின் வாடையாகவும் இருக்கும்.

முஹம்மதுடைய உயிர் எவன் வசமுள்ளதோ அவன் மீது சத்தியமாக முஸ்லிம்களுக்குச் சிரமமாக இருக்காவிட்டால் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியக் கூடிய எந்தச் சிறு படையுடனும் ஒருபோதும் நான் செல்லாமல் இருந்திருக்க மாட்டேன். ஆயினும் அவர்கள்(போராளிகள்)அனைவருக்கும் வாகனம் ஏற்பாடு செய்வதற்கு என்னிடம் வசதியில்லா மலிருந்தது. அதுபோல அவர்களிடமும் வசதியில்லாமல் இருந்தது. ஒருக்கால் நான் அச்சிறு படையுடன் சென்றி ருந்தால் என்னோடு வராமல் பின் தங்கிவிடுவது வாகன வசதியில்லாதோருக்கு சிரமமாகி விட்டிருக்கும். முஹம்மதின் உயிர் எவன் வசமுள்ளதோ அவன் மீது சத்தியமாக! நான் அல்லாஹ்வின் பாதையில் போர் புரிந்து கொல்லப்பட்டு மீண்டும் (உயிர்ப்பிக்கப்பட்டு) போர் புரிந்து கொல்லப்பட்டு மீண்டும் (உயிர்ப்பிக்கப்பட்டு) போர் புரிந்து கொல்லப் படுவதையே விரும்புகிறேன்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(1876)

"விரலால் கிள்ளிவிடப்படுவதை ஒருவர் எப்படி எடுத்துக் கொள்கிறாரோ அவ்வாறே உயிர்தியாகி தான் கொல்லப்படு வதையும் எடுத்துக்கொள்கிறார்" என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: திர்மிதி(1668)

"சொர்க்கம் சென்றவர்களில் உயிர்த்தியாகியைத் தவிர வேறெவரும் இவ்வுலகிலுள்ள அனைத்தும் அவருக்குக் கிடைத்தாலும் இவ்வுலகிற்கு திரும்பி வருவதை விரும்ப மாட்டார்.அல்லாஹ் அவருக்கு அளித்த மதிப்பைக் கண்டதால்

அவர் மட்டும் இவ்வுலகிற்குத் திரும்ப வந்து அல்லாஹ்வின் பாதையில் பத்துத் தடவை கொல்லப்பட வேண்டும் என விரும்புவார்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), புகாரி(2817),முஸ்லிம்(1877)

“உயிர்த்தியாகிக்கு கடனைத் தவிர அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அம்ர்(ரலி), முஸ்லிம்(1886)

**பயன்கள்:**

1. ஜிஹாத் செய்வதற்கு மாபெரும் அந்தஸ்துள்ளது. இது சொர்க்கம் செல்வதற்கு பெரும் காரணமாக அமைகின்றது.
2. உயிர் தியாகிக்கு மாபெரும் கூலி உண்டு. கொல்லப் படும் வேதனை அவருக்கு மிகவும் இலேசாக இருக்கும்.
3. உயிர்த்தியாகம் செய்வது அனைத்துப் பாவங்களும் மன்னிக்கப்படுவதற்கு மிகப்பெரும் காரணமாக அமைகின்றது.

## 58. ஜிஹாதில் நபித்தோழர்கள்

நபி(ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் (பத்ரை நோக்கிப்) புறப்பட்டார்கள். இறுதியில் இணைவைப்போருக்கு முன்பாகவே பத்ரை அடைந்தார்கள். பிறகு இணைவைப்ப வர்களும் வந்தனர். அப்போது நபி(ஸல்) அவர்கள், “நீங்கள் எந்த இடத்திற்குச் சென்றாலும் அங்கு உங்களுக்கு முன்பே நான் வராமல் இருக்க முடியாது” என்று கூறினார்கள்.

பிறகு இணைவைப்பவர்கள் நெருங்கி வந்தபோது நபி (ஸல்) அவர்கள், “சொர்க்கத்தைப் பெறுவதற்காக எழுந்து வாருங்கள். அதன் அகலம் வானங்கள் மற்றும் பூமியளவு இருக்கும்” என்று கூறினார்கள். அப்போது உமைர் பின் ஹிமாம்(ரலி), “அல்லாஹ்வின் தூதரே! வானங்கள் மற்றும்

பூமி" அளவுக்கு அகலமான சொர்க்கமா?" எனக் கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் "ஆம்" என பதிலளித்ததும் "ஆஹா! ஆஹா"! என்று உமைர்(ரலி)கூறினார்கள். "ஆஹா! ஆஹா! என்று கூற உமைத் தூண்டியதெது?" என நபி(ஸல்)அவர்கள் வினவியதும் உமைர் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! சொர்க்கவாசியாக ஆசைப்பட்டே அவ்வாறு கூறினேன்" என விடையளித்தனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "நிச்சயமாக நீர் சொர்க்கவாசிதான்" என்று கூறியவுடன் உமைர்(ரலி) அவர்கள் தமது அம்புக் கூட்டிலிருந்து பேரீத்தம் பழங்களை எடுத்துத் தின்று பின்னர் எதிரிகளுடன் போர் புரிந்து கொல்லப் பட்டார்கள். அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: முஸ்லிம்(1901)

எனது சிறிய தந்தை அனஸ் பின் நழ்ரு(ரலி) அவர்கள் பத்ருப் போரில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள், (நபிகள் நாயகத்திடம்) "அல்லாஹ்வின் தூதரே! இணைவைப்பவர் களுடன் நடக்கின்ற போரில் அல்லாஹ் என்னைக் கலந்து கொள்ளச் செய்தால் நான் எவ்வாறு செயலாற்றுவேன் என்பதை நிச்சயம் அல்லாஹ் பார்க்கத்தான் போகிறான்" என்று கூறினார்கள். அதன் பிறகு உஹதுப் போர் நடந்தபோது களத்தில் முன்னேறிச் சென்றார்கள். அங்கு அவர்களை ஸஃது பின் முஅத்(ரலி) அவர்கள் சந்தித்தார்கள். அப்போது அனஸ் பின் நழ்ரு அவர்கள், "ஸஃத் பின் முஆத் (ரலி) அவர்களே! நழ்ருடைய இறைவன் மீது சத்தியமாக உஹத் மலைக்கு அப்பாலிருந்து நான் சொர்க்கத்தின் வாடையை உணர்கிறேன்" எனக் கூறினார்கள்.

பிறகு ஸஃது (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! அனஸ் பின் நழ்ர் செயல்பட்டது போல என்னால் முடியாது" எனக் கூறினார்கள். அனஸ் பின்

நழ்ரு (ரலி) உடலில் வாளால் அல்லது ஈட்டியால் அல்லது அம்பால் ஏற்பட்ட எண்பதுக்கும் அதிகமான காயங்களை நாங்கள் பார்த்தோம். அறிவிப்பவர்: அனஸ்(ரலி),

நூல்: புகாரி(2806),முஸ்லிம்(1902)

ஒருகிராமவாசி நபி(ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களை நம்பிக்கை கொண்டு அவர்களைப் பின்பற்றினார். பின்னர் (நபியவர்களிடம்) "நான் உங்களுடன் போருக்குப் புறப்பட்டு வருவேன்" என்று கூறினார். இவர் குறித்து சில அறிவுரைகளை தமது தோழர்கள் சிலரிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஒரு போர் நடந்போது நபி(ஸல்) அவர்களுக்கு சில போர்ச் செல்வங்கள் கிடைத்தன. அவற்றை அவர்கள் பங்கிட் டார்கள். அதில் அம்மனிதருக்கும் ஒரு பங்கு வைத்து அதைத் தம் தோழர்களிடம் கொடுத்தனுப்பினார்கள். அப்போது அவர் தோழர்களின் ஒட்டகங்களை மேய்த்துக் கொண்டிருந்தார். அவர் வந்ததும் அவருக்குரிய பங்கை அவர்கள் கொடுத்த போது இது என்னவென்று கேட்டார். "நபி(ஸல்)அவர்கள் உங்க ளுக்காகத் தந்த பங்காகும்" என்று அவர்கள் கூறினார்கள். உடனே அவர் அதை எடுத்துக் கொண்டு நபி(ஸல்) அவர் களிடம் வந்து இது என்னவென்று கேட்டார். அவர்கள், "நான் உனக்காகத் தந்த பங்கு" என்று கூறினார்கள்.

அப்போது அவர், "இதற்காக நான் உங்களைப் பின்பற்ற வில்லை. மாறாக தனது தொண்டையைச் சுட்டிக்காட்டி இந்த இடத்தில் நான் அம்பால் தாக்கப்பட்டு மரணம் அடைந்து சொர்க்கத்தில் நுழைய வேண்டும் என்பதற்காகவே நான் உங்களைப் பின்பற்றினேன்" என்று கூறினார். அதைக் கேட்டதும் நபியவர்கள் "நீ அல்லாஹ்வை மெய்ப்படுத்தினால் அவன் உன்னை மெய்ப்படுத்துவான்" என்று கூறினார்கள்.

பிறகு தோழர்கள் அந்த இடத்தில் கொஞ்சநேரம் தங்கி யிருந்துவிட்டு எதிரிகளுடன் போர் புரிவதற்கு எழுந்து சென்றனர். அப்போது நடந்த அந்தப் போரில் அவர் கொல்லப் பட்டார். பிறகு அம்மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் தூக்கிக் கொண்டு வரப்பட்டார். அவர் சுட்டிக் காட்டியவாறு (அவரது தொண்டையில்) அம்பு தைத்திருந்தது. "இவர்தான் அந்த மனிதரா?" என்று நபி(ஸல்)அவர்கள் கேட்க தோழர்கள் "ஆம்" என்றனர். உடனே நபி(ஸல்)அவர்கள், "அவர் அல்லாஹ்வை மெய்ப்படுத்திவிட்டார். அல்லாஹ்வும் அவரை மெய்ப்படுத்தி விட்டான்." என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஷத்தாத் (ரலி), நூல்: நஸயி(1927)

**பயன்கள்:**

1. நபித்தோழர்களிடம் பலமான ஈமானும் அல்லாஹ்வின் பாதையில் உயிர்தியாகம் செய்வதற்கான ஆவலும் இருந்தது.
2. அவர்களிடம் வீரம் இருந்தது. நன்மையின் பால் விரைதல் இருந்தது.

## 59. முஸ்லிம்களின் தேவைகளை நிறைவேற்றுவதன் சிறப்பு

"ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமின் சகோதரராவார். அவருக்கு அநியாயம் செய்யமாட்டான். (தேவையான சமயத்தில்) அவருக்கு உதவாமல் இருக்க மாட்டான். யார் தன் சகோ தரனின் தேவையை நிறைவேற்றுவதில் ஈடுபட்டுள்ளாரோ அவரது தேவையை நிறைவேற்றுவதில் அல்லாஹ் ஈடுபடு கிறான். யார் ஒரு முஸ்லிமின் சிரமத்தை நீக்குகின்றாரோ அவரை விட்டும் மறுமையின் சிரமங்களில் ஒன்றை அல்லாஹ்

நீக்குவான். யார் ஒரு முஸ்லிமின் தவறை மறைக்கின்றாரோ மறுமையில் அவரின் தவறுகளை அல்லாஹ் மறைப்பான்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), நூல்: புகாரி(2442),முஸ்லிம்(2580)

"யாரேனும் ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் இவ்வுலக கஷ்டங்களில் ஒன்றை நீக்கினால் மறுமையின் சிரமங்களில் ஒன்றை அவரை விட்டும் அல்லாஹ் நீக்குவான். கடனால் சிரமப்படுபவருக்கு (கடனை தள்ளுபடி செய்து அல்லது கூடுதல் அவகாசம் வழங்கி)யாரேனும் சலுகை வழங்கினால் இவ்வுலகிலும் மறுமையிலும் அல்லாஹ் அவருக்கு சலுகை அளிப்பான். ஒரு முஸ்லிமின் குறையை யாரேனும் மறைத்தால் இவ்வுலகிலும் மறுமையிலும் அவரின் குறையை அல்லாஹ் மறைப்பான். ஒருவர் தன் சகோதரருக்கு உதவும் போதெல்லாம் அல்லாஹ் அவருக்கு உதவுகிறான்.

எவர் கல்வியைத் தேடும் பாதையில் செல்கின்றாரோ அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்திற்கு செல்லும் பாதையை இலகுவாக்குகிறான். அல்லாஹ்வின் பள்ளிகளில் ஏதேனும் ஒரு பள்ளியில் ஒன்று கூடி அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்ளும் கூட்டத்தினர் மீது அமைதி இறங்குகிறது. அருள் சூழ்கிறது. வானவர்கள் அவர்களை சூழ்ந்து கொள்கின்றனர். அவர்களைப் பற்றி அல்லாஹ் தன்னிடம் இருப்பவர்களிடத்தில் (புகழ்ந்து) கூறுகிறான். ஒருவரின் செயல் அவரைப் பின்னடையச் செய்யும்போது அவரது பாரம்பர்யம் அவரை முன்னேற்றி விடாது" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(2699)

**பயன்கள்:**

1. முஸ்லிம்களின் தேவைகளை நிறைவேற்ற முயற்சிப் பதற்கு சிறப்புண்டு. குறிப்பாக அவர்களிலுள்ள பலவீனர் களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு. காரணம் அவர்களின் தேவை அதிகமிருப்பதால்.

2. யார் தனது சகோதர முஸ்லிமுக்கு உதவி செய்கிறாரோ அவருக்குத் தேவை ஏற்படும்போது அல்லாஹ் அவருக்கு உதவி செய்கிறான்.

## 60. பின்பற்றலும் பித்அத்தும்

(நபியே!) நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்ப வர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான், மேலும் உங்களுக்காக உங்கள் பாவங்களையும் மன்னிப்பான்.(3:31)

இல்லை!(முஹம்மதே!) உம் இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட பிணக்குகளில் உம்மை நீதிபதியாக ஏற்று பின்னர் நீர் வழங்கிய தீர்ப்ரில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல் முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் மு.ஃ.மின்களாக ஆகமாட்டார்கள்.(4:65)

“நம்முடைய இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை உருவாக்கினால் அது நிராகரிக்கப்படும்” என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி),

நூல்: புகாரி(2697), முஸ்லிம்(1718)

“நம்மால் ஏவப்படாத காரியத்தை யார் செய்கிறாரோ அது நிராகரிக்கப்படும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) முஸ்லிம்(1718)

நபி(ஸல்)அவர்கள் எங்களுக்கு, உள்ளங்களை நடுங்கச் செய்து கண்களில் கண்ணீரை வரவழைக்கக்கூடிய சிறந்த போதனை செய்தார்கள். நாங்கள் “அல்லாஹ்வின் தூதரே! இது விடைபெறுபவரின் போதனை போன்றிருக்கின்றதே! எங்களுக்கு அறிவுரை கூறுங்கள்” எனக் கூறினோம்.அப்போது அவர்கள் கூறினார்கள்: “இறையச்சத்தையும் அபிசீனிய அடிமை உங்களுக்குத் தலைவராக இருந்தாலும்(உங்களில் அதிகாரம் வகிப்பவர்களுக்கு)செவிசாய்ப்பதையும் கட்டுப்படு வதையும் நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். எனக்குப் பிறகு இனி வாழ்பவர்கள் ஏராளமான கருத்து வேறுபாடுகளை காண்பார்கள் அப்போது எனது வழிமுறையையும் அவ்வழி முறையை தம் கடவாய்ப் பற்களால் கடித்துக் கொண்ட நேர்வழி பெற்ற கலீ.ஃபாக்களின் வழிமுறையையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.(மார்க்கக்) காரியங்களில் புதிதாக உருவாக்கப்பட்டதை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் புதிதாக உருவாக்கப்பட்டவை அனைத்தும் பித்அத்தாகும். பித்அத்துகள் அனைத்தும் வழிகேடாகும்.”
அறிவிப்பவர்: இர்பாழ் பின் ஸாரியா(ரலி), அபூதாவூத்(4607)

நபி (ஸல்) அவர்கள் உரை நிகழ்த்தும்போது “வார்த்தை களில் சிறந்தது அல்லாஹ்வுடைய வேதம். நேர்வழியில் சிறந்தது முஹம்மதின் நேர்வழி. காரியங்களில் கெட்டது புதிதாக உருவாக்கப்பட்டவை! எல்லா பித்அத்துகளும் வழிகேடே!” என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(867)

**பயன்கள்:**

1. மார்க்கத்தில் பித்அத் செய்வது ஹராமாகும். ஏனெனில் இது ஒரு முஸ்லிம் நபி(ஸல்)அவர்கள் மார்க்கமாக்காததை அல்லாஹ்வுக்குரிய வணக்கமாகச் செய்வதாகும்.

2. பித்அத் பெரும்பாவமாகும். இது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதைச் செய்தவன் மீதே அது திருப்பப்படும்.

3. அனைத்து வகையான பித்அத்துகளை விட்டும் தவிர்ந்து கொள்வது கடமையாகும். ஏனெனில் அவைய னைத்தும் தீமையும் வழிகேடுமாகும்.

4. இறைவனது நேசத்தையும் மன்னிப்பையும் பெறுவ தற்கான வழி இறைத்தூதரைப் பின்பற்றுவதுதான்.

## 61. ஸலவாத்தின் சிறப்பு

அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் நபியின் மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். விசுவாசிகளே! நீங்களும் அவர் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள். (33:56)

“யார் என் மீது ஒரு முறை ஸலவாத்து சொல்கிறாரோ இதற்குப் பகரமாக அவர் மீது அல்லாஹ் பத்து முறை அருளைப் பொழிகிறான்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அம்ரு(ரலி), முஸ்லிம்(408)

“உங்களுடைய நாட்களில் மிகச் சிறந்த நாள் ஜும்ஆ நாளாகும். அந்நாளில் என் மீது அதிகம் ஸலவாத்து சொல் லுங்கள். ஏனெனில் நீங்கள் கூறும் ஸலவாத் நிச்சயமாக எனக்கு எடுத்துக் காட்டப்படும்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அப்போது “அல்லாஹ்வின் தூதரே! நாங்கள்

கூறும் ஸலவாத் எப்படி உங்களுக்கு எடுத்துக்காட்டப்படும். நீங்களோ மண்ணோடு மண்ணாக மக்கிப் போய்விடுவீர்களே?” என்று தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “நபிமார்களின் உடல்களை (த்திண்ண) பூமிக்கு இறைவன் தடை செய்திருக்கின்றான்” என பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர்: அவ்ஸ் பின் அவ்ஸ்(ரலி), அபூதாவூத்(1531)

“உங்களுடைய வீடுகளை அடக்கஸ்தலங்களாக ஆக்கி விடாதீர்கள். என்னுடைய அடக்கஸ்தலத்தை திருவிழா கொண்டாடும் இடமாக ஆக்கிவிடாதீர்கள். என் மீது ஸலவாத்துச் சொல்லுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் நீங்கள் சொல்லும் ஸலவாத்து என்னை வந்தடைகின்றது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: அபூதாவூத்(2042)

“யாரேனும் எனக்கு ஸலாம் சொன்னால் அவருடைய ஸலாமுக்கு நான் பதில் சொல்லும் வரை என்னுயிரை அல்லாஹ் எனக்குத் திருப்பித் தராமலில்லை” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: அபூதாவூத்(2041)

“என் பெயர் கூறப்பட்டதும் என் மீது ஸலவாத்துச் சொல்லா தவன் நாசமாகப்போகட்டும்” என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: திர்மிதி(3545)

**பயன்கள்:**

1. நபியின் மீது ஸலவாத்து சொல்வது விரும்பத்துக்கது.
2. அதை அதிகமாகச் சொல்வது-குறிப்பாக ஜும்ஆ நாளில் விரும்பத்தக்கதாகும்.
3. நபியின் மீது ஸலவாத்து கூறுபவருக்குக் கூலி உண்டு.

## 62. கடனாளிக்கு அவகாசம் கொடுத்தல்

“உங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்களில் ஒரு மனிதரின் உயிரை வானவர்கள் கைப்பற்றினார்கள். “நன்மை ஏதேனும் செய்திருக்கிறாயா?” என்று அம்மனிதரிடம் அவ்வானவர்கள் கேட்டனர். அதற்கவர் “இல்லை” என்றார். “நன்றாக நினைவு படுத்திப்பார்” என்று அவர்கள் கூறியதும், “நான் மக்களுக்கு கடன் கொடுத்து வந்தேன். கடனால் சிரமப்படுபவருக்கு கூடுதல் அவகாசம் வழங்குமாறும் கடனைத் திருப்பித் தர வசதியுள்ளவரிடம் தாராளமாக நடந்துகொள்ளுமாறும் எனது வாலிப நேயர்களிடம் கூறினேன்” என்றார் அவர். உடனே “அவரிடம் தாரளமாக நடந்துகொள்ளுங்கள்” என அல்லாஹ் (வானவர்களிடம்) கூறினான்” என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹுதைபா(ரலி)

நூல்: புகாரி(2077),முஸ்லிம்(1560)

“ஒரு மனிதர் மக்களுக்குக் கடன் கொடுத்து வந்தார். தனது வாலிப நேயரிடம் “கடனால் சிரமப்படுபவரிடம் நீ சென்றால் அவரிடம் தாராளமாக நடந்துகொள். நம்மிடம் அல்லாஹ் தாராளமாக நடந்து கொள்வான்” என்று கூறியிருந்தார். பிறகு அவர் அல்லாஹ்விடம் சேர்ந்ததும் அவரிடம் அல்லாஹ் தாராளமாக நடந்து கொண்டான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)

நூல்: புகாரி(3480), முஸ்லிம்(1562)

அபூகதாதா(ரலி)தன்னுடைய கடனாளியைத் தேடினார்கள். அவர் மறைந்து கொண்டார். பின்னர் அவர் கிடைத்ததும் தான் கடனால் சிரமப்படுவதாகக் கூறினார். அபூகதாதா(ரலி) “அல்லாஹ்வின் மீது சத்தியமாகவா?” என்று கேட்டார்கள்.

"அல்லாஹ்வின் மீது சத்தியமாகத் தான்" என்று அவர் கூறினார். உடனே அபூகதாதா(ரலி)அவர்கள், "மறுமையின் சிரமங்களிலிருந்து அல்லாஹ் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென யார் விரும்புகிறாரோ அவர் கடனால் சிரமப்படுபவருக்கு கூடுதல் அவகாசம் வழங்கட்டும் அல்லது கடனை தள்ளுபடி செய்யட்டும்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறியதை நான் செவியுற்றிருக்கிறேன் என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூகதாதா(ரலி) நூல்: முஸ்லிம்(1563)

**பயன்கள்:**

1. கடனால் சிரமப்படுபவருக்கு கூடுதல் அவகாசம் வழங்குவது அல்லது கடனைத் தள்ளுபடி செய்வது விரும்பத் தக்கது.
2. இவ்வாறு செய்வது மறுமையின் சிரமங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு காரணமாக அமையும்.
3. இது அந்த அடியானிடம் அல்லாஹ் தாராளமாக நடந்து கொள்வதற்கும் காரணமாக அமைந்துவிடும்.

## 63. வட்டி

வட்டியை உண்போர் (மறுமை நாளில்) ஷைத்தான் தீண்டியவனைப்போல் பைத்தியமாகவே எழுவார்கள். "வியாபாரமும் வட்டியைப் போன்றதே" என்று அவர்கள் கூறியதே இதற்குக் காரணம். அல்லாஹ் வியாபாரத்தை அனுமதித்து வட்டியைத் தடைசெய்து விட்டான். ஆகவே எவர் தம் இறைவனிடமிருந்து தமக்கு அறிவுரை வந்த பிறகு (வட்டி வாங்குவதை விட்டு) விலகிக் கொள்கிறாரோ அவர் முன்பு வாங்கியது வாங்கியது தான் என்றாலும் அவரின் விவகாரம் அல்லாஹ்வின் பொருப்பிலுள்ளது. ஆனால்(இந்தக் கட்டளை வந்த பிறகும்)யாரேனும்

(இந்தக் குற்றத்தை) மீண்டும் செய்தால் அவர்கள் நரகவாசிகளேயாவர். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். அல்லாஹ் வட்டியை அழிக்கிறான். தர்மங்களை வளர்க்கிறான். நன்றி கெட்ட எந்தப் பாவியையும் அல்லாஹ் விரும்ப மாட்டான். (2:275,276)

நம்பிக்கை கெண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் (உங்களுக்கு வர வேண்டிய) வட்டிப் பாக்கிகளை விட்டு விடுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால் அல்லாஹ்விடமிருந்தும் அவன் தூதரிடமிருந்தும் போர்ப் பிரகடனத்தை உறுதி செய்து கொள்ளுங்கள். (2:278,279)

“அழிவைத் தரக்கூடிய ஏழு பெரும் பாவங்களை விட்டும் விலகிக்கொள்ளுங்கள்” என நபி(ஸல்) கூறினார்கள். “அவை என்னென்ன?” என்று தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது, சூனியம் செய்வது, அல்லாஹ் புனிதப்படுத்தியிருக்கின்ற உயிரை நியாயமின்றிக் கொல்வது, வட்டி உண்பது, அநாதைகளின் பொருளை உண்பது, போர்க்களத்தில் புறமுதுகு காட்டுவது, மு:ஃமினான கற்புள்ள அப்பாவிப் பெண்களை அவதூறு சொல்வது” எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), (புகாரி-2767,முஸ்லிம்-89)

“வட்டி கொடுப்பவனையும் வாங்குபவனையும் நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.”

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத்(ரலி), நூல்: முஸ்லிம்(1597)

## பயன்கள்:

1. வட்டி கடுமையான ஹராமாகும். இது அழிவைத் தரக் கூடிய பெரும்பாவங்களில் ஒன்றாகும்.

2. இது பரக்கத்தை அழித்துவிடக்கூடியது. வட்டி உண்பதில் பிடிவாதமாக இருப்பவன் அல்லாஹ்வுடனும் அவன் தூதரு டனும் போரிடுபவனாவான்.

3. வட்டி கொடுக்கல் வாங்கல் செய்பவர்கள் இறைத் தூதரின் நாவினால் சபிக்கப்பட்டவர்களாவர்.

## 64. திருக்குர்ஆனின் சிறப்பு

"உங்களில் யாரேனும் தன் வீட்டிற்குத் திரும்பியதும் கர்ப்ப முள்ள பெரிய கொழுத்த மூன்று ஒட்டகங்கள் கிடைக்க வேண்டுமென விரும்புவாரா?" என நபி (ஸல்) அவர்கள் கேட்டதும் நாங்கள் "ஆம்" என்றோம். அப்போது, "உங்களில் ஒருவர் தனது தொழுகையில் ஓதக்கூடிய மூன்று வசனங்கள் கர்ப்பமுள்ள பெரிய கொழுத்த மூன்று ஒட்டகங்களை விடச் சிறந்ததாகும்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம்(802)

"அல்லாஹ்வின் வேதத்தில் ஒரு எழுத்தை யாரேனும் ஓதினால் அதற்கு ஒரு நன்மை உண்டு. ஒரு நன்மை என்பது அதுபோல் பத்து மடங்காகும். அலி∴ப், லாம், மீம் என்பதை ஒரு எழுத்து என்று நான் கூற மாட்டேன். மாறாக அலி∴ப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்து" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரலி) நூல்: திர்மிதி(2910)

"யார் குர்ஆனில் அதிக பரிச்சயம் உடையவராக ஓது கிறாரோ அவர் கண்ணியமிக்க நல்லவர்களான வானவர் களுடன் இருப்பார். மிகவும் சிரமப்பட்டு திக்கித் திக்கி யார்

குர்ஆனை ஓதுகிறாரோ அவருக்கு இரு கூலிகள் உண்டு" என்று நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி)
நூல்: முஸ்லிம்(798),திர்மிதி(2904)

**பயன்கள்:**

1. திருக்குர்ஆன் ஓதுவதற்கு சிறப்பு உண்டு.
2. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு நன்மை உண்டு.
3. திறமையாக ஓதக்கூடியவர் சொர்க்கத்தில் வானவர் களுடன் இருப்பார்.
4. சிரமப்பட்டு ஓதுபவருக்கு இரண்டு கூலி உண்டு.

## 65. பகரா, ஆலுஇம்ரானின் சிறப்பு

"உங்கள் வீடுகளை மண்ணறையாக்கிவிடாதீர்கள். எந்த வீட்டில் சூரத்துல் பகரா ஓதப்படுகிறதோ அங்கிருந்து ஷைத்தான் வெருண்டோடுகிறான்" என நபி(ஸல்)கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(780)

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: "குர்ஆனை ஓதுங்கள். ஏனெனில் மறுமையில் அது அதனை ஓதியவருக்கு பரிந்துரை செய்யக்கூடியதாக வரும். அல்பகரா, ஆலு இம்ரான் ஆகிய ஒளிமயமான இரண்டு ஸூராக்களை ஓதுங்கள். அவ்விரண்டும் மறுமையில் இரு மேகங்களைப்போல் அல்லது இறக்கை விரித்துப் பறக்கும் இரண்டு பறவைக் கூட்டங்களைப்போல் வந்து அவற்றை ஓதியவர்களுக்காக வாதாடும். ஸூரதுல் பகராவை ஓதுங்கள். ஏனெனில் அதைப் பற்றிப் பிடிப்பது பரகத் ஆகும். அதை விட்டுவதோ நஷ்டமாகும். அசத்திய வாதிகள் (அல்லது சூனியக்காரர்கள்) அதன் சிறப்பை அடைய முடியாது." அறிவிப்பவர்: அபு உமாமா(ரலி),

நூல்: முஸ்லிம்(804)

“பகரா அத்தியாயத்தின் கடைசி இரு வசனங்களை யாரேனும் இரவில் ஓதினால் அதுவே அவருக்குப் போதுமானதாகும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூமஸ்வூத்(ரலி) நூல்: புகாரி(5010)

**பயன்கள்:**

1. பகரா, ஆலுஇம்ரான் ஆகிய இரு அத்தியாயங்களுக்கு சிறப்புண்டு.
2. அவ்விரு அத்தியாயங்களும் அதனை ஓதியோருக்காக வாதாடும்.
3. பகரா அத்தியாயத்தை ஓதுவது ஷைத்தான்களை வீட்டை விட்டு விரட்டுகின்றது.
4. பகரா அத்தியாயத்தின் கடைசி இரு வசனங்களை ஓதுவதற்கும் சிறப்புண்டு.

## 66. அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதன் சிறப்பு

“அடியார்கள் காலைப் பொழுதை அடையும் ஒவ்வொரு நாளும் இரண்டு வானவர்கள் இறங்குகின்றனர். “இறைவா! உன்னுடைய பாதையில் செலவு செய்பவருக்கு நன்மை வழங்குவாயாக!” என்று ஒருவரும், “இறைவா! உன்னுடைய பாதையில் செலவு செய்யாமல் பதுக்கி வைப்பவருக்கு அழிவைக் கொடுப்பாயாக!” என்று இன்னொருவரும் பிரார்த்திக்கின்றனர்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(1442),முஸ்லிம்(1010)

“தர்மம் செல்வத்தைக் குறைத்துவிடுவதில்லை. அடியான் பிறரை மன்னிப்பதன் மூலம் அல்லாஹ் அவரது மதிப்பை உயர்த்தாமலிருப்பதில்லை. அல்லாஹ்வுக்காக யாரேனும் பணிவுடன் நடந்தால் அவரை அல்லாஹ் உயர்த்தாமல் இருப்பதில்லை” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(2588)

“அல்லாஹ் தூய்மையானதைத் தவிர வேறு எதையும் ஏற்க மாட்டான் என்பதால் யாரேனும் தூய்மையான உழைப் பிலிருந்து ஒரு பேரீத்தம் பழத்தைப் போன்றேனும் தர்மம் செய்தால் அதை அல்லாஹ் தனது வலக்கரத்தால் வாங்கிக் கொள்கிறான். பிறகு உங்களில் ஒருவர் தனது குதிரைக் குட்டியை வளர்ப்பதுபோல அதை அல்லாஹ் தர்மம் செய்த வருக்காக வளர்க்கிறான்- அது மலையைப்போல பெரிதாகின்ற வரை” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), புகாரி(1410),முஸ்லிம்(1014)

“ஒரு மனிதருக்கு அல்லாஹ் செல்வத்தை வழங்கி அதை சத்தியத்தில் செலவு செய்வதற்கான உதவியையும் வழங் கினான். இன்னொருவருக்கு ஞானத்தை வழங்கினான். அவர் அதைக் கற்றுக்கொடுத்துக் கொண்டும் அதன் மூலம் தீர்ப்பு வழங்கிக் கொண்டும் இருக்கிறார். இவ்விருவரைத் தவிர வேறெவர் மீதும் பொறாமை கொள்ளலாகாது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னுமஸ்வூத்(ரலி), புகாரி(73),முஸ்லிம்(816)

**பயன்கள்**

1. தர்மம் செய்வதற்கும் அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்கும் சிறப்பு உண்டு.

2. தூய்மையான- ஹலாலான உழைப்பிலிருந்து செய்யக் கூடிய தர்மமே ஏற்றுக் கொள்ளப்படும்.

3. செல்வம் பெருகுவதற்கும் அதில் பரக்கத் ஏற்படு வதற்கும் தர்மம் காரணமாகின்றது.

## 67. தர்மத்தின் சிறப்பு (1)

தர்மம், நன்மையான காரியம், மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படுத்துதல் ஆகியவற்றை ஏவியதைத் தவிர அவர்களின் பெரும்பாலான பேச்சுக்களில் எந்த நன்மையும் இல்லை. அல்லாஹ்வின் திருப்தியை நாடி இவற்றைச் செய்பவருக்கு மகத்தான கூலியை வழங்குவோம். (4:114)

நீங்கள் எப்பொருளை(நல்வழியில்)செலவிட்டாலும் அவன் அதற்கான பிரதிபலனை அளிப்பான். (34:39)

நான் நபி(ஸல்)அவர்களிடம் வந்தேன். அப்போதவர்கள், “செல்வத்தைப் பெருக்கும் ஆசை உங்கள் கவனத்தைத் திருப்பிவிட்டது” (102:1) என்ற வசனத்தை ஓதிக்காட்டி, “மனிதன் என்னுடைய பொருள், என்னுடைய பொருள் என்று கூறுகிறான். உண்மையில் நீ உண்டு கழித்ததையும் உடுத்துக் கிழித்த தையும் தர்மம் செய்து செலவழித்ததையும் தவிர உன்னுடைய பொருள் வேறென்ன இருக்கிறது?” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் ஷிக்ஹீர்(ரலி)

நூல்: முஸ்லிம்(2958),திர்மிதி(2342)

ஒரு மனிதர் வனாந்திரத்தில் இருக்கும்போது “இன்னா ருடைய தோட்டத்தில் மழை பொழியச் செய்வாயாக!” என்று மேகத்திலிருந்து ஒரு சப்தம் வந்ததைக் கேட்டார். உடனே அந்த மேகம் நகர்ந்து கற்பாங்கான ஓர் இடத்தில் தனது

தண்ணீரைக் கொட்டியது. அங்கிருந்த ஓடைகளில் ஒன்று அத்தண்ணீர் முழுவதையும் வாங்கிக் கொண்டது.

அந்த மனிதர் அத்தண்ணீரைப் பின்தொடர்ந்து சென்ற போது அங்கு ஒருவர் தன் தோட்டத்தில் நின்று கொண் டிருந்தார். மண்வெட்டியால் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டி ருந்தார். அவரிடம், “அல்லாஹ்வின் அடியாரே! உங்களின் பெயரென்ன?” என்று கேட்டார். அதற்கு மேகத்திலிருந்து கேட்ட அதே பெயரையே அவர் கூறினார். அவர் கேட்டார்: “அல்லாஹ்வின் அடியாரே! எதற்காக எனது பெயரைக் கேட்கிறீர்கள்?” அதற்கு அந்த மனிதர், “இந்தத் தண்ணீர் எந்த மேகத்திலிருந்து வந்ததோ அந்த மேகத்திலிருந்து உங்கள் பெயர் கூறி, “இன்னாருடைய தோட்டத்தில் மழை பொழியச் செய்வாயாக!” என்ற ஒரு சப்தத்தைக் கேட்டேன். (அதனால் தான் கேட்கிறேன்)” என்று பதில் கூறினார்.

மேலும், “இதில் நீங்கள் என்ன செய்வீர்கள்?” என்றும் கேட்டார். அதற்கவர், “நீங்கள் இவ்வாறு கேட்கும்போது நான் கூறித்தானே ஆகவேண்டும். இத்தோட்டத்தில் என்ன விளை கிறது என்று பார்ப்பேன். அதில் மூன்றில் ஒரு பகுதியை தர்மம் செய்வேன். மூன்றில் ஒரு பகுதியை நானும் என் குடும் பத்தாரும் உண்போம். மூன்றில் ஒரு பகுதியை திரும்பவும் இத்தோட்டத்தில் விதைப்பேன்” என்று பதில் கூறினார். மற்றொரு அறிவிப்பில் “மூன்றில் ஒரு பகுதியை ஏழைகளுக் கும் யாசிப்போருக்கும் வழிப்போக்கருக்கும் கொடுப்பேன்” என்று அவர் கூறியதாக உள்ளது.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(2984)

**பயன்கள்:**

1. தர்மம் செய்வதற்கு சிறப்பு உண்டு.
2. செல்வம் பெருகுவதற்கும் அதில் பரகத் ஏற்படுவதற்கும் தர்மம் காரணமாக அமைகின்றது.
3. தான் செய்த தர்மமே ஒரு முஸ்லிமுக்கு எஞ்சியிருக்கும்.

## 68. தர்மத்தின் சிறப்பு (2)

நல்லவற்றில் நீங்கள் எதைச் செலவிட்டாலும் அது உங்களுக்கே நன்மை பயப்பதாகும். (2:272)

“மக்களிடையே மறுமையில் தீர்ப்பு வழங்கப்படும் வரை ஒவ்வொரு மனிதனும் தான் செய்த தர்மத்தின் நிழலிலேயே இருக்கிறான்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர்(ரலி)

நூல்: அஹ்மத்(16882)

“பாதி பேரீத்தம் பழத்தைத் தர்மம் செய்தேனும் நரகத் திலிருந்து உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்” என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அதீ பின் ஹாதம் (ரலி),

நூல்: புகாரி(1417),முஸ்லிம்(1016)

“நிலையான தர்மம், பயனளிக்கும் கல்வி, தனக்காக பிரார்த்தனை செய்யும் நல்லொழுக்கமுள்ள பிள்ளை ஆகிய மூன்றையும் தவிர மற்ற செயல்பாடுகள் யாவும் மனிதன் மரணித்ததும் முடிவுக்கு வருகின்றன” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: முஸ்லிம்(1631)

**பயன்கள்:**

1. மறுமையின் பயங்கரங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள தர்மம் காரணமாக அமைகின்றது.

2. தர்மம் குறைவாகச் செய்தாலும் நரகிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது.

3. தர்மம் செய்தவர் இறந்த பின்னரும் அதற்கான கூலி அவருக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும்.

## 69. சிறந்த தர்மம்

“தேவை போக எஞ்சியதை தர்மம் செய்வதே சிறந்த தர்மம். உன் நெருங்கிய உறவினர்களிலிருந்து கொடுக்கத் துவங்கு” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(1426)

ஒரு மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் வந்து “மகத்தான கூலியைப் பெற்றுத் தரும் தர்மம் எது?” என வினவினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “வறுமைக்கு அஞ்சி, செல்வத் திற்கு ஆசைப்பட்டு, கருமியாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்போது நீ செய்யும் தர்மமே மகத்தான கூலியைப் பெற்றுத் தரும் தர்மமாகும். உயிர் தொண்டைக் குழியை அடையும்போது இன்னாருக்கு இவ்வளவு கொடுங்கள், இன்னாருக்கு இவ்வளவு கொடுங்கள் என்று கூறும் நிலை வரும் வரை தர்மம் செய்வதைத் தள்ளிப்போடாதே! அந்த நேரத்திலோ அந்தச் செல்வம் வேறொருவருக்கு (உன் வாரிசு களுக்கு) உரியதாய் ஆகிவிட்டிருக்கும்” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(1419)

“ஒரு ஏழைக்கு தர்மம் செய்வது தர்மமாக மட்டுமே அமைகின்றது. ஒரு இரத்த பந்தமுடையவருக்கு தர்மம் செய்வது தர்மமாகவும் உறவினருடன் இணைந்து வாழ்ந்த தாகவும் அமைகின்றது” என நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஸல்மான் பின் ஆமிர்(ரலி), நஸயீ(2535)

**பயன்கள்:**

1. தேவையுடைய உறவினர்களுக்கு தர்மம் செய்வது மற்றவர்களுக்குத் தர்மம் செய்வதை விட மேலானது.

2. ஒரு மனிதன் ஆரோக்கியமாக இருக்கும்போதும் நீண்ட நாட்களுக்கு வாழவேண்டுமென்ற ஆர்வமும் வறுமை பற்றிய பயமும் இருக்கும்போது செய்யக்கூடிய தர்மமே சிறந்த தர்மமாகும்.

## 70. தர்மத்தை இரகசியமாகச் செய்தல்

தர்மங்களை நீங்கள் வெளிப்படையாகச் செய்தால் அது நல்லதே. நீங்கள் அதை (பிறருக்கு) மறைத்து ஏழைகளுக்கு வழங்கினால் அது உங்களுக்கு மிகச் சிறந்து. (2:271)

"அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்த நாளில் ஏழு பேருக்கு அல்லாஹ் தனது நிழலில் இடம் கொடுப்பான். அவர்கள்: நீதி தவறாத அரசர், இறைவழிபாட்டில் ஊறிய இளைஞர், பள்ளிவாசல்களுடன் தமது உள்ளத்தைத் தொடர்புபடுத்திக் கொண்ட ஒரு மனிதர், அல்லாஹ்வுக்காகவே நட்பு கொண்ட இரண்டு நண்பர்கள். அவர்கள் அல்லாஹ்வுக் காகவே இணைந்து அல்லாஹ்வுக்காகவே பிரிகின்றார்கள், உயர் அந்தஸ்தும் அழகும் உள்ள ஒரு பெண் தவறான வழிக்கு தன்னை அழைக்கின்றபோது நான் அல்லாஹ்வை அஞ்சுகிறேன் என்று சொல்லும் மனிதர், வலக்கரம் கொடுப் பதை இடக் கரமும் அறியா வண்ணம் இரகசியமாகத் தர்மம் செய்பவர், தனிமையில் இறைவனை நினைத்துக் கண்ணீர் சிந்துபவர்" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), (புகாரி-660),(முஸ்லிம்-1031)

**பயன்கள்:**

1. தர்மத்தை இரகசியமாகச் செய்வது பகிரங்கமாகச் செய்வதை விடச் சிறந்ததாகும்.

2. இரகசியமாக தர்மம் செய்பவருக்கு மறுமையில் அல்லாஹ் தனது அர்ஷின் கீழ் நிழல் தருகின்றான்.

## 71. தர்மத்தை பகிரங்கமாகச் செய்தல்

பகலின் ஆரம்ப நேரத்தில் நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் இருக்கும்போது செருப்பு அணியாத,போதிய ஆடையில்லாத ஒரு கூட்டத்தினர் வந்தனர். கோடு போட்ட கம்பளியை அல்லது பெரிய ஆடையை அணிந்திருந்தனர். வாட்களைத் தொங்கவிட்டிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் முழர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும் சொல்வதாயின் அவர்கள் அனைவரும் முழர் கோத்திரத்தைச் சர்ந்தவர்கள்.

அவர்களின் வறுமையைக் கண்டதும் நபி(ஸல்)அவர்களின் முகம் மாறிவிட்டது.உடனே தமது வீட்டிற்குச் சென்று பின்னர் வெளியே வந்து பிலால்(ரலி)அவர்களை பாங்கு சொல்லுமாறு கூறினார்கள். அவர் பாங்கு சொல்லி இகாமத் சொன்னார். நபி(ஸல்)அவர்கள் தொழுவித்தார்கள். பிறகு உரையாற்றி னார்கள். அவர்கள் தம் உரையில், “மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள். அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும் பெண் களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள். உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்). திண்ணமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்” (4:1) என்ற வசனத்தையும்

“நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். ஒவ்வொரு மனிதனும் நாளைய தினத்திற்கு எதனைத் தயார் செய்து வைத்திருக்கின்றான் என்று பார்க்கட்டும். அல்லாஹ் அஞ்சுங்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிந் தவன்” (59:18) என்ற வசனத்தையும் ஓதி, “யாரேனும் தர்மம் செய்யுங்கள். தமது தீனாரை, திர்ஹமை, ஆடையை, ஒரு ஸாஉ கோதுமையை, ஒரு ஸாஉ பேரீத்தம் பழத்தை, ஏன் பாதி பேரீத்தம் பழத்தையாவது தர்மம் செய்யுங்கள்” என்று கூறினார்கள்.

உடனே அன்ஸார் குலத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் கையால் தூக்கமுடியாத (கனத்த) ஒரு பையைக் கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து மக்களும் ஒருவர் பின்னர் ஒருவராக கொடுக்கலானார்கள். இறுதியில் உணவுப் பொருள்கள் மற்றும் ஆடைகளின் இரு(பெரும்)குவியலையே கண்டேன். மேலும் நபி(ஸல்)அவர்களின் முகம் பொன்னைப் போல் பிரகாசிப்பதையும் கண்டேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இஸ்லாத்தில் யார் ஒரு அழகிய நடைமுறையை ஏற்படுத்துகிறாரோ அவருக்கு அதற்கான கூலியும், அவருக்குப் பிறகு யாரெல்லாம் அதை மேற்கொள் கின்றாரோ அவர்களுடைய கூலியும் கிடைக்கும். அவர்களது கூலியில் எதுவும் (அவர்களுக்குக்) குறைக்கப்பட மாட்டாது. யார் இஸ்லாத்தில் தீய நடைமுறையை ஏற்படுத்துகிறாரோ அவருக்கு அதற்கான பாவமும், அவருக்குப் பின் யாரெல்லாம் அதை மேற்கொள்கிறாரோ அவர்களது பாவமும் கிடைக்கும். அவர்களது பாவத்தில் எதுவும் குறைக்கப்பட மாட்டாது.”

அறிவிப்பவர்: ஜரீர்(ரலி), நூல்: முஸ்லிம்(1017)

**பயன்கள்:**

1. ஏதேனும் ஒரு நலனுக்காக தர்மத்தை வெளிப்படையாகச் செய்வது மார்க்கமாக்கப்பட்டுள்ளது.

2. தர்மத்தை வெளிப்படையாகச் செய்வது ஒன்றும் முகஸ்துதியல்ல. நன்மைக்கு முன்னுதாரணமாகவே அமையும்.

## 72. யாசித்தலும் யாசிக்காமல் பெறுதலும்

“மக்களிடம் யாசித்துக் கொண்டேயிருக்கும் மனிதர் கியாமத் நாளில் சதைப்பற்றில்லாத முகத்துடன் வருவார்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி), புகாரி(1474)

நபி(ஸல்)அவர்களிடம் நான் கேட்டேன். எனக்கு வழங்கினார்கள். பின்பு கேட்டேன். எனக்கு வழங்கினார்கள். மீண்டும் கேட்டேன். மீண்டும் வழங்கினார்கள். பின்பு “ஹகீமே! நிச்சயமாக இச்செல்வம் பசுமையும் இனிமையும் நிறைந்ததாகும். யார் இதனை (யாசிக்காமல்) பெருந்தன்மையான உள்ளத்துடன் பெற்றுக்கொள்கிறாரோ அதில் அவருக்கு பரக்கத்துச் செய்யப்படும். யார் பேராசை கொண்ட உள்ளத்துடன் அதைப் பெறுகிறாரோ அதில் அவருக்குப் பரக்கத் செய்யப்பட மாட்டாது. இவர் சாப்பிட்டும் வயிறு நிறம்பாதவர் போலாவார். மேலே உள்ள (கொடுக்கும்) கை கீழே உள்ள (வாங்கும்)கையை விடச் சிறந்ததாகும்.”

அறிவிப்பவர்: ஹகீம் பின் ஹிஸாம்(ரலி), புகாரி(1472)

நபி(ஸல்)அவர்கள் எனக்கு அன்பளிப்பு வழங்குவார்கள். அப்போது, “என்னை விடவும் மிகத் தேவையுடையோருக்கு இதை வழங்குங்கள்” என்று நான் கூறுவேன். அப்போது நபி(ஸல்)அவர்கள், “இதை நீ வாங்கிக் கொள். நீ பேராசை கொள்ளாமலும் யாசிக்காமலும் இதுபோன்ற பொருளிலிருந்து

ஏதேனும் உமக்குக் கிடைத்தால் அதைப் பெற்றுக் கொள். பேராசை கொண்டும் யாசித்துமே பெற வேண்டியதாக இருந்தால் உம் மனதை அதில் அலைபாய விடாதே!" எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: உமர்(ரலி), புகாரி(1473)

**பயன்கள்:**

1. மிக அவசிய தேவைக்காக அல்லாமல் மக்களிடம் யாசிப்பது கூடாது.
2. ஒருவருக்கு யாசிக்காமலேயே பொருள் வழங்கப் பட்டால் அதை அவர் வாங்குவது கூடும்.

## 73. விலக்கப்பட்ட சில வார்த்தைகள்

"காலத்தை ஏசாதீர்கள். ஏனெனில் அல்லாஹ்வே காலமாக இருக்கின்றான்" (நபிமொழி)

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(2246)

"அல்லாஹ் நாடியதும் இன்னார் நாடியதும் நடந்தது" என்று கூறாதீர்கள். "அல்லாஹ்வின் நாட்டத்திற்குப் பின் இன்னார் நாடியது நடந்தது" என்று கூறுங்கள் என்று நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஹுதை.ஃ.பா(ரலி),

நூல்: அபூதாவூத்(4980),அஹ்மத்(22754)

"அல்லாஹ் நாடியதும் முஹம்மது நாடியதும் நடந்தது" என்று கூறாதீர்கள் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். (சுருக்கம்) அறிவிப்பவர்: துபை.ஃ.பல் பின் ஸக்பரா(ரலி),

நூல்: அஹ்மத்(20171)

**பயன்கள்:**

1. காலத்தைத் திட்டுவது விலக்கப்பட்டுள்ளது.

2. அல்லாஹ் நாடியதும் இன்னார் நாடியதும் நடந்தது என்று கூறக் கூடாது.மாறாக அல்லாஹ்வின் நாட்டத்திற்குப் பிறகு இன்னார் நாடியது நடந்தது என்று கூறலாம்.

## 74. மரணத்தை நினைவு கூருதலும் அதற்கு ஆசைப்படாமல் இருத்தலும்

“இன்பங்களை முறிக்கக்கூடிய மரணத்தை அதிகமதிகம் நிளைவு கூருங்கள்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: திர்மிதி(2307)

“தனக்கு ஏற்பட்ட துன்பத்திற்காக உங்களில் யாரும் மரணத்தை விரும்ப வேண்டாம். அவ்வாறு விரும்பித்தான் ஆக வேண்டுமென்றால், இறைவா! நான் வாழ்வது சிறந்ததாக இருக்கும் காலம் வரை என்னை வாழவை! நான் மரணிப்பது சிறந்ததாக இருந்தால் என்னை மரணிக்கச் செய்! என்று கூறட்டும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), புகாரி(5671),முஸ்லிம்(2680)

“உங்களில் யாரும் மரணத்தை விரும்ப வேண்டாம். அது வருவதற்கு முன் அதை அழைக்கவும் வேண்டாம். ஏனெனில் உங்களில் ஒருவர் இறந்துவிட்டால் அவரது செயல்கள் யாவும் அவரை விட்டும் துண்டிக்கப்பட்டு விடுகின்றன. உண்மையில் ஒரு மு.்.மினுக்கு அவனுடைய வாழ்நாள் நன்மையையே அதிகப்படுத்தும்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), முஸ்லிம்(2682)

**பயன்கள்:**

1. மரணத்தை அதிகம் நினைவுகூர்வது விரும்பத்தக்கது.

2. துன்பங்கள் நேரும்போது மரணிப்பதற்கு ஆசைப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

## 75. மரண வேளையில்

"உங்களில் மரணத்தை நெருங்கியவருக்கு லாஇலாஹ இல்லல்லாஹ்வை எடுத்துச் சொல்லுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: முஸ்லிம்(917)

யாருடைய கடைசி வார்த்தை "லாஇலாஹ இல்லல்லாஹ்" வாக அமைந்துவிடுகிறதோ அவர் சொர்க்கத்தில் நுழைவார் என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: மஆத் பின் ஜபல்(ரலி) நூல்: அபூதாவூத்(3116)

"அல்லாஹ்வைப் பற்றி நல்லெண்ணம் கொள்ளாமல் உங்களில் யாரும் மரணிக்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் தாம் மரணமடைவதற்கு மூன்று தினங்களுக்கு முன்னர் கூறக் கேட்டேன் என ஜாபிர்(ரலி)அவர்கள் அறிவிக் கின்றார்கள். நூல்: முஸ்லிம்(2877)

**பயன்கள்:**

1. கலிமாவின் சிறப்பு.

2. மரணம் நெருங்கியிருப்பவரிடம் கலிமாவை எடுத்துச் சொல்ல வேண்டும்.

3. அல்லாஹ்வைப் பற்றி நல்லெண்ணம் கொள்ள வேண்டு மென்று ஏவப்பட்டுள்ளது.

## 76. செயல்கள் இறுதி நிலையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன

“உங்களில் ஒருவர் தாயின் வயிற்றில் நாற்பது நாட்கள் (விந்துத் துளியாக) வைக்கப்படுகிறார். பின்னர் அது அதே கால அளவுக்கு கருவுற்ற சினை முட்டையாக மாறும். பின்பு அது அதே கால அளவுக்கு சதைத் துண்டாக உருவாகும். பின்பு அல்லாஹ் அந்த மனிதனிடம் நான்கு விஷயங்களுடன் ஒரு வானவரை அனுப்புகிறான். அதன்படி அவனது செயல்கள், அவனது ஆயுட்காலம், அவனது வாழ்க்கை வசதிகள், அவன் நல்லவனா கெட்டவனா ஆகிய விபரங்கள் எழுதப்படுகின்றன. பிறகு உயிர் ஊதப்படுகிறது.

உங்களில் ஒருவர் தமக்கும் நரகத்திற்கும் இடையே ஒரு முழம் மட்டுமே இருக்கின்ற வகையில் நரகவாசியைப் போலவே நடந்து கொள்வார். ஆனால் அவருக்காக எழுதப் பட்டது அவரை முந்திக் கொள்கிறது. எனவே சொர்க்கவாசி களுடைய செயலைச் செய்து அவர் சொர்க்கத்தில் நுழைந்து விடுவார். மேலும் உங்களில் ஒருவர் தனக்கும் சொர்க்கத்திற்கு மிடையே ஒரு முழம் மட்டுமே இருக்கின்ற வகையில் சொர்க்க வாசிகளைப்போலவே நடந்துகொள்வார். ஆனால் அவருக்காக எழுதப்பட்டது அவரை முந்திக் கொள்கிறது. எனவே அவர் நரகவாசிகளுடைய செயலைச் செய்து நரகில் நுழைந்து விடுவார்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத்(ரலி), நூல்: புகாரி(3332),முஸ்லிம்(2643)

“ஒவ்வொரு அடியாரும் எந்த நிலையில் மரணித்தாரோ அதே நிலையிலேயே எழுப்பப்படுவார்.”(நபிமொழி)

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி), நூல்: முஸ்லிம்(2878)

**பயன்கள்:**

1. தீய முடிவை அஞ்சுவதும், தீய முடிவென எண்ணுவதற்கு இடமளிக்கக்கூடியவற்றை விட்டும் தூரமாகுவதும் கடமை.

2. செயல்கள் அனைத்தும் இறுதி நிலையைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன.

## 77. ஜனாஸா தொழுகை (1)

“ஒரு முஸ்லிம் மரணமடைந்து அவரது ஜனாஸாவில் அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்காத நாற்பது பேர் தொழுதால் அவருடைய விஷயத்தில் இவர்களின் பரிந்து ரையை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: முஸ்லிம்(948)

“ஒரு ஜனாஸாவில் முஸ்லிம்களில் 100 பேர் அடங்கிய ஒரு கூட்டத்தினர் தொழுவார்களானால் அவர்கள் அனைவரும் அவருக்காக பரிந்துரை செய்தால் அவர்களின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும்” என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரழ), நூல்: முஸ்லிம்(947)

பிரசவிக்கும்போது மரணமடைந்த ஒரு பெண்ணுக்காக நான் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் தொழுதேன். அவர்கள் அந்த ஜனாஸாவின் நடுவில் நின்று தொழுதார்கள்.

அறிவிப்பவர்: ஸமுரா பின் ஜுன்துப்(ரலி),
நூல்: புகாரி(1331),முஸ்லிம்(964)

நான் அனஸ் (ரலி) அவர்களுடன் ஒரு ஆணுடைய ஜனாஸாவில் தொழுதேன். அவர்கள் மய்யித்தின் தலைக்கு நேராக நின்றார்கள். பிறகு குறைஷி குலத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஜனாஸாவைக் கொண்டுவந்து “அபூஹம்ஸாவே! (அனஸ்) இவருக்கும் தொழவையுங்கள்” என்று கூறினார்கள். அப்போது சந்தூக்கின் நடுப்பகுதிக்கு நேராக நின்றார்கள்.

அப்பொழுது அவர்களிடம், “பெண் ஜனாஸாவுக்கும் ஆண் ஜனாஸாவுக்கும் இவ்வாறு நீங்கள் நின்ற இடத்தில் தான் நபி(ஸல்)அவர்கள் நின்றதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?” எனக் கேட்கப்பட்டது.அதற்கவர்கள் “ஆம்!” என்றார்கள்.

அறிவிப்பவர்: அபூகாலிப்(ரஹ்), நூல்: திர்மிதி(1034)

ஸைத் பின் அர்கம்(ரலி)எங்கள் ஜனாஸாவுக்கு நான்கு தக்பீர்கள் கூறுவார்கள். ஒரு முறை ஒரு ஜனாஸாவுக்கு ஐந்து தக்பீர்கள் கூறினார்கள். இது பற்றி நான் அவர்களிடம் கேட்டதற்கு “நபி(ஸல்)அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்” என்று விடையளித்தார்கள்.

அறிவிப்பவர்: அப்துர்ரஹ்மான் பின் அபீ லைலா(ரஹ்)
நூல்: முஸ்லிம்(957)

**பயன்கள்:**

1. ஜனாஸாத் தொழுகையில் இமாம் ஆண் மய்யிதின் தலைக் கருகிலும் பெண் மய்யிதின் மத்தியிலும் நிற்க வேண்டும்.

2. இமாம் நான்கு தக்பீர்களைக் கூறவேண்டும்.

3. ஜனாஸாத் தொழுகையில் ஐந்து தக்பீர்கள் கூறுவதும் கூடும்.

3. ஜனாஸாத் தொழுகையில் அதிகம் பேர்களை கலந்து கொள்ளச் செய்வது விரும்பத்தக்கதாகும்.

## 78. ஜனாஸா தொழுகை (2)

**ஸ□ரத்துல் பாத்திஹா ஓதுதல்**

நான் ஒருஜனாஸாத் தொழுகையில் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுதேன். அவர்கள்

ஸூரத்துல் ஃபாத்திஹாவை (சப்தமாக) ஓதினார்கள். “இது சுன்னத் என நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான் இவ்வாறு செய்தேன்” எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: தல்ஹா(ரஹ்), நூல்: புகாரி(1335)

**ஜனாஸாத் தொழுகையில் துஆ செய்வது**

“நபி(ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்குத் தொழுகை நடத்தினார்கள். அதில் அவர்கள் ஓதிய துஆவை நான் மனனம் செய்து கொண்டேன்.

اَللَّهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ وَأَكْرِمْ نُزُلَهُ وَوَسِّعْ مُدْخَلَهُ وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرْدِ وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا نَقَّيْتَ الثَّوْبَ الْأَبْيَضَ مِنَ الدَّنَسِ وَأَبْدِلْهُ دَارًا خَيْرًا مِنْ دَارِهِ وَأَهْلاً خَيْرًا مِنْ أَهْلِهِ وَزَوْجًا خَيْرًا مِنْ زَوْجِهِ وَأَدْخِلْهُ الْجَنَّةَ وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ أَوْ مِنْ عَذَابِ النَّارِ

அல்லாஹும்ம ம.்.பிர்லஹு வர்ஹம்ஹு வஆ.்.பிஹி வ.்.பு அன்ஹு வஅக்ரிம் நுஸ்லஹு வவஸ்ஸி.். முத்கலஹு வக்ஸில்ஹு பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரத், வநக்கிஹி மினல் கதாயா கமா நக்கைதஸ் ஸவ்பல் அப்யழ மினத் தனஸ், வஅப்தில்ஹு தாரன் கைரன் மின் தாரிஹி வஅஹ்லன் கைரன் மின் அஹ்லிஹி வஸவ்ஜன் கைரன் மின் ஸவ்ஜிஹி வஅத்கில் ஹுல் ஜன்னத்த வஅயித்ஹு மின் அதாபில் கப்ரி அவ் மின் அதாபின்னார் என்று அவர்கள் கூறினார்கள். அந்த மய்யித் தாக நான் இருந்திருக்கக் கூடாதா என நான் ஆசைப் பட்டேன்” என்று அவ்.்.ப் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: முஸ்லிம்(963)

(பொருள்: இறைவா! இவரை மன்னிப்பாயாக! இவருக்கருள் புரிவாயாக! இவருக்கு சுகம் அளிப்பாயாக! இவரது தவறு களை அலட்சிப்படுத்துவாயாக! இவரது தங்குமிடத்தை மதிப்பு மிக்கதாக ஆக்குவாயாக! மேலும் இவர் புகும் இடத்தை (மண்ணறையை) விசாலமானதாக ஆக்குவாயாக!வெண்ணிற ஆடையை அழுக்குகளிலிருந்து நீ தூய்மைப்படுத்துவதுபோல இவரை இவரது தவறுகளிலிருந்து தண்ணீர், ஆலங்கட்டி, பனிக்கட்டியால் தூய்மையாக்குவாயாக! இவரது இல்லத்தை விட சிறந்த இல்லத்தை, இவரது குடும்பத்தை விட சிறந்த குடும்பத்தை, இவரது துணையை விட சிறந்த துணையை (மறுமையில்) இவருக்கு ஏற்படுத்துவாயாக! மேலும் இவரை சுவனத்தில் நுழையச் செய்து கப்ருடைய வேதனை, நரக வேதனையை விட்டும் இவரைக் காப்பாற்றுவாயாக!)

**பயன்கள்:**

1. ஜனாஸாத் தொழுகையில் சூரத்துல் பாத்திஹா ஓதுவது நபிவழியாகும்.
2. நபி(ஸல்)அவர்கள் மீது ஸலவாத்து சொன்ன பிறகு மய்யித் துக்காக துஆச் செய்வதும் நபிவழியே.

## 79. ஜனாஸாவில் கலந்து கொள்ளுதல்

“யார் ஒரு ஜனாஸாவில் அதற்குத் தொழுகை நடதத் தப்படும் வரை கலந்துகொள்கிறாரோ அவருக்கு ஒரு கீராத் அளவு நன்மை உண்டு. அது அடக்கப்படும் வரை யார் கலந்து கொள்கிறாரோ அவருக்கு இரு கீராத் அளவு நன்மை உண்டு” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். “இரு கீராத் என்றால் என்ன?” என்று கேட்கப்பட்டபோது நபி(ஸல்)அவர்கள்

“மிகப் பெரிய இரு மலைகளைப் போன்றது” என்று பதில் அளித்தார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)
நூல்: புகாரி(1325),முஸ்லிம்,(945)

நபி(ஸல்)அவர்கள் எங்களுக்கு ஏழு விஷயங்களை கட்டளையிட்டுள்ளார்கள். அவை நோயாளியை விசாரித்தல், ஜனாஸாவைப் பின் தொடரல், தும்மியவருக்கு மறுமொழி கூறல், பலவீனருக்கு உதவுதல், பாதிக்கப்பட்டவருக்கு உதவி செய்தல், ஸலாமைப் பரப்புதல், சத்தியம் செய்தவருக்கு அவரது சத்தியத்தை நிறைவேற்ற உதவுதல் ஆகியவை யாகும். அறிவிப்பவர்: பர்ரா பின் ஆஸிப்(ரலி)
நூல்: புகாரி(6235),முஸ்லிம்(2066)

“நீங்கள் ஜனாஸாவைக் கண்டால் எழுங்கள்! அதை யாரேனும் பின்தொடர்ந்தால் கீழே வைக்கப்படும் வரை உட்கார வேண்டாம்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி), நூல்: புகாரி(1310)

“பெண்களாகிய நாங்கள் ஜனாஸாவைப் பின்துயர்ந்து செல்லத் தடுக்கப்பட்டோம். ஆயினும் அது (அந்தத் தடை) எங்களுக்கு வலியுறுத்தப்படவில்லை” என உம்மு அதிய்யா (ரலி) அறிவிக்கிறார்கள். நூல்: புகாரி(1278)

**பயன்கள்:**

1. ஜனாஸாவைப் பின் தொடர்வது சுன்னத்தாகும்.
2. இதற்கு மகத்தான கூலியுண்டு.
3. ஜனாஸாவைப் பின்தொடர்ந்தவர் அது கீழே வைக்கப்படும் வரை உட்காராமலிருப்பது சுன்னத்தாகும்.
4. ஜனாஸாவைப் பின்தொடர்வது பெண்களுக்கு தடுக்கப் பட்டதாகும்.

## 80. ஜனாஸா தொழுகை (3)

பள்ளிவாசலைக் கூட்டிக் கொண்டிருந்த ஒரு கருப்பு நிறப் பெண்ணோ அல்லது ஆணோ இறந்துவிட்டபோது அவரது இறப்புச் செய்தி நபி(ஸல்) அவர்களுக்குத் தெரிவிக்கப்பட வில்லை. ஒரு நாள் அவரின் நினைவு வந்து, “அவர் என்ன ஆனார்?” என்று கேட்டர்கள். அதற்குத் தோழர்கள், “அவர் இறந்துவிட்டார்” எனக் கூறினர். “எனக்கு ஏன் நீங்கள் தெரியப் படுத்தவில்லை? அவருடைய கப்ரை எனக்குக் காட்டுங்கள்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். பிறகு அவருடைய கப்ருக்கு வந்து அவருக்காகத் தொழுவித்தார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(1337)

நஜ்ஜாஷி மன்னர் இறந்த செய்தியை அவர் இறந்த நாளன்றே நபி(ஸல்)அவர்கள் (தோழர்களுக்குத்) தெரிவித் தார்கள். அவர்களை தொழுமிடத்திற்கு அழைத்துச் சென்று அணிவகுத்து நிற்கவைத்து நான்கு தக்பீர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(1333)

**பயன்கள்:**

1. கப்ரில் ஜனாஸா தொழுகை நடத்துவது மார்க்கம் அனுமதித்த ஒன்றாகும்.
2. காயிப் ஜனாஸா தொழுவதும் மார்க்கத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## 81. ஜனாஸாவின் சில சட்டங்கள்

**மய்யித்தை முத்தமிடுவது கூடும்**

நபி(ஸல்) இறந்த பிறகு அவர்களை, அபூபக்கர்(ரலி) முத்த மிட்டார்கள். (சுருக்கம்) அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), புகாரி(1242)

**இறந்தவர்களைத் திட்டுவது தடுக்கப்பட்டுள்ளது**

“இறந்தவர்களைத் திட்டாதீர். ஏனெனில் அவர்கள் செய்ததை அவர்கள் அடைந்துவிட்டனர்” என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரி(6516)

**ஜனாஸாவை விரைவாகக் கொண்டு செல்லுதல்**

“ஜனாஸாவை விரைவாகக் கொண்டு செல்லுங்கள் ஏனெனில் அது நல்லதாக இருந்தால் அந்த நன்மையின் பால் (விரைவாக) கொண்டு சென்றவர்களாவீர். அது அல்லதாக இருந்தால் அத்தீமையை உங்கள் தோள்களிலிருந்து (விரைவாக)இறக்கியவர்களாகிறீர்கள் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)

நூல்: புகாரி(1315),முஸ்லிம்(944)

“மு.ஃ.மினுடைய கடன் அடைக்கப்படும் வரை அவரது ஆன்மா தொங்கு நிலையில் வைக்கப்பட்டிருக்கும்” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) நூல்: திர்மிதி(1079)

லஹ்து (எனும் முறையில் குழி வெட்டுவது) நமக்குரிய தாகும். ஷிக் (எனும் முறையில் குழி வெட்டுவது) மற்றவர் களுக்குரியதாகும் என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி) நூல்: திர்மிதி(1045)

**குறிப்பு:-** ஒரு குழிவெட்டி அந்தக் குழியின் கிப்லாவை நோக்கிய ஓரத்தில் மைய்யித்தை வைக்கும் அளவு ஒரு சிறிய உட்குழி வெட்டுவது லஹ்து எனப்படும். அந்த உட்குழியை

ஓரத்தில் வெட்டாமல் பெரிய குழியின் நடுப்பகுதியில் வெட்டுவது ஷிக் எனப்படும்.

**பயன்கள்:**

1. மய்யித்தை முத்தமிடுதல் கூடும்.
2. இறந்தவர்களைத் திட்டுவது தடுக்கப்பட்டுள்ளது.
3. ஜனாஸாவை விரைவாக கொண்டு செல்லும்படி ஏவப்பட்டுள்ளது.
4. மய்யித்திற்குரிய கடனை விரைவாக நிறைவேற்றுவது கடமையாகும்.
5. கப்ரில் லஹ்த் விரும்பத்தக்கதாகும்.

## 82. மய்யித்தை அடக்கம் செய்தல்

“சூரியன் உதிக்கத் துவங்கியதிலிருந்து அது உயரும் வரையிலும் சூரியன் நடு உச்சிக்கு வந்ததிலிருந்து அது சாயும் வரையிலும் சூரியன் மறையத் துவங்கி அது மறையும் வரையிலும் ஆகிய இம்மூன்று நேரங்களிலும் தொழுவதற்கும் எங்களில் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கும் நபி(ஸல்) அவர்கள் எங்களைத் தடைசெய்துள்ளனர்.”

அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர்(ரலி), முஸ்லிம்(831)

நபி(ஸல்)அவர்கள் மய்யித்தை கப்ரில் வைக்கும்போ بِسْمِ اللهِ وَبِاللهِ وَعَلَى مِلَّةِ رَسُوْلِ اللهِ பிஸ்மில்லாஹி வபில்லாஹி வஅலா மில்லதி ரசூலில்லாஹ் என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி) நூல்: திர்மிதி(1046)

(பொருள்: அல்லாஹ்வின் திருப்பெயராலும் அல்லாஹ்வின் உதவியாலும் அல்லாஹ்வுடைய தூதரின் மார்க்கத்தின்படி (உம்மை மண்ணறையில் வைக்கிறேன்)

நாங்கள் நபி(ஸல்)அவர்களின் மகளுடைய ஜனாஸாவில் கலந்து கொண்டோம். நபி(ஸல்)அவர்கள் கப்ரின் அருகில் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் இரு கண்களும் கண்ணீர் சிந்துவதை நான் கண்டேன். "நேற்றிரவு இல்லறத்தில் ஈடுபடாத யாரேனும் உங்களில் உண்டா?" எனக் கேட்டார்கள்.அப்போது அபூதல்ஹா(ரலி) "நானிருக்கிறேன்" எனக் கூறினார். உடனே "அவளுடைய கப்ரில் நீ இறங்கு! என (அவரிடம்) நபி(ஸல்) கூறினார்கள். அவர் அவளுடைய கப்ரில் இறங்கினார். பிறகு நாங்கள் அவளை அடக்கம் செய்தோம்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரி(1342)

**பயன்கள்:**

1. சூரியன் உதயமாகி அது உயரும் வரையிலும், சூரியன் நடு உச்சிக்கு வந்து சாயும் வரையிலும் மறைவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பும் மய்யித்தை அடக்கம் செய்வது தடுக்கப் பட்டுள்ளது.

2. மய்யித்தை கப்ரில் வைப்பவர் "பிஸ்மில்லாஹி வபில் லாஹி வஅலா மில்லதி ரசூலில்லாஹ்" என்று கூறுவது சுன்னத்.

3. ஒரு பெண்ணுடைய ஜனாஸாவை அவளை மணமுடிக்க அனுமதிக்கப்பட்டோரும் அடக்கம் செய்யலாம்.

## 83. கப்ரை சமப்படுத்துதல்

"நபி(ஸல்)அவர்கள் எப்பணிக்காக என்னை அனுப்பி வைத் தார்களோ அப்பணிக்காக உன்னை நான் அனுப்பி வைக் கட்டுமா? எந்தச் சிலையையும் அழிக்காமல் விட்டுவிடாதே! மேலும் தரைக்கு மேல் உயர்த்தப்பட்ட எந்தக் கப்ரையும் தரைமட்டமாக்காமல் விட்டுவிடாதே" என்று அலி(ரலி)அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபுல்ஹய்யாஜ்(ரலி), நூல்: முஸ்லிம்(969)

“கப்ருகளை சமப்படுத்துமாறு நபி(ஸல்)கட்டளையிட்டதை நான் செவியுற்றிருக்கிறேன்” என்று புலாலா பின் உபைத் (ரலி) கூறியுள்ளார்கள். நூல்: முஸ்லிம்(968)

“கப்ருகள் பூசப்படுவதையும் அதன் மீது அமர்வதையும் கட்டடிம் எழுப்புவதையும் நபி(ஸல்)தடை செய்துள்ளனர்.

அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி) நூல்: முஸ்லிம்(970)

“கப்ரின் மீது உட்காராதீர்கள். அதை நோக்கித் தொழாதீர்கள்” என்றும் நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூமர்ஸத்(ரலி),முஸ்லிம்(972)

**பயன்கள்:**

1. கப்ருகளைப் பூசுவதும் அவற்றை உயர்த்துவதும் அவற்றின் மீது கட்டடிம் எழுப்புவதும் ஹராமாகும்.
2. கப்ரின் மீது உட்காருவது தடைசெய்யப்பட்டுள்ளது.
3. கப்ரின் அருகில் தொழுவது ஹராமாகும்.

## 84. கப்ரில் நடப்பதென்ன?

“ஒரு அடியான் கப்ரில் வைக்கப்பட்டு அடக்கம் செய்தவர்கள் திரும்பிச் செல்லும்போது அவர்களின் செருப்போசையைக் கேட்பான். அப்போது இரண்டு மலக்குகள் வந்து அவனை உட்கார வைத்து அவனிடம் “இந்த முஹம்மதைப் பற்றி என்ன கூறிக் கொண்டிருந்தாய்?” என்று கேட்பார்கள். அதற்கவன், “நிச்சயமாக அவர் அல்லாஹ்வின் அடியாரும் அவன் தூதரும் ஆவார் என நான் சாட்சி கூறுகிறேன்” என்று கூறுவான். உடனே அவனிடம், “நரகத்தில் உன் இருப்பிடத்தைப் பார். இதற்குப் பகரமாக சொர்க்கத்தில் ஒரு இடத்தை அல்லாஹ் உனக்கு ஏற்படுத்தியுள்ளான்” என்று கூறப்படும்.

“அவ்விரண்டையுமே அவன் பார்ப்பான்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவன் காபிராக- முனா∴பிக்காக இருந்தால் (அதே கேள்விக்கு விடையளிக்கும் போது) “மக்கள் கூறியதையே நானும் கூறிக்கொண்டிருந்தேன். (வேறெதுவும்) எனக்கு தெரியாது” என்று கூறுவான். “நீ எதையும் படிக்கவுமில்லை தெரிந்து கொள்ளவுமில்லை” என அவனிடம் கூறப்படும். பிறகு அவனுடைய இரு காதுகளுக்கிடையில் (அதாவது) தலையில் இரும்புச் சம்மட்டியால் ஓங்கி ஒரு அடி அடிக்கப்படும். அப்போது அவன் பயங்கரமாக அலறுவான். அந்த சப்தத்தை மனிதன், ஜின்னைத் தவிர அவனை அடுத்திருக்கக்கூடிய அனைத்தும் கேட்கும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரி(1338)

“உங்களில் ஒருவர் இறந்துவிட்டால் காலையிலும் மாலை யிலும் அவரின் இருப்பிடம் அவருக்கு எடுத்துக் காட்டப்படும். அவர் சொர்க்கவாசியாக இருந்தால் அவ்வாறே காட்டப்படு வார். நரகவாசியாக இருந்தால் அவ்வாறே காட்டப்படுவார். “கியாமத் நாளில் அல்லாஹ் உன்னை எழுப்பும் வரை உன் இருப்பிடம் இதுதான்” என அவரிடம் கூறப்படும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ரு(ரலி),
நூல்: புகாரி(1379),முஸ்லிம்(2866)

**பயன்கள்:**

1. கப்ரில் மய்யித்திடம் இரு மலக்குகள் கேள்வி கேட்பார்கள் என்பது நிரூபணமாகியுள்ளது.
2. கப்ரில் வேதனையும் சுகமும் உண்டு என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

3. மரணித்தவர் கியாமத் நாளுக்கு முன்பாகவே சொர்க் கத்திலோ அல்லது நரகத்திலோ உள்ள தனது இருப்பிடத் தைக் காண்பார்.

## 85. பொறுமை

பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக. தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும்போது நாங்கள் அல்லாஹ் வுக்கே உரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்" என்று அவர்கள் கூறுவார்கள். அவர்களுக்கே தமது இறை வனின் அருள்களும் அன்பும் உள்ளன. அவர்களே நேர்வழி பெற்றோர். (2:156,157)

"பொறுமை என்பது துன்பம் ஏற்பட்ட உடனேயே மேற் கொள்வதாகும்" என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரி(1302)

"எந்த முஸ்லிமும் தனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும் போது அவனுக்கு அல்லாஹ் ஏவியதை அதாவது

إِنَّا لله وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ أَللَّهم أَجِرْنِي فِي مُصِيبَتِي وَأَخْلِفْ لِي خَيْرًا مِنْهَا

"இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அல்லா ஹும்ம அஜிர்னீ ஃபீ முஸீபதீ வஅக்லிஃப்லீ கைரன் மின்ஹா" என்று கூறினால் அதைவிடச் சிறந்ததை அல்லாஹ் அவனுக்குக் கொடுப்பான்" என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: உம்முஸலமா(ரலி), நூல்: முஸ்லிம்(918)

(பொருள்: நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள்.அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்கள். இறைவா! எனது துன்பத்தில் எனக்கு கூலி வழங்குவாயாக! மேலும் இதற்குப் பகரமாக இதை விடச் சிறந்ததை வழங்குவாயாக!)

“ஒரு மு∴மினுடைய நிலை என்னே ஆச்சரியமானது! அவனுடைய எல்லாக் காரியங்களும் அவனுக்கு நன்மை பயப்பதாகவே உள்ளன. இப்படி மு∴மினைத் தவிர வேறெ வனுக்கும் கிடைக்காது. அவனுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டு அதற்காக அவன் பொறுத்துக் கொண்டால் அதுவும் அவனுக்கு நன்மை தான். அவனுக்கு நன்மை ஏற்பட்டு அதற்காக நன்றி செலுத்தினால் அதுவும் அவனுக்கு நன்மை தான்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: சுஹைப்(ரலி) நூல்: முஸ்லிம்(2999)

**பயன்கள்:**

1. துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதற்கு சிறப்புண்டு.
2. துன்பம் ஏற்பட்ட உடனேயே மேற்கொள்கின்ற பொறுமை தான் புகழுக்குரியது.
3. கஷ்ட நேரங்களில் பொறுமையை மேற்கொள்வது மு∴மின்களின் பண்பாகும்.
4. துன்பம் ஏற்படும்போது ஹதீஸில் வந்துள்ள திக்ரைக் கூறுவது சிறந்தது.

## 86. மரண சாசனம்

“மரண சாசனம் செய்ய ஏதேனும் ஒரு பொருளைப் பெற்றிருக்கும் எந்த ஒரு முஸ்லிமுக்கும் அவர் தனது மரண சாசனத்தை எழுதித் தன்னிடம் வைத்திருக்காமல் இரண்டு இரவுகள் கூட கழிப்பதற்கு அனுமதி இல்லை” என நபி(ஸல்) அவர்கள் கூறிளார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர்(ரலி)

நூல்: புகாரி(2738),முஸ்லிம்(1627)

“அல்லாஹ்வின் தூதரே! நான் வசதியுடையவராக இருக் கின்றேன். என் ஒரே மகளைத் தவிர எனக்கு வேறு வாரிசு இல்லை. என் சொத்தில் மூன்றில் இரண்டு பங்கை நான் தர்மம்

செய்யலாமா?" என்று கேட்டேன். அதற்கு நபி(ஸல்)அவர்கள் "கூடாது" என்றார்கள். "பாதியைத் தர்மம் செய்யலாமா?" என்று கேட்டேன். அதற்கும் "கூடாது" என்றார்கள். மீண்டும் நான் "மூன்றில் ஒரு பங்கைத் தர்மம் செய்யலாமா?" என்று கேட்டேன். அதற்கவர்கள், "மூன்றில் ஒரு பங்கைத் தர்மம் செய்து கொள். அது கூட அதிகம்தான். நீ உனது வாரிசை மக்களிடம் கையேந்துகின்ற ஏழையாக விட்டுச் செல்வதை விட தன்னிறைவு பெற்றவர்களாக விட்டுச்செல்வதே சிறந்தது" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: ஸஃத் பின் அபீவக்காஸ் (ரலி) நூல்: புகாரி(2742),முஸ்லிம்(1628)

"அல்லாஹ் உரிமையுள்ள ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளைக் கூறிவிட்டான். எனவே வாரிசுகளுக்கு மரண சாசனம் செய்வது கூடாது" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஉமாமா(ரலி),

நூல்: அபூதாவூத்(2870), திர்மிதி(2120,2121)

ஒரு மனிதர் நபி(ஸல்)அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே! எனது தாயார் திடீரென இறந்து விட்டார். அவர் வஸிய்யத் ஏதும் செய்யவில்லை. அவர் (மரணிக்கும் முன்) பேச முடிந்திருந்தால் தர்மம் செய்யச் சொல்லியிருப்பார் என்றே நான் கருதுகிறேன். அவர் சார்பாக நான் தர்மம் செய்தால் அவருக்கு கூலி கிடைக்குமா?" என்று கேட்டார். அதற்கவர்கள், "ஆம்!" என்றனர். அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி),

நூல்: புகாரி(2760),முஸ்லிம்(1004)

**பயன்கள்:**

1. மரண சாசனம் செய்யப்பட வேண்டிய பொருள் யாரிடம் உள்ளதோ அவர் மரண சாசனம் எழுதி வைக்க வேண்டும் என்று ஏவப்பட்டுள்ளது. அதில் அவர் வரம்பு மீறக் கூடாது.

2. ஒருவர் தனது சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை, தான் மரணிப்பதற்கு முன் வஸிய்யத் செய்வது ஆகுமானது.

3. குறிப்பிட்ட சில வாரிசுகளுக்கு அவர்களுக்கு உரிய உரிமையை விடக் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று வஸிய்யத் செய்வது தடை செய்யப்பட்டதாகும்.

4. இறந்துபோனவர் வஸிய்யத் செய்யா விட்டாலும் அவர் சார்பாக தர்மம் செய்வது கூடும்.

## 87. சில வாரிசுரிமைச் சட்டங்கள்

“நிர்ணயிக்கப்பட்ட பங்குகளை உரியவர்களிடம் சேர்த்து விடுங்கள்! எஞ்சியவை இறந்தவருக்கு மிக நெருங்கிய உறவுடைய ஆணுக்குரியதாகும்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி),

நூல்: புகாரி(6732), முஸ்லிம்(1615)

“அல்லாஹ் உரிமையுள்ள ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளைக் கூறிவிட்டான். எனவே வாரிசுகளுக்கு மரண சாசனம் செய்வது கூடாது” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஉமாமா(ரலி)

நூல்: அபூதாவூத்(2870), திர்மிதி(2120,2121)

“ஒரு முஸ்லிம் கா∴பிருக்கோ, ஒரு கா∴பிர் முஸ்லிமுக்கோ வாரிசாகமாட்டான்” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: உஸாமா பின்த் ஸைத்(ரலி)

நூல்: புகாரி(6764), முஸ்லிம்(1614)

**பயன்கள்:**

1. வாரிசுகளுக்குப் பங்குகளை பிரித்துக் கொடுப்பது மார்க்கமாகும். அல்லாஹ்வே இதை மார்க்கமாக்கியுள்ளான்.

2. வாரிசுகளுக்கு வஸிய்யத் செய்வது கூடாது.

3. நிர்ணயிக்கப்பட்ட பங்குகளுக்குப் பிறகு ஏதேனும் எஞ்சியிருக்குமானால் அது இறந்தவருக்கு மிக நெருங்கிய உறவுடைய ஆணுக்குரியதாகும்.

4. முஸ்லிம், கா∴பிருக்கு இடையில் வாரிசுரிமை கிடையாது.

## 88. இறந்தவருக்காக அழுதல்

நாங்கள் அபூஸை∴புல் கைனிடம் சென்றோம். அவர் (நபியின் மகன்) இப்ராஹீமுக்கு பால்குடி உறவிலுள்ள தந்தை. நபி(ஸல்)அவர்கள் (தமது மகன்) இப்ராஹீமைத் தூக்கி முத்தி முகர்ந்தார்கள். அதன் பிறகு நாங்கள் மீண்டும் அவரிடம் சென்றோம். இப்ராஹீமுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. நபி(ஸல்)அவர்களின் கண்கள் கண்ணீர் சிந்தலாயின. அப்போது அப்துர் ரஹ்மான் பின் அவ்∴ப்(ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நீங்களே அழுகிறீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு நபி(ஸல்)அவர்கள், "கண்கள் கண்ணீர் சிந்தத்தான் செய்யும். உள்ளமோ துக்கத்தால் பீடித்திருக்கின்றது. நம் இறைவனைத் திருப்திபடுத்துகின்ற சொல்லைத் தவிர வேறு எதையும் நாம் கூற மாட்டோம். இப்ராஹீமே! உன் பிரிவால் நாங்கள் கவலையடைந்துள்ளோம்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரி(1303)

"என் மகன் இறுதிக்கட்டத்தை அடைந்துவிட்டான். தாங்கள் உடனே புறப்பட்டு வாருங்கள்" என நபி (ஸல்) அவர்களுக்கு

அவர்களின் மகள் தூது அனுப்பினார். அதற்கு நபியவர்கள் "அல்லாஹ் எடுத்துக் கொண்டது அவனுக்குரியதாகும். அவன் கொடுத்ததும் அவனுக்குரியதே. ஒவ்வொரு பொருளும் அவனிடம் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுடனும் இருக்கின்றது. எனவே பொறுத்துக்கொள். இது நன்மைக்குத் தான் என்று எண்ணிக்கொள்" என (தம் மகளிடம் கூறுமாறு) கூறி (அவருக்கு) ஸலாமும் கூறி அனுப்பினார்கள்.

பிறகு மீண்டும் நபியின் மகள் நபி(ஸல்)அவர்களுக்கு "தாங்கள் கண்டிப்பாக வரவேண்டும்" என சத்தியம் செய்து தூது அனுப்பினார். உடனே நபி(ஸல்)எழுந்து வந்தார்கள். அவர்களுடன் ஸஃத் பின் உப்பாதா, முஆத் பின் ஜபல், உபையிப்னு கஃப், ஸைத் பின் தாபித்(ரலி) மற்றும் பலரும் வந்தனர்.குழந்தை நபி(ஸல்)அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் குழந்தையைத் தம் மடியில் வைத்தார்கள். அதன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. நபி(ஸல்) அவர்களின் கண்கள் கண்ணீர் வடித்தன.

அப்போது ஸஃத்(ரலி)அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! என்ன இது?" என்று கேட்டார்கள்.அதற்கு நபி(ஸல்)அவர்கள் "இது இரக்கமாகும். இதை அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடியவர்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியிருக்கின்றான். அல்லாஹ் தனது அடியார்களில் இரக்கம் உள்ளவர்களுக்கே இரக்கம் காட்டுகின்றான்" என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உஸாமா பின் ஸைத்(ரலி), நூல்: புகாரி(1284),முஸ்லிம்(923)

**பயன்கள்:**

1. பொறுமை இழந்து, அதிருப்தியை வெளிப்படுத்தாத விதத்தில் அல்லது ஒப்பாரி வைக்காமல் இறந்தவருக்காக அழுவது கூடும்.

2. நபியவர்களின் அன்பு, இரக்கம் ஆகியவற்றை அறிதல்

## 89. குழந்தைகளின் இழப்பைப் பொறுத்துக் கொள்ளுதல்

“ஒரு முஸ்லிமுக்கு பருவ வயதை அடையாத மூன்று குழந்தைகள் இறந்துவிட்டால் அல்லாஹ் தன் அருளால் அவரையும் அக்குழந்தைகளையும் சொர்க்கத்தில் சேர்த்து விடுவான்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: புகாரி(1381)

“முஸ்லிம்களில் எவருக்கேனும் மூன்று குழந்தைகள் இறந்துவிட்டால் “நரகைக் கடந்து செல்லும்போது நல்லவர் களையும் நரக நெருப்பு தீண்டும்” என்ற அடிப்படையில் அந்த நேரம் தவிர அவரை நரக நெருப்பு தீண்டாது” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(6656)

“எந்தப் பெண்ணாயினும் அவளுக்கு மூன்று குழந்தைகள் இறந்து விட்டால் அவள் நரகத்தில் நுழைவதற்கு அவர்கள் திரையாக இருப்பார்கள்” என்று நபி(ஸல்) கூறினார்கள். அப்போது ஒரு பெண், “இரண்டு குழந்தைகள் இறந்து விட்டால்?” என்று கேட்க, “இரண்டு குழந்தைகள் இறந்து விட்டாலும் சரியே!” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸயீத்(ரலி) நூல்: புகாரி(1249)

**பயன்கள்:**

1. குழந்தைகளின் இழப்பை பொறுத்துக் கொள்ளும்போது அதற்காகக் கிடைக்கும் கூலி மகத்தானது.

2. பிள்ளைகளின் இழப்பை பொறுத்துக் கொள்வது சொர்க் கத்தில் நுழைவதற்குக் காரணமாகும்.

3. அல்லாஹ்வின் கருணை மகத்தானது. அவனது அருள் விசாலமானது.

## 90. மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந் நபவியின் சிறப்பு

அங்கே (மஸ்ஜிதுல் ஹராமில்) அநீதியின் மூலம் குற்றம் புரிய நாடுவோருக்கும் துன்புறுத்தும் வேதனையை சுவைக்கச் செய்வோம். (22:25)

“என்னுடைய இந்தப் பள்ளியில் (மஸ்ஜிதுந் நபவியில்) தொழுவது மஸ்ஜிதுல் ஹராம் தவிர மற்றப் பள்ளிகளில் தொழுவதை விட ஆயிரம் மடங்கு சிறந்ததாகும்” என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி)

நூல்: புகாரி(1190), முஸ்லிம்(1394)

“மஸ்ஜிதுல் ஹராம்,எனது இப்பள்ளி, மஸ்ஜிதுல் அக்ஸா (எனும் பைத்துல் முகத்தஸ்) ஆகிய மூன்று பள்ளிகளைத் தவிர வேறு எந்தப் பள்ளிக்கும் பிரயாணம் மேற்கொள்ளப்பட மாட்டாது” என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(1189), முஸ்லிம்(1397)

“என் வீட்டுக்கும் எனது மிம்பருக்கும் இடையில் சொர்க் கத்துச் சோலைகளில் ஒரு சோலையுள்ளது. எனது மிம்பர்

எனது ஹவ்லின் மீதிருக்கிறது” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(1888),முஸ்லிம்(1391)

**பயன்கள்:**

1. மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுந் நபவியில் தொழுவதற்கு சிறப்புண்டு.

2. இம்மூன்று பள்ளிகளைத் தவிர மற்ற பள்ளிகளுக்கு வழிபாட்டை நோக்கமாகக் கொண்டு பயணம் மேற்கொள்வது ஹராமாகும்.

3. நபியவர்களின் அறைக்கும் மிம்பருக்கும் இடையில் உள்ள பகுதிக்குச் சிறப்புண்டு.

## 91. மக்காவுக்குரிய சில சட்டங்கள்

“அல்லாஹ் இந்த நகரத்தைப் புனிதமாக்கியுள்ளான். அங்குள்ள மரங்களை வெட்டுவதோ, அங்குள்ள விலங்கு களை வேட்டையாடுவதோ கூடாது, அங்கு கீழே கிடக்கும் பொருட்களை, அறிவிப்புச் செய்து உரியவரிடம் சேர்க்க விரும்பு பவரைத் தவிர வேறு யாரும் எடுக்கக் கூடாது” என்று நபி(ஸல்)அவர்கள் மக்கா வெற்றியின்போது கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), நூல்: புகாரி(1587)

“ஹரம் எல்லையிலும் ஹரம் அல்லாத இடங்களிலும் தீங்கிழைக்கக்கூடிய ஐந்து பிராணிகளைக் கொல்லலாம். அவை பாம்பு, சாம்பல் நிறக் காகம், எலி, வெறிநாய், பருந்து ஆகியவையாகும்” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), புகாரி(3314),முஸ்லிம்(1198)

**பயன்கள்:**

1. மக்காவின் புனிதம் மகத்தானது.

2. அங்குள்ள மரங்களை வெட்டுவதோ, தரைப் பிராணிகளை வேட்டையாடுவதோ விலக்கப்பட்டதாகும்.

3. அங்கு கீழே கிடக்கும் பொருளை, அறிவிப்புச் செய்து உரியவரிடம் சேர்க்க விரும்புபவரைத் தவிர வேறு யாரும் எடுக்கக் கூடாது.

4. தீங்கு தரக்கூடிய பிராணிகளை அங்கு கொல்வது கூடும். உதாரணம்: காகம், எலி, வெறிநாய், பருந்து போன்றவை.

## 92. மணமுடிக்க நிர்பந்தித்தல்

“விதவையின் அனுமதி பெறாமல் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கலாகாது. கன்னிப் பெண்ணையும் அவளது சம்மதம் பெறாமல் திருமணம் செய்து வைக்கலாகாது” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது “அல்லாஹ்வின் தூதரே! அவளது சம்மதம் எவ்வாறு?” என்று தோழர்கள் கேட்டனர். அதற்கு, “அவள் மௌனமாக இருப்பதே” என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: புகாரி(5136),முஸ்லிம்(1419)

“விதவைப்பெண் தன் பொறுப்பாளரை விட தன் விஷயமாக முடிவு செய்ய அதிக உரிமை பெற்றவள். கன்னிப்பெண்ணிடம் அவள் சம்மந்தமான விஷயத்தில் அனுமதி கேட்க வேண்டும். அவளது மௌனமே சம்மதம்” என்று நபி(ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி), முஸ்லிம்(1421)

“அன்ஸாரி குலத்தைச் சார்ந்த கன்ஸா பின்த் கதாம் என்ற பெண் விதவையாக இருக்கும்போது அவள் தந்தை அவள் சம்மதமில்லாமல் அவளுக்குத் திருமணம் முடித்து வைத்தார். இதை அவள் விரும்பவில்லை. அவள் நபி(ஸல்) அவர்களிடம்

வந்து முறையிட்டபோது அவளது திருமணத்தை அவர்கள் ரத்து செய்தார்கள். அறிவிப்பவர்: கன்ஸா(ரலி), புகாரி(5139)

**பயன்கள்:**

1. ஒரு பெண்ணுடைய திருமண விஷயத்தில் அவளது அபிப்பிராயத்தைப் பெறுவது கடமையாகும்.

2. கன்னிப் பெண்ணின் சம்மதத்திற்கு அவள் மௌனமாக இருத்தலே போதுமானதாகும்.

3. திருமணம் நிறைவேற மணமகளின் சம்மதம் ஷர்த் தாகும்.

## 93. ஒற்றுமை

அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் சேர்ந்து பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், பிரிந்துவிடாதீர்கள். (3:103)

“எனக்குப் பின்னால் குழப்பங்கள் தோன்றும். அப்போது இச்சமுதாயத்தின் ஒற்றுமையை யார் பிரிக்க நாடுகின்றாரோ அவர் யாராக இருந்தாலும் அவரைக் கொன்றுவிடுங்கள்” என நபி(ஸல்) கூறினார்கள். அ: அர்.ஃபஜா(ரலி), முஸ்லிம்(1852)

“அல்லாஹ் உங்களுக்கு மூன்று விஷயங்களை விரும்பு கிறான். மூன்று விஷயங்களை வெறுக்கிறான். “அவனையே நீங்கள் வணங்க வேண்டும் அவனுக்கு எதனையும் இணை வைக்கக்கூடாது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். உங்கள் காரியங்களுக்கு யாரை அல்லாஹ் பொறுப்பாக்கி இருக்கின் றானோ அவருக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்” என்று அல்லாஹ் உங்களுக்கு விரும்புகிறான். “அவர் சொன்னார், இவர் சொன்னார், அப்படிச் சொல்லப்பட்டது, இப்படிச் சொல் லப்பட்டது என்று நீங்கள் கூறுவதையும், அதிகம் கேள்வி

கேட்பதையும், பொருளை விரயம் செய்வதையும் அல்லாஹ் உங்களுக்கு வெறுக்கின்றான்” என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி),

நூல்: முஸ்லிம்(1715)

நபி(ஸல்)அவர்கள் எங்களுக்கு, உள்ளங்களை நடுங்கச் செய்து கண்களில் கண்ணீரை வரவழைக்கக்கூடிய சிறந்த போதனை செய்தார்கள். “அல்லாஹ்வின் தூதரே! இது விடை பெறுபவரின் போதனை போலுள்ளதே! எங்களுக்கு அறிவுரை கூறுங்கள்” என்றோம். உடனே நபி(ஸல்)அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்:

“இறையச்சத்தையும், அபீஸீனிய அடிமை உங்களுக்கு தலைவராக இருந்தாலும் அவரின் சொல்லைக் கேட்டு கட்டுப் பட்டு நடப்பதையும் நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன். உங்களில் எனக்குப் பிறகு வாழ்பவர்கள் ஏராளமான கருத்து வேறுபாடுகளை நிச்சயம் காண்பார்கள். அப்போது எனது வழிமுறையையும் எனது வழிமுறையை தம் கடைவாய்ப் பற்களால் பற்றிக் கொண்ட நேர்வழி பெற்ற கலீ∴பாக்களின் வழிமுறையையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.(மார்க்கக்) காரியங்களில் புதிதாக உருவாக்கப்பட்டதை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். நிச்சயமாக பித்அத்துகள் அனைத்தும் வழிகேடாகும்.

அறிவிப்பவர்: இர்பாழ் பின் ஸாரியா(ரலி)

நூல்: அபூதாவூத்(4607), திர்மிதி(2676)

**பயன்கள்:**

1. அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று ஏவப்பட்டுள்ளது.

2. கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து செல்வது பற்றி கடுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

3. கருத்து வேறுபாடு தோன்றும் போது நபி(ஸல்)அவர்களுடைய வழிமுறையைப் பற்றிப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று ஏவப்பட்டுள்ளது.

## 94. அமானிதத்தைப் பேணுதல்

வானங்கள், பூமி மற்றும் மலைகளுக்கு இந்த அமானிதத்தை நாம் முன் வைத்தோம். அதைச் சுமக்க அஞ்சி அவை மறுத்துவிட்டன. மனிதன் அதைச் சுமந்து கொண்டான். அவன் அநீதியிழைப்பவனாகவும் அறியாதவனாகவும் இருக்கின்றான். (33:72) "அமானிதங்களை அவற்றிற்குரியவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என்று அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்." (4:58)

வலிமையானவரும் நம்பகமானவருமே நீங்கள் பணியில் அமர்த்துவதற்கு மிகவும் சிறந்தவராவார்.(28:26)

அவர்கள் தமது அமானிதங்களையும் ஒப்பந்தத்தையும் பேணுவார்கள்.(70:32)

ஒரு அவையில் நபி(ஸல்)அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தபோது ஒரு கிராமவாசி வந்து "கியாமத் நாள் எப்போது வரும்?" என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள் தமது அறிவுரையைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். இறுதியில் தமது பேச்சை முடித்ததும், "கியாமத் நாளைப் பற்றிக் கேட்டவர் எங்கே?" எனக் கேட்டார்கள். அதற்கு அம்மனிதர், "அல்லாஹ்வின் தூதரே! இதோ நான் தான்" எனக் கூறினார். "நாணயம் பாழ்படுத்கப்படும்போது

அந்த நாளை எதிர்பார்” என்று நபி (ஸல்) கூறினார்கள். உடனே அவர், “நாணயம் எவ்வாறு பாழ்படுத்தப்படும்?” என்று வினவினார். அதற்கு நபியவர்கள், “தகுதியற்றவர்களிடம் ஒரு காரியம் ஒப்படைக்கப்படும்போது அந்த நாளை எதிர்பார்” என்று விடையளித்தார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: புகாரி(59)

நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தும்போது, “நாணயமில்லாதவனிடத்தில் ஈமான் இல்லை. ஒப்பந்தங்களை பேணாதவனிடத்தில் மார்க்கம் இல்லை” என்று சொல்லாமல் இருப்பது மிகக் குறைவு. அறிவிப்பவர்: அனஸ்(ரலி), நூல்: அஹ்மத்(11975)

**பயன்கள்:**

1. அமானிதம் மிக முக்கியமானது. அதைப் பேணும்படி கட்டளையிடப்பட்டுள்ளது.
2. அமானிதத்தைப் பேணிப் பாதுகாப்பது வெற்றி பெறக் கூடிய முஃமின்களின் பண்பாகும்.
3. அமானிதத்தை அதற்குரியவர்களிடம் ஒப்படைக்குமாறு ஏவப்பட்டுள்ளது.
4. அமானிதம் பேணாதவனிடம் ஈமானில்லை.

## 95. அழைப்புப் பணியின் சிறப்பு

அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்து, நற்செயல் புரிந்து, நான் அல்லாஹ்வுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தவர்களில் (முஸ்லிம்களில்) ஒருவனென்று கூறியவரை விட அழகிய சொல்லைக் கூறுபவர் யார்? (41:33)

(நபியே!)விவேகத்துடனும் அழகிய அறிவுரைகள் மூலமும் உம் இறைவனின் பாதையின் பக்கம் அழைப்பீராக!(16:125)

(நபியே!) நீர் கூறும்: இதுவே எனது பாதை. நான் நானும் என்னைப் பின்பற்றியோரும் தெளிவான விளக்கத்தில் இருந்து கொண்டு அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறோம். (12:108)

கைபர் போரின்போது அலீ(ரலி)அவர்களிடம் நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "அவசரப்படாமல் அவர்களின் பகுதியை அடையும் வரை மெதுவாகச் செல். பிறகு அவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பீராக! பிறகு அல்லாஹ்வுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லும். அல்லாஹ்வின் மீது ஆணையாக உன் மூலம் அல்லாஹ் ஒரே ஒரு மனிதருக்கு நேர்வழி காட்டுவது சிவந்த ஒட்டகங்கள் உனக்கு இருப்பதை விடச் சிறந்ததாகும்." அறிவிப்பவர்: ஸஹ்ல் பின் ஸஃத்(ரலி),

நூல்: புகாரி(3701), முஸ்லிம்(2406)

"யாரேனும் நேர்வழியின் பால் அழைத்தால் அதைப் பின்பற்றியோருக்குக் கிடைக்கும் கூலியைப்போல் அவருக்கும் உண்டு. பின்பற்றியவர்களின் கூலியில் எதுவும் இதன் காரண மாகக் குறைந்து விடாது. யாரேனும் வழிகேட்டின் பால் அழைத்தால் அதைப் பின்பற்றியவர்களுக்குரிய பாவம்போல் அவருக்கும் உண்டு. பின்பற்றியவர்களின் பாவத்தில் எதுவும் இதனால் குறையாது" என நபி(ஸல்)கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), நூல்: முஸ்லிம்(2674)

**பயன்கள்:**

1. அல்லாஹ்வின் பால் அழைப்பது சிறப்பானது.

2. எவரின் மூலம் அல்லாஹ் ஒருவருக்கு நேர்வழி காட்டு கிறானோ அவருக்கு மகத்தான கூலியுண்டு.

3. யாரேனும் நன்மையின் பால் மக்களை அழைத்தால் அதை பின்பற்றியவர்களின் கூலிபோன்று அவருக்கும் உண்டு.

## 96. வரம்பு மீறிப் புகழ்தல்

நபி(ஸல்)அவர்களின் முன்னிலையில் ஒருவர் இன்னொரு வரைப் புகழ்ந்தபோது நபி(ஸல்)அவர்கள், "நீ நாசமாகப்போ! "உன் நண்பரை நீ கொன்று விட்டாய்! உன் நண்பரை நீ கொன்று விட்டாய்!" என பலமுறைக் கூறிவிட்டு, உங்களில் யாரும் தன் நண்பரைப் புகழ்ந்துதான் ஆகவேண்டுமென்றால், அந்தத் தகுதி அவருக்கு இருப்பதாக அவர் அறிந்தால் "நான் இன்னாரை இன்ன இன்னவாகக் கருதுகிறேன். அல்லாஹ் தான் அவரை நன்கு அறிந்திருப்பவன். அல்லாஹ்வை விட யாரையும் தூய்மையானவர் என நான் கூறமாட்டேன்" என்று கூறட்டும்" எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூபக்ர்(ரலி)

நூல்: புகாரி(6061),முஸ்லிம்(3000)

ஒரு மனிதர் ஒன்னொரு மனிதரை வரம்பு மீறிப் புகழ்ந்து கொண்டிருந்ததை நபி(ஸல்)அவர்கள் கேட்டதும் "நீங்கள் அவரை நாசமாக்கிவிட்டீர்கள்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூமூஸா(ரலி), நூல்: முஸ்லிம்(3001)

"புகழ்பாடுபவர்களின் முகத்தில் மண்ணைப் போடுமாறு" நபி(ஸல்)அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

அறிவிப்பவர்: மிக்தாத்(ரலி), நூல்: முஸ்லிம்(3002)

**பயன்கள்:**

1. வரம்பு மீறிப் புகழ்வது தடை செய்யப்பட்டுள்ளது.

2. ஒருவரைப் புகழ்பவர் அவரிடம் வெளிப்படையாகக் காணப்படுபவற்றைக் கொண்டே புகழ வேண்டும். அதாவது

"நான் அவரை இன்ன இன்னவாக கருதுகிறேன். அல்லாஹ்வே அவரை நன்கு அறிந்திருப்பவன்" என்று கூற வேண்டும்.

3. புகழ்பாடுபவர்களின் முகத்தில் மண்ணைத் தூவுமாறு ஏவப்பட்டுள்ளது.

## 97. இசை

அல்லாஹ்வின் பாதையைக் கேலியாகக் கருதி அதை விட்டும் மக்களை அறிவின்றி வழிகெடுப்பதற்காக வீணாண செய்திகளை விலைக்கு வாங்குவோர் மனிதர்களிலுள்ளனர். அவர்களுக்கே இழிவுபடுத்தும் வேதனை உள்ளது. (31:6)

"எனது சமுதாயத்தில் சில மக்கள் தோன்றுவார்கள். அவர்கள் விபச்சாரம், பட்டு, மது, இசை ஆகியவற்றை அனுமதி எனக் எனக் கருதுவார்கள். அதுபோல சில மக்கள் ஒரு உயரமான மலைக்குப் பக்கத்தில் தங்குவார்கள். இடையன் அவர்களுடைய கால்நடைகளை மாலையில் அவர்களிடம் ஓட்டி வருவான். அந்த ஏழை தனது தேவையைக் கேட்டு அவர்களிடம் வருவான். அதற்கவர்கள் "நாளை வா" என்று கூறி (காலங்கடத்தி) விடுவார்கள். அல்லாஹ் அவர்கள் (சிலர்) மீது மலையை விழச் செய்து இரவோடிரவாக அவர்களை அழித்துவிடுவான். எஞ்சியிருப் பவர்களை கியாமத் நாள் வரை குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றிவிடுவான்" என நபி(ஸல்)அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்.

அறிவிப்பவர்: அபூமாலிக்(ரலி), புகாரி(5591)

**பயன்கள்:**

1. இசை விலக்கப்பட்டதாகும். மேலும் அது, தடை செய்யப் பட்ட கேளிக்கையைச் சார்ந்ததாகும்.

2. இச்சமுதாயத்தில் சிலர், ஆகுமாக்கிக் கொள்ளக்கூடிய விஷயங்களில் இசையும் ஒன்றாகும்.

## 98. துல்ஹஜ் பத்து நாட்களின் சிறப்பும் சில சட்டங்களும்

“இந்தப் பத்து நாட்கள் நல்லறங்கள் செய்வது ஏனைய நாட்களில் செய்வதை விட அல்லாஹ்வுக்கு விருப்பமானது” என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அப்போது தோழர்கள், “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவுமா?” எனக் கேட்டனர். அதற்கு நபியவர்கள், “அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவும் தான். ஆயினும் தன் உயிருடனும் பொருளுடனும் புறப்பட்டுச் சென்று அவ்விரண்டில் எதையும் திரும்பக் கொண்டு வராத மனிதரைத் தவிர” என்று கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி)

நூல்: புகாரி(969), திர்மிதி(757), அபூதாவூத்(2438)

“துல்ஹஜ் பத்து நாட்கள் வந்து விட்டால் உங்களில் யாரேனும் குர்பானி கொடுக்க நாடினால் அவர் தன்னுடைய முடி மற்றும் தன் உடம்பிலுள்ள எதையும் நீக்க வேண்டாம்” என நபி(ஸல்)கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில் “தனது நகங்கள், முடிகளைக்களைய வேண்டாம்” என்றுள்ளது.

அறிவிப்பவர்: உம்முஸலமா(ரலி), நூல்: முஸ்லிம்(1977)

**பயன்கள்:**

1. இந்தப் பத்து நாட்களுக்கு சிறப்புண்டு.
2. இந்நாட்களில் அதிகமதிகம் நல்ல அமல்கள் செய்வது விரும்பத்தக்கதாகும்.

3. குர்பானி கொடுக்க விரும்புபவர் துல்ஹஜ்ஜின் பத்து நாட்கள் வந்துவிட்டால் தனது முடி, நகங்களில் எதனையும் அகற்றக் கூடாது.

## 99. அல்லாஹ்வின் மகத்துவமும் அவன் ஆட்சியின் விசாலமும்

“என் அடியார்களே! எனக்கு நானே அநியாயம் செய்வதை தடை செய்துள்ளேன். இதனை உங்களுக்கிடையேயும் தடை செய்யப்பட்டதாக ஆக்கியுள்ளேன். எனவே நீங்கள் ஒருவர் மற்றவருக்கு அநீதியிழைக்காதீர்கள். என் அடியார்களே! என்னால் நேர்வழிகாட்டப்பட்டவர்களைத் தவிர நீங்கள் அனைவரும் வழிதவறியவர்களே! எனவே என்னிடம் நேர் வழியைக் கேளுங்கள். நான் உங்களுக்கு நேர்வழி காட்டு கிறேன். என் அடியார்களே! என்னால் உணவளிக்கப் பட்டோரைத் தவிர நீங்கள் அனைவரும் பசியோடு இருப்ப வர்களே! எனவே என்னிடம் உணவு தேடுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கிறேன். என் அடியார்களே! என்னால் ஆடை வழங்கப்பட்டோரைத் தவிர நீங்களனைவரும் ஆடை இல்லாதவர்களே! எனவே என்னிடம் ஆடைகேளுங்கள். நான் உங்களுக்கு ஆடை வழங்குகிறேன்.

எனது அடியார்களே! நீங்கள் இரவிலும் பகலிலும் பாவம் செய்கின்றீர்கள். நான் அனைத்துப் பாவங்களையும் மன்னிக் கின்றேன். எனவே என்னிடம் மன்னிப்புக் கேளுங்கள். நான் உங்களை மன்னிக்கிறேன். என் அடியார்களே! எனக்கு தீங்கு செய்வதற்கு நீங்கள் எவ்வளவுதான் முயன்றாலும் உங்களால் எனக்குத் தீங்கு செய்திட முடியாது.மேலும் எனக்கு நன்மை

செய்வதற்கு எவ்வளவுதான் நீங்கள் முயன்றாலும் உங்களால் எனக்கு நன்மை செய்திட முடியாது.

என் அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும் உங்களுக்குப் பின்னால் வருபவர்களும் உங்களில் மனிதர்கள், ஜின்கள் ஆகிய நீங்கள் அனைவரும் என்னை வணங்குவதில் எத்துணை நல்லவர்களாக இருந்து உள்ளச் சத்துடனும் பயபக்தியுடனும் என்னை வணங்கினாலும் அது எந்த விதத்திலும் எனது ஆட்சியின் எல்லையை விரிவடையச் செய்துவிடாது. என் அடியார்களே! உங்களுக்கு முன் சென்ற வர்களும் உங்களுக்குப் பின்னால் வருபவர்களும் உங்களில் மனிதர்கள், ஜின்கள் ஆகிய நீங்கள் அனைவரும் எத்துணை கெட்டவர்களாக இருந்து தீமைகள் செய்தாலும் அது எனது ஆட்சியின் எல்லையை எள்ளளவும் குறைத்து விடாது.

என் அடியார்களே! உங்களுக்கு முன் சென்றவர்களும் உங்களுக்குப் பின்னால் வருபவர்களும் உங்களில் மனிதர் களும், ஜின்களும் ஒரே இடத்தில் கூடி நின்று என்னிடம் தாம் விரும்பியதைக் கேட்டு அவர்கள் கேட்டதையெல்லாம் நான் நிறைவேற்றினாலும் அது என்னிடம் இருப்பதைக் குறைத்து விடாது. என்றாலும் ஒரு ஊசி முனையைக் கடலில் முக்கி எடுப்பதால் ஏற்படும் அளவைத் தவிர. என் அடியார்களே! உங்கள் செயல்களைக் கொண்டே உங்களை நான் கணிக் கின்றேன். அவைகளை வைத்தே உங்களுக்கு நான் கூலியும் கொடுக்கின்றேன். ஆகவே உங்களில் நல்லதைக் காண்ப வர்கள் அல்லாஹ்வைப் புகழட்டும். அது அல்லாததைக் காண்பவர்கள் தன்னைத் தவிர வேறு எவரையும் குறை கூற

வேண்டாம்” என அல்லாஹ் கூறுவதாக நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: முஸ்லிம்(2577)

**பயன்கள்:**

1. அல்லாஹ்வின் மகத்துவமும் அவனது விசாலமான ஆட்சியும் விவரிக்கப்பட்டுள்ளது.

2. அவனது வல்லமை, அவனது ஆற்றல் மற்றும் படைப் பினங்களை விட்டும் அவன் தேவையற்றிருப்பதன் பூரணத் துவம் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

3. நேர்வழிக்கும், வாழ்க்கை ஆதாரத்திற்கும், மன்னிப் புக்கும் படைப்பினங்கள் அவன் பால் மிகுந்த தேவையுடை யோராக இருக்கின்றார்கள்.

## 100. அதிகம் சிரித்தல்

“அதிகமாக சிரிக்காதீர். அதிகம் சிரிப்பது இதயத்தை சாகடித்து விடும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி), இப்னுமாஜா(4193)

நபி(ஸல்)அவர்கள் தம் கடவாய்ப் பற்கள் தெரியும் அளவுக்கு சப்தமிட்டு சிரித்ததை நான் பார்த்ததில்லை. அவர்கள் புன்சிரிப்பே சிரித்துள்ளார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி), நூல்: புகாரி(6092)

“உன் சகோதரனின் முகத்தைப் பார்த்து புன்னகை புரிவது உனக்கு நல்லறமாகும். நீ நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் உனக்கு நல்லறமாகும். பாதை தவறிய மனிதருக்குப் பாதையைக் காட்டுவதும் உனக்கு நல்லறம் ஆகும். பார்வை இழந்தவருக்குப் பார்வையாக நீ ஆவதும் உனக்கு நல்லறமாகும். பாதையில் கிடக்கும் கல், முள்,

எலும்பு போன்றவற்றை நீ அகற்றுவதும் உனக்கு நல்லற மாகும். உனது வாளியில் உள்ள தண்ணீரை உன் சகோத ரனின் வாளியில் நீ ஊற்றுவதும் உனக்கு நல்லறமே" என்று நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூதர்(ரலி), நூல்: திர்மிதி(1956)

**பயன்கள்:**

1. அதிகம் சிரிப்பது தடுக்கப்பட்டுள்ளது.
2. அது இதயம் பாழாகிவிடுவதற்குக் காரணமாகிவிடும்.
3. அது நபி(ஸல்)அவர்கள் காட்டிய வழியுமல்ல.